**கவனிக்க.-** 2025.10.31 ஆந் திகதிய 2461 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2462 - 2025 නොවැම්බර් මස 07 වැනි සිකුරාදා - 2025.11.07

2462 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2064 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2081 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2061 - B 82735- 403 (2025/11)

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடுத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச்சேவை ஆணைக்குழு

### நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் பிரதிப் பணிப்பாளர் (விசாரணைகள்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் (திறந்த) - 2025

நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் பிரதிப் பணிப்பாளர் தரம் III பதவிக்காக உள்ள 02 வெற்றிடங்களுக்கான தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான தகுதியான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

01. **பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் விதம்:**

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை குழுவின் மூலம் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் வழங் கப்படும் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

02. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்:**

2.1. இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித் துடையதுமாகும். ஆனால் நியமனம் பெறுபவர் களுக்கான ஓய்வூதிய முறை தொடர்பில் அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்குக் கட்டுப்படல் வேண்டும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

2.2. இப்பதவிக்கு நியமனம் பெறுகின்ற உத்தி யோகத்தர்கள் மூன்று வருட (03) நன்னடத்தைக் காலத்துக்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன் அந்த மூன்று வருட (03) காலத்தினுள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

2.3. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைக்கு அமைய உரிய மட்டத்திற்கான மொழி தொடர்பான தகுதி களை அடைய வேண்டும்.

2.4. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதிப்பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் என்பவற்றிற்கு இந்நியமனம் உட்பட்டதாக இருக்கும்.

2.5. ஒழுக்காற்று நடவடிக்கை பெற்று இருத்தலாகாது.

03. **சம்பள அளவுத்திட்டம்** :

25.03.2025 ஆந் திகதிய 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் I உப பிரிவுக்கு ஏற்ப இப்பதவியின் மாதாந்த சம்பள அளவுத் திட்டமானது ரூபா 82,510 - 10 x 2400 - 8 x 2940 - 17 x 3900 - ரூபா 195970.00 (SL-1-2025) ஆகும்.

அத்துடன்சம்பளம்வழங்கப்படுவது அச்சுற்றறிக்கையின் விதிமுறைகளுக்கு ஏற்ப அதன் II உப பிரிவில் குறிப் பிடப்பட்டுள்ளவாறு ஆகும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசினால் காலத் துக்குக் காலம் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித் தாகும்.

04. **ஆட்சேர்ப்புக்கான தகுதிகள் :**

4.1. உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியபிரமாணம் செய்திருத்தல்.

4.2. **அனுபவம் :**

சட்டத்தரணியாக 06 மாத கால செயற்பாட்டு ரீதியிலான அனுபவத்தை பெற்றிருத்தல்.

4.3. **வயதெல்லை :**

விண்ணப்ப முடிவுத் திகதியன்று 28 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டும்.

4.4. **உடற்தகைமைகள்:**

அனைத்து விண்ணப்பதாரிகளும் பதவியின் கடமை யினை நிறைவேற்றுவதற்கான சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

4.5. **ஏனைய தகைமைகள்:**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை உள்ள வராக இருத்தல் வேண்டும்.

III . விண்ணப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் சகல விதங்களிலும் தகைமை களை பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

05. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறு பேற்றின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

புள்ளிகள் வழங்கப்படும் விதம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| | பரீட்சைப் புள்ளிகள் வழங்கப்படும் விடயங்கள் | புள்ளிகள் வீதம் | சித்தியடைய தேவையான அதிகுறைந்த புள்ளிமட்டம் |
|---|---|---|---|
| 01 | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | அதிகூடிய புள்ளிகளை பெற்றவர்கள் மத்தியில் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். |
| 02 | மேலதிக தொழிற் தகைமைகள் | 10 | |
| 03 | மேலதிக அனுபவம் | 20 | |
| 04 | கணினி அறிவு/ கணினி உபயோகிக்கும் ஆற்றல் | 15 | |
| 05 | மொழித்திறன்/ மொழித் தேர்ச்சி | 15 | |
| 06 | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 20 | |
| **மொத்தப் புள்ளி** | | **100** | |

06. **விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பப்படிவம் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் அமைய வேண்டும் என்பதுடன் A4 கடதாசியில் தயாரிக்கப்பட வேண்டும். எல்லா விடயங்களும் தெளிவாக பூரணப்படுத்தபடல் வேண்டும். சகல விதங்களிலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

07. **விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல் :**

இவ் அறிவித்தலில் கடைசியில் இருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 03.12.2025 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவும்.

செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம்,
த.பெ.இ. 573,
புதுக்கடை,
கொழும்பு.

08. விண்ணப்ப முடிவுத் திகதி 03.12.2025 ஆகும். உரிய தினத்திற்குள் தகைமைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.

09. தற்போது அரசாங்க சேவையில் (திணைக்கள/கூட்டுத் தாபனம்/சபை/சிவில் நிறுவனங்கள்) பணிபுரியும் உத்தி யோகத்தர்கள், தெரிவு செய்யபடுமிடத்து அவர்களை விடுவிக்க முடியும் என்ற அத்தாட்சியுடன் நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பப்படிவத்தை அனுப்ப வேண்டும்.

10. விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதிப் பணிப்பாளர் (விசாரணைகள்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" என்று தெளிவாக குறிப்பிட வேண்டும்.

(சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளி யிடப்படுகின்ற இவ்வறிவித்தலில் மொழிகளுக் கிடையில் ஏதாவது இணக்கப்பாடின்மை காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலே சரியானதாக கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.)

11. நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

பிரசன்ன அல்விஸ்,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு - 12,
2025, ஒற்றோபர் 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

காரியாலயத்தின் உபயோகத்துக்காக [ ]

**நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் பிரதிப் பணிப்பாளர் (விசாரணைகள்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் (திறந்த) - 2025**

01. தனிப்பட்ட தகவல்கள்:

1.1. முழுப்பெயர் (தமிழ்): ………………………………… ………………………..........................................

1.2. முழுப்பெயர் (ஆங்கிலம்) :………………………… ………………………...........................................

1.3. பெயர் முதல் எழுத்துக்களுடன் (தமிழ்): ………………………………………………............

1.4. பெயர் முதல் எழுத்துக்களுடன் (ஆங்கிலம்) : ……………………………………………….............

1.5. நிரந்தர முகவரி (தமிழ்) : ………………………… ……………………………………………………… ……………………………………………….

1.6. நிரந்தர முகவரி (ஆங்கிலம்): …………………… ……………………………………………………… ………………………………………………………

1.7. பால் (பெண்/ஆண்) : ………………………………

1.8. விவாகமானவர்/ விவாகமாகாதவர்: ……………… ………………………………………......................

1.9. தேசிய ஆளடையாள அட்டை இல.: ...…………… ……...............................................................

1.10. பிறந்த திகதி:

ஆண்டு :………… மாதம் :……...……………
திகதி :………..

1.11. விண்ணப்ப இறுதித் திகதிக்கு வயது:

வருடங்கள்:…….. மாதங்கள்:………
நாட்கள்:……….

1.12. தொலைபேசி இலக்கம் :

(நிரந்தரமானது) : ……………………
கையடக்கம் :………………..

1.13. மின்னஞ்சல் முகவரி : ……………………………
…………………………………………….................

02. தற்போது வகிக்கும் பதவி சம்பந்தமான தகவல்கள்: (இருப்பின்)

2.1. தற்போது வகிக்கும் பதவி : ………………………
…………………………………………….................

2.2. நியமனத் திகதி : …………………………………
…………………………………………….................

2.3. நியமனத்தின் வகை (நிரந்தரம், தகுதிகாண் நிலை) : ……………………………………..........

03. கல்வித் தகைமைகள்: (தகைமைகளை சான்றுப் படுத்துவதற்காக குறித்த ஆவணங்களின் பிரதிகளை இணைக்கவும்)

3.1. உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம்செய்த திகதி :……………………..….

3.2. செயற்பாட்டுரீதியிலானதொழிலில்ஈடுபட்டுள்ள காலம் :…………………..………………..

04. தொழிற் தகைமைகள் : ……………………………………
…………………………………….................................

05. வேறு தகைமைகள் : ………………………………………
……………………………………

06. பிரத்தியேக தகவல்களை விசாரிக்கக்கூடியவர்கள்:

6.1.1. பெயர் :………..…………………………………
……...............……………………………………..

6.1.2. முகவரி :…......………………………………….
………………….........…..………………………

6.1.3. தொழில்:……………………………………………
……………………….........……………………..

6.1.4. உங்களை அறிந்துள்ள காலம் :…………………
…………………………………………….................

6.1.1. பெயர்:……………………………………………
…...............……………………………………..

6.1.2. முகவரி :……......…………………………….
………………….........…..………………………

6.1.3. தொழில்:….......…………………………………
……………………………….......………………..

6.1.4. உங்களை அறிந்துள்ள காலம் :…………………
…………………………..........……………..

07. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

மேற்படி விபரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப உண்மையானவை என்பதையும், இங்கு குறிப்படப்பட்ட விபரங்கள் பொய்யானவை எனின் நேர்முகப் பரீட்சைக்கு முன்னரோ, நேர்முகப் பரீட்சையிலோ அல்லது அதன் பின்னரோ எனது அபேட்சகர் தன்மையை இல்லாமல் செய்யக்கூடிய ஏதேனும் தீர்மானத்திற்கு நான் உடன்படுகிறேன்.

……...…………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ………………….

08. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதி செய்தல்:

இந்த விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு./ திருமதி/செல்வி …………………......……...... ஐ நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் …………………………… திகதி அவர் கையொப்பமிட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

………………………………………….........
கையொப்பத்தை உறுதி செய்யும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி:…………………………………
அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின்
முழுப் பெயர்:…………………………………………
பதவி:……………………….
முகவரி:…………………….
(பதவி முத்திரை இடவும்)

09. திணைக்களத் தலைவரின் உறுதியுரை :

திரு./திருமதி/செல்வி …………………….......………
இன் விண்ணப்பத்தை முன்வைக்கின்றேன். அவர் இத்திணைக்களத்தில்/அமைச்சில் நிரந்தரமாக சேவை யாற்றுபவர் என்றும், இப்பதவிக்குரிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்றும், அவருக்கு எதிராக

ஒழுக்காற்று நடவடிக்கை இருக்கிறது/ இருக்கவில்லை என்றும் அவர் அப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் தெரிவிக்கின்றேன்.

……………………………………….........
திணைக்களத் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி:…………………………………
அத்தாட்சிபடுத்தும் உத்தியோகத்தரின்
முழுப் பெயர்:…………………………………………
பதவி:……………………….
முகவரி:……………………..
(பதவி முத்திரை இடவும்)

11-105/1

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

## நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் விசாரணை அதிகாரி தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் (திறந்த) - 2025

நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் விசாரணை அதிகாரி தரம் II பதவிக்காக உள்ள 01 வெற்றிடத்திற்கு தகுதியானவரை தெரிவு செய்வதற்கான தகுதியான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

01. **பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யும் விதம்:**

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலம் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் வழங் கப்படும் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப் படுவர்.

02. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்:**

2.1. இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித் துடையதுமாகும். ஆனால் நியமனம் பெறுபவர் களுக்கான ஓய்வூதிய முறை தொடர்பில் அரசினால் எதிர்காலங்களில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு கட்டுப்படல் வேண்டும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

2.2. இப்பதவிக்கு நியமனம் பெறுகின்ற உத்தியோகத் தர்கள் மூன்று வருட (03) நன்னடத்தைக் காலத்துக்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன் அந்த மூன்று வருட (03) காலத்தினுள் முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

2.3. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைக்கு அமைய உரிய மட்டத்திற்கான மொழி தொடர்பான தகுதிகளை அடைய வேண்டும்.

2.4. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதிப் பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் என்பவற்றிற்கு இந்நியமனம் உட்பட்டதாக இருக்கும்.

2.5. ஒழுக்காற்று நடவடிக்கை பெற்று இருக்கலாகாது.

03. **சம்பள அளவுத்திட்டம் :**

25.03.2025 ஆந் திகதிய 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் I உப பிரிவுக்கு ஏற்ப இப் பதவியின் மாதாந்த சம்பள அளவுத் திட்டமானது ரூபா 58660- 10x1190- 11x1360- 15x1670- ரூபா 110,570.00 (MN-5-2025) ஆகும்.

அத்துடன் சம்பளம் வழங்கப்படுவது அச் சுற்றறிக் கையின் விதிமுறைகளுக்கு ஏற்ப அதன் II உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசினால் காலத் திற்குக் காலம் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித் தாகும்.

04. **ஆட்சேர்ப்புக்கான தகுதிகள் :**

4.1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு வினால் பட்டமளிக்கப்படுகின்ற நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் பெறப் பட்ட சட்டம் தொடர்பான பட்டம்/ குற்றவியல் தொடர்பான பட்டம்/ சமூகவியல் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல்.

4.2. **அனுபவம் :**

ஒரு (01) வருட கால தொழில் ரீதியிலான அனுப வத்தைப் பெற்றிருத்தல்.

4.3. **வயதெல்லை :**

விண்ணப்ப முடிவுத் திகதியன்று 28 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டும்.

4.4. **உடற்தகைமைகள்:**

அனைத்து விண்ணப்பதாரிகளும் பதவியின் கடைமையினை நிறைவேற்றுவதற்கான சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

4.5. **ஏனைய தகைமைகள்:**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை உள்ள வராக இருத்தல் வேன்டும்.

III. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் சகல விதங்களிலும் தகைமை களை பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

05. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறு பேற்றின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். புள்ளிகள் வழங்கப்படும் விதம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| | பரீட்சைப் புள்ளிகள் வழங்கப்படும் விடயங்கள் | புள்ளிகள் வீதம் | சித்தியடைய தேவையான அதிகுறைந்த புள்ளிமட்டம் |
|---|---|---|---|
| 01 | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | அதிகூடிய புள்ளிகளை பெற்றவர்கள் மத்தியில் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். |
| 02 | மேலதிக தொழிற் தகைமைகள் | 10 | |
| 03 | மேலதிக அனுபவம் | 20 | |
| 04 | கணினி அறிவு/ கணினி உபயோகிக்கும் ஆற்றல் | 15 | |
| 05 | மொழித்திறன்/ மொழித் தேர்ச்சி | 15 | |
| 06 | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 20 | |
| **மொத்தப் புள்ளி** | | **100** | |

06. **விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பப்படிவம் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அமைய வேண்டும் என்பதுடன் A4 கடதாசியில் தயாரிக்கப்பட வேண்டும். எல்லா விடயங்களும் தெளிவாக பூரணப்படுத்தப்படல் வேண்டும். சகல விதங்களிலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

07. **விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல்:**

இவ் அறிவித்தலில் கடைசியில் இருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 03.12.2025 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவும்.

செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம்,
த.பெ.இ. 573,
புதுக்கடை,
கொழும்பு.

08. விண்ணப்ப முடிவுத் திகதி 03.12.2025 ஆகும். உரிய தினத்திற்குள் தகைமைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.

09. தற்போது அரசாங்க சேவையில் (திணைக்கள/கூட்டுத் தாபனம்/சபை/சிவில் நிறுவனங்கள்) பணிபுரியும் உத்தி யோகத்தர்கள், தெரிவு செய்யப்படுமிடத்து அவரை விடுவிக்க முடியும் என்ற அத்தாட்சியுடன் நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பப்படிவத்தை அனுப்ப வேண்டும்.

10. விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விசாரணை அதிகாரி தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" என்று தெளிவாக குறிப்பிட வேண்டும்.

(சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளி யிடப்படுகின்ற இவ்வறிவித்தலில் மொழிகளுக் கிடையில் ஏதாவது இணக்கப்பாடின்மை காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலே சரியானதாக கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.)

11. நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

பிரசன்ன அல்விஸ்,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு - 12,
2025, ஒற்றோபர் மாதம் 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

காரியாலயத்தின் உபயோகத்திற்காக

**நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் விசாரணை அதிகாரி தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் (திறந்த) - 2025**

01. தனிப்பட்ட தகவல்கள்:

1.1. முழுப்பெயர் (தமிழ்) : ……………………………………………………………………………

1.2. முழுப்பெயர் (ஆங்கிலம்) :……………………………………………………………………………

1.3. பெயர் முதல் எழுத்துக்களுடன் (தமிழ்) : ……………………………………………………………

1.4. பெயர் முதல் எழுத்துக்களுடன் (ஆங்கிலம்) : …… …………… ……………………………………

1.5. நிரந்தர முகவரி (தமிழ்) : ……………………………………………………………………………………………………………………………………

1.6. நிரந்தர முகவரி (ஆங்கிலம்) :……………………………………………………………………………………………………………………………………

1.7. பால் (ஆண்/பெண்) : ………………… …………… …… ……… ………………………………

1.8. விவாகமானவர்/விவாகமாகாதவர் : ………………………………………………………………

1.9. தேசிய ஆளடையாள அட்டை இல. : …………………………………………………………

1.10. பிறந்த திகதி: வருடம் :……………… மாதம் : …………………. திகதி :………………..

1.11. விண்ணப்ப முடிவுத் திகதிக்கு வயது: வருடங்கள் : …….. மாதங்கள் : ……… நாட்கள் : ……….

1.12. தொலைபேசி இலக்கம் :

(நிரந்தரமானது) : ……………………
கையடக்கம் :………………..

1.13. மின்னஞ்சல் முகவரி :……………………………………………………………………

02. தற்போது வகிக்கும் பதவி சம்பந்தமான தகவல்கள்: (இருப்பின்)

2.1. தற்போது வகிக்கும் பதவி : ……… ………………………………………………………

2.2. நியமனத்திகதி : ………………… …………………………………………………

2.3. நியமனத்தின் வகை(நிரந்தரம், தகுதி காண் நிலை) : … …………………………………..

03. கல்வித் தகைமைகள்: (தகைமைகளை சான்றுப்படுத்துவதற்காக குறித்த ஆவணங்களின் பிரதிகளை இணைக்கவும்)

| *தொடர் இல.* | *பட்டம்* | *பல்கலைக்கழகம்* | *பட்டம் பெற்ற திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

04. வேறு கல்வித் தகைமைகள்:

| *தொடர் இல.* | *தகைமை* | *நிறுவனம்* | *தகைமை பெற்ற திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

05. தொழிற் தகைமைகள்

| *தொடர் இல.* | *தகைமை* | *நிறுவனம்* | *தகைமை பெற்ற திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

06. வேறு தகைமைகள் :………………………………………………………………………………

07. பிரத்தியேக தகவல்களை விசாரிக்கக்கூடியவர்கள்:

7.1.1. பெயர் :………………………………………………………………………………

7.1.2. முகவரி :………………………………………………………………………………

7.1.3. தொழில் :………………………………………………………………………………

7.1.4. உங்களை அறிந்துள்ள காலம் :…………………………………………………………

7.2.1. பெயர்: ………………………………………………………………………………

7.2.2. முகவரி: ………………………………………… ………….............…………………………………

7.2.3. தொழில்: ………………………………………… ……….............………………………………….

7.2.4. உங்களை அறிந்துள்ள காலம் : ………………… ……………..............……………………….............

08. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

மேற்படி விபரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப உண்மையானவை என்பதையும், இங்கு குறிப்படப்பட்ட விபரங்கள் பொய்யானவை எனின் நேர்முகப் பரீட்சைக்கு முன்னரோ, நேர்முகப் பரீட்சையிலோ அல்லது அதன் பின்னரோ எனது அபேட்சகர் தன்மையை இல்லாமல் செய்யக் கூடிய ஏதேனும் தீர்மானத்திற்கு நான் உடன்படுகிறேன்.

……...…………………………….
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ………………

09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதி செய்தல்:

இந்த விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் திரு./ திருமதி /செல்வி ……….........…………….......... ஐ நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் …………………………… திகதி அவர் கையொப்பமிட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

…………………………………….........
கையொப்பத்தை உறுதி செய்யும்
உத்தியோகத்தரின் கையொப்பம்

திகதி:…………………………………
அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின்
முழுப் பெயர்:…………………………………………
பதவி:……………………….
முகவரி:…………………….
(பதவி முத்திரை இடவும்)

10. திணைக்களத் தலைவரின் உறுதியுரை :

திரு./திருமதி/செல்வி ……………………......…………… இன் விண்ணப்பத்தை முன்வைக் கின்றேன். அவர் இத்திணைக்களத்தில் / அமைச்சில் நிரந்தரமாக சேவை யாற்றுபவர் என்றும், இப்பதவிக் குரிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்றும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை இருக்கிறது/ இருக்கவில்லை என்றும் அவர் அப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் தெரிவிக்கின்றேன்.

…………………………………….........
திணைக்களத் தலைவர் அல்லது
அதிகாரம் அளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்

திகதி:…………………………………
அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின்
முழுப் பெயர்:…………………………………………
பதவி:……………………….
முகவரி:…………………….
(பதவி முத்திரை இடவும்)

11-105/2

---

## இலங்கை விமானப்படை

### இலங்கை நிரந்தர மற்றும் தொண்டர் விமானப் படை வீரர் / வீராங்கனைகளுக்கான நேரடி ஆட்சேர்ப்புக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர/தொண்டர் விமானப் படையில் கீழே தரப் பட்டுள்ள தொழில் துறைகளில், விமானப்படை வீரர் /வீராங் கனைகளுக்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அடிப்படைக் கல்வித் தகைமைகள் :**

2. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் பாடத்தில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள் இருத்தல் வேண்டும்.

3. குறிப்பிடப்பட்ட துறைகளுக்காக தேவைப்படும் தகை மைகள் கீழ்வருமாறு :

அ. **மின்னணுவியலும் தொலைத்தொடர்பும் பொறி யியல் துறை - நிரந்தர**

(1) தொலைபேசி ஆபரேட்டர் (ஆண்/பெண்)
(2) வானொலி தொடர்பு (ஆண்/பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்பட்ட அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) or Cambridge International Ordinary Level) பரீட்சை மற்றும் கேம்பிரிட்ஜ் சர்வதேச சாதாரண தர பரீட்சைகள் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்திகள் கட்டாயம் இருத்தல் வேண்டும். அறிவியல் பாடங்கள் (இயற்பியல், இரசாயணவியல் மற்றும் உயிரியல்) அல்லது கணிதம் ஆகிய பாடங்களில் தரப்படுத்தலில் பெறப்பட்ட சித்திகள் க. பொ. த. சாதாரண தர பரீட்சையின் திறமைச் சித்திக்கு தேவைப்படும் குறைந்த மதிப்பெண்களுக்கு சமமாக அல்லது அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.

ஆ. **சிவில் பொறியியல் துறை (ஆண்) - நிரந்தர/ தொண்டர்**

(1) உற்பத்தியார் மற்றும் வெல்டர்
(2) மர தொழில்நுட்ப வல்லுநர்
(3) கட்டுமான உபகரண இயந்திரவியலாளர்
(4) காற்று மற்றும் குளிர்பதன இயந்திரவியலாளர்
(5) தொழில்துறை தொழில்நுட்ப வல்லுநர்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்பட்ட அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் மற்றும் ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) or Cambridge International Ordinary Level) பரீட்சை மற்றும் கேம்பிரிட்ஜ் சர்வதேச சாதாரண தர பரீட்சைகள் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கில பாடம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்திகள் கட்டாயம் இருத்தல் வேண்டும்.

தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை சான்றிதழ்கள் பெற்றிருத்தல் வேண்டும். தேசிய தொழிற்துறை தகைமையில் மட்டம் (NVQ Level) பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.

இ. **விநியோகத் தொழில்கள் - தொண்டர் சீருடை தைப்பவர் (ஆண்/பெண்)**

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழியில் சித்தியும், கணிதம்/ விஞ்ஞானம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகிய வற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

அல்லது

(Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) or Cambridge International Ordinary Level) பரீட்சை மற்றும் கேம்பிரிட்ஜ் சர்வதேச சாதாரண தர பரீட்சைகள் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கில பாடம் உட்பட 6 பாடங்களில் சித்திகள் கட்டாயம் இருத்தல் வேண்டும். அறிவியல் பாடங்கள் (இயற்பியல், இரசாயணவியல் மற்றும் உயிரியல்) அல்லது கணிதம் அல்லது கணக்கியல் ஆகிய பாடங்களில் தரப்படுத்தலில் பெறப்பட்ட சித்திகள் க. பொ. த. சாதாரண தர பரீட்சையின் திறமைச் சித்திக்கு தேவைப்படும் குறைந்த மதிப்பெண்களுக்கு சமமாக அல்லது அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.

மற்றும்

ஜவுளித் துறையில் இயந்திர ஆபரேட்டராக (Machine Operator) இரண்டு ஆண்டுகள் (02) அனுபவம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் Pattern making, quality controlling மற்றும் cutter machine handling பற்றி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். இது கூடுதல் தகுதியாகக் கருதப்படுகிறது. மேலும் இலங்கை விமானப்படையால் நடாத்தப்படும் இறுதி நடைமுறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாகும்.

**பின்வரும் தொழில்கள் தொடர்பான நிரந்தர ஆட்சேர்ப்புக்கான இலங்கை வழக்கமான / தன்னார்வ விமானப் படையின் பெண்கள் வெற்றிடங்கள்**

4. தேவைப்படும் கல்வித்தகைமை மற்றும் தொழிற் தகைமைகளும் :

அ. **பொது பொறியியல் தொழில்கள் (ஆண்) தன்னார்வ சீருடை அல்லாத வகை :**

(1) **போக்குவரத்து மெக்கானிக்**

க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம்/விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங் களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி இருத்தல் வேண்டும்.

அல்லது

(Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) or Cambridge International Ordinary Level) பரீட்சை மற்றும் கேம்பிரிட்ஜ் சர்வதேச சாதாரண தர பரீட்சைகள் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்திகள் கட்டாயம் இருத்தல் வேண்டும். விஞ்ஞான

பாடங்கள் (இயற்பியல், இரசாயணவியல் மற்றும் உயிரியல்) அல்லது கணிதம் ஆகிய பாடங்களில் தரப்படுத்தலில் பெறப்பட்ட சித்திகள் க. பொ. த. சாதாரண தர பரீட்சையின் திறமைச் சித்திக்கு தேவைப்படும் குறைந்த மதிப்பெண்களுக்கு சமமாக அல்லது அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.

மற்றும்

தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் முழுநேர இரண்டு ஆண்டு பொறியியலாளர் (தொலைதொடர்பு/ இலத்திரனியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். தேசிய தொழிற்துறை தகைமையில் நான்காம் மட்டம் (NVQ Level IV) அல்லது அதற்கு சமமான சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் (மின்னணுவியல்/இலத்திரனியல்) தொடர்பாக ஓராண்டு (01) தேசிய தொழில்நுட்ப சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

(2) **மேற்பரப்பு தொழில்நுட்ப வல்லுநர் :**

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி சாதாரண சித்தியும் அவற்றில் இரண்டு முறைக்கு மேல் 6 பாடங்களில் சித்திகள்.

அல்லது

(Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) or Cambridge International Ordinary Level) பரீட்சை மற்றும் கேம்பிரிட்ஜ் சர்வதேச சாதாரண தர பரீட்சைகள் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்திகள் கட்டாயம் இருத்தல் வேண்டும்.

மற்றும்

அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அரசாங்கத்தில் பதிவு செய்துள்ள மோட்டாரர் வாகன தொழில்நுட்பம் (மோட்டார் வாகனம் மின்சார தொழில் நுட்பம்/மோட்டார் வாகன இலத்திரனியல் தொழில்நுட்பம்/ மோட்டார் வாகன குளிரூட்டல் தொழில்நுட்பம்) தொடர்பான பாடநெறி ஒன்று பூரணப்படுத்தி இருத்தல் மற்றும் தேசிய தொழிற்திறன் கட்டம் II (NVQ Level II) அல்லது அதற்கு மேலதிக தகைமைகள் பெற்றிருத்தல்.

மற்றும்

அரசாங்க நிறுவனமொன்றில் அல்லது அரசாங்கத்தில் பதிவு செய்த தனியார் நிறுவனமொன்றில் ஆய்வுகூட உதவி யாளர் மற்றும் தொழில்நுட்ப கல்வி தொடர்பான பாடநெறி ஒன்றை (01) பூரணப்படுத்தி இருத்தல் மற்றும் தேசிய தொழிற்திறன் கட்டம் II (NVQ Level II) அல்லது அதற்கு மேலதிக தகைமை பெற்றிருத்தல்.

மற்றும்

குறைந்தது ஒரு வருடம் ஆய்வுகூட செயற்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப துறை தொடர்பாக கற்றிருத்தல் மேலதிக தகைமையாக கவனத்தில் கொள்ளப்படும்.

ஆ. **இலத்திரனியல், தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு - நிரந்தர**

**தொலைத்தொடர்பு தொழில்நுட்ப வல்லுநர் (ஆண்)**

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம்/ விஞ்ஞானம் ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி இருத்தல் வேண்டும்.

மற்றும்

தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் முழுநேர இரண்டு ஆண்டு பொறியியலாளர் (தொலைத்தொடர்பு/ இலத்திரனியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். தேசிய தொழிற்துறை தகைமையில் மட்டம் (NVQ Level IV) அல்லது அதற்கு சமமான சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட பாட சாலை ஒன்றில் (மின்னணுவியல்/ இலத்திரனியல்) (NVQ Level IV) தொடர்பாக மூன்றாண்டு தேசிய தொழில்நுட்ப சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

இ. **சிவில் பொறியியல் துறை (ஆண்/பெண்) - நிரந்தர/ தன்னார்வ அடிப்படையில் வேலை (சிவில்/ மின்சாரம்/இயந்திரவியல்/ அளவு கணக்கெடுப்பு)**

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

அல்லது

(Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) or Cambridge International Ordinary Level) பரீட்சை மற்றும் கேம்பிரிட்ஜ் சர்வதேச சாதாரண தர பரீட்சைகள் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கில பாடம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்திகள் கட்டாயம் இருத்தல் வேண்டும்.

மற்றும்

தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் NCT (Civil/ Electrical/ Mechanical Engineering) மூன்று வருட பகுதி நேர கற்கை நெறி அல்லது அரச அங்கீகாரம் பெற்ற தொழில்நுட்ப கல்லூரியில் கற்கை நெறி சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் குறிப்பிட்ட துறையில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

ஈ. **பரிபாலன கல்வித் துறை - தொண்டர் (பெண்) தன்னார்வ சீருடை அல்லாத வகை (முன்பள்ளி ஆசிரியர்)**

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி சாதாரண சித்தியும், அவற்றில் இரண்டு அமர்வுக்கு மேல் 6 பாடங்களில் சித்திகள்.

அல்லது

(Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) or Cambridge International Ordinary Level) பரீட்சை மற்றும் கேம்பிரிட்ஜ் சர்வதேச சாதாரண தர பரீட்சைகள் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்திகள் கட்டாயம் இருத்தல் வேண்டும்.

மற்றும்

அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நிறுவனத்தில் பாலர் பள்ளி டிப்ளோமா படிப்பை முடித்து பாலர் பாட சாலையில் ஒருவருட பணி அனுபவம் இருத்தல் வேண்டும்.

மற்றும்

அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட ஆரம்ப கால குழந்தைப் பருவ கல்வி மையத்தில் பாலர் பள்ளி ஆசிரியராக ஒரு வருடத்திற்கும் (01) மேலான நடைமுறை அனுபவம் மற்றும் ஆரம்ப கால குழந்தை மேம்பாடில் சிறப்பு பயிற்சியினை வெற்றிகரமாக முடிந்திருப்பது தகுதிகளாகக் கருதப்படும்.

5. **விசேட குறிப்பு** :

அ. Pearson Edexcel International General Certificate of Secondary Education (GCSE) மற்றும் Cambridge International சாதாரண தரப் பரீட்சைகளில் சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கான சாதாரண சித்தியின்றி விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து 05 வருடங்களுக்குள் சிங்களம் அலலது தமிழ் மொழிக்கான சித்தியை பெற வேண்டும்.

ஆ. NVQ Level III அல்லது SLQF I அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ் சாதாரண தரத்திற்கு பதிலாக கருதப்படும் மற்றும் NVQ Level IV அல்லது SLQF 2 அல்லது அதற்கு மேல் வைத்திருப்பது உயர் தரத்திற்கு பதிலாக நேரடி நுழைவு விண்ணப்பதாரர்கள் சேர்கைக்கு மட்டுமே கருதப்படும்.

6. **ஏனைய தகைமைகள்** :

அ. இலங்கை நிரந்தர/ தொண்டர் வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(1) தேசிய இனம் - ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) வயது - 2025, மார்கழி 01 ஆந் திகதியன்று

நிரந்தர
ஆண் - 18-23 இருத்தல் வேண்டும்
பெண் - 18-22 இருத்தல் வேண்டும்

தொண்டர்
ஆண் - 18-28 இருத்தல் வேண்டும்
ஆண் - 18-30 இருத்தல் வேண்டும் (போக்குவரத்து மெக்கானிக்)
பெண் - 18-26 இருத்தல் வேண்டும்

**நேரடி ஆட்சேர்ப்பு (நிரந்தர/ தொண்டர்)**

ஆண் - 18-28 இருத்தல் வேண்டும்
பெண் - 18-26 இருத்தல் வேண்டும்

(3) உயரம் - ஆண் - 5 அடி 4 அங்குலமும் (162 cm)
அதற்கு மேலும்
5 அடி 2 அங்குலமும் (157 cm)
அதற்கு மேலும்
(போக்குவரத்து மெக்கானிக்)
பெண் - 5 அடி 2 அங்குலமும்
(157cm) அதற்கு மேலும்

(4) உடல் நிறை - ஆண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 26
- பெண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 25

உடற்பருமன் சுட்டி (BMI) = நிறை (கி.கி.) / உயரம்$^2$ (மீ.)

(5) பார்வை வர்ணப்பதிவு மட்டம் : $CP_2$

(6) தொலை பார்வை இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்)

(7) மார்பு - குறைந்தது 32 அங்குலம் (ஆண்)

(8) குடியியல் நிலை - நிரந்தர - விவாகமாகாதவர் தொண்டர் மற்றும் நேரடி ஆட்சேர்ப்பு - விவாகமாகாதவர்/ விவாகமானவர்

(அ) நிரந்தர விமானப்படை வீரர்கள்/ வீராங்கனைகள் விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். விமானப்படையில் இணைந்து நான்கு ஆண்டுகள் (04) பூர்த்தியடைந்த பின்பும் அடிப்படை தொழிற்துறை பயிற்சி முடிந்து 01 வருடத்தின் பின்பும் விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

(ஆ) விவாகமாகாமல் 25 வயதை விட அதிக மான வயதில் வான் படைக்கு இணையும் படை வீரர்கள்/ வீராங்கனைக்கு வான் படையில் இணைந்து ஓராண்டின் பின்னர் விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

(இ) விவாகமாகாமல் நேரடி ஆட்சேர்ப்பில் இணையும் விமானப்படை வீரர்கள்/ வீராங்கனைகளுக்கு விமானப்படையில் இணைந்து ஓராண்டின் பின்னர் விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

7. பந்தி 03, 04 மற்றும் 05 ஆவது பந்திகளில் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித்திறமைகளை நிறைவு செய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, கண்பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற் தகைமை மட்டத்தை கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். தேவையான உயரம், நிறை, கண்பார்வை முதலியவை இல்லாதிருந்தாலும் விமான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

8. விளையாட்டுத் துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாக கவனத்திற் கொள்ளப்படும்.

9. **சேவை நிபந்தனைகள் :**

அ. தெரிவு செய்யப்படும் தொழில் துறைக்குரிய நிரந்தர வான்படை வீரர் /வீராங்கனைகள் அடிப்படை பயிற்சியும் அதன் பின் தொழில் துறைப் பயிற்சி வழங்கப்படுவதுடன், விமானப்படை வீரர்கள்/ வீராங்கனைகள் அடிப்படை பயிற்சியும் வழங்கிய பின் அவர்கள் (நிரந்தர/தொண்டர்) சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

ஆ. விமானப்படை வீரர்/வீராங்கணைகள் பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் வான் படை தளபதியினால் தீர்மானிக்கப்பட்ட இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுவர்.

இ. விமானப்படை வீரர் /வீராங்கணைகளாகப் பயிற்சி பெறும் காலப்பகுதியின் போதும் அதன் பின்னரும் ஆளணியினர் வான்படைச் சட்டத்திற்கு ஆளாவர்.

ஈ. ஒவ்வொரு விமானப்படை வீரர் / வீராங்கணைக்கும் அனைத்து வகை சீருடைகள் உபகரணங்கள் மருத்துவ வசதிகள் என்பனவும் அளிக்கப்படும்.

உ. விமானப்படை வீரர் / வீராங்கணை பயிற்சி காலத்தின்போது விமானப்படை வீரர் / வீராங் கணைகள் வான் படை உணவு விடுதியொன்றில் இடவசதியளிக்கப்பட்டு உணவும் வழங்கப்படும்.

ஊ. ஒரு விமானப்படை வீரர்/ வீராங்கணை பயிற்சி யின் போது பயிற்சியை பெறுவதற்கான தேர்வை நாடும் நிலையில் இருந்து தாமாகவே விலகிக் கொள்ளுமிடத்து அத்தகைய வான்படை வீரர்/ வீராங்கணை பொருட்டு அது காலவரையில் இலங்கை குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவுகள் யாவும் இலங்கை குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவர்.

எ. ஒரு விமானப்படை வீரர்/ வீராங்கணைகள் தமது பயிற்சியின் போது எச்சமயத்திலும் பிறழ்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஏதுக்காவது ஆணை பெறுவதற்கான தகைமைக்குப் பொருத்த மற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை இடப் படுமிடத்து அவருடைய பயிற்சியில் இலங்கை குடியரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு மீளளிக்கும்படி அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுத்தப்படுவரென்பதுடன்

இதற்காக இலங்கை அரசின்சார்பில் வான்படை தளபதியுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்யும்படியும் தேவைப்படுத்தப்படுவர்.

ஏ. பெற்றோர் அல்லது பாதுகாவலர் உட்பந்திகள் (ஊ), (எ) தொடர்பாக விண்ணப்பப்படிவத்தின் 32 ஆம் சுட்டில் தரப்பட்டுள்ளதைப் போன்ற வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணபத்துடன் சேர்த்து அனுப்பி வைத்தல் வேண்டும். இத் தேர்வுநாடிகள் விமானப்படை வீரர்/வீராங்கனை நியமிக்கப்படு வதற்கு முன்பு பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்தப் படிவத்தில் பின்தொடரும் ஒரு ஒப்பந்தத்தை இலங்கைக் குடியரசுடன் செய்து கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.

ஐ. பந்தி 01, 02, 03, 04, 05 மற்றும் 06 இலும் உள்ள தேவைகளைக் கொண்டிருக்கும் தேர்வு நாடிகள் முதலாவது நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டுவதுடன் சித்தி பெறும் தேர்வு நாடிகள் மருத்துவப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதுடன் எல்லா விண்ணப்ப தாரிகளும் இலங்கை விமானப் படையினால் ஒழுங்கு செய்யப்பட்ட மருத்துவச் சபைக்கு உட்படுத்தப்படுவர். கிளைகளுக்கும் தேவைப்படும் தேர்வு நாடிகளின் எண்ணிக்கை அவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைகளிலும் தேர்வுகளிலும் காண்பித்த திறமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

ஒ. திருமணமாகாத வான்படை வீரர்/ வீராங்கணை ஒருவர் வீரர்/ வீராங்கணை விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங் களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத வான்படை வீரர்/ வீராங்கணைகளின் உணவுப்படி உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

ஓ. திருமணமாகிய விமானப்படை வீரர் / வீராங்கணை (கிடைக்குமாயின்) மணமானோர் குடிமனை வழங்கப்படும். பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தாவது போன்று வாடகை அறவிடப் படும்.

ஔ. எல்லா விமானப்படை வீரர்/ வீராங்கணைகள் உலகின் எப்பாகத்திற்கும் எந்நேரத்திலும் கடமைக் காக அல்லது பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

அஅ. எல்லா விமானப்படை வீரர் / வீராங்கணைகள் வான் படைச் சட்டத்தினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளையினாலும் ஆளப்படுவர்.

10. **ஆட்சேர்ப்பு பற்றிய நிபந்தனைகள் :**

அ. நிரந்தர விமானப்படை வீரர் / நிரந்தர வீராங் கணைகள் தொடர்பாக

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர விமானப்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 08 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளுமாறு கேட்கப்படுவார்கள். மேலும், 08 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 04 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுதலானது மீண்டும் அழைக்கப்படும் போது சமுகமளிக்க வேண்டும். 08 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

ஆ. தொண்டர் விமானப்படை வீரர் / வீராங்கணை தொடர்பாக

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தொண்டர் விமானப்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 05 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். 05 ஆண்டுகள் கழிந்த பின் விமானப்படை தளபதியின் அனுமதியுடன் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

இ. சீருடை அல்லாத வகை தொண்டர் விமானப்படை வீரர்/ வீராங்கணைகள் தொடர்பாக

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தொண்டர் வான்படையில் மூன்றாம் தர வானூர்தி யாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 02 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். 02 ஆண்டுகள் கழிந்த பின் விமானப்படை தளபதியின் அனுமதியுடன் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

11. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்:** தேர்ந்தெடுக்கப் பட்ட தேர்வு நாடிகள் இலங்கைக் குடியரசின் மொழிக் கொள்கைக்கு உடன்பட்டவர்களாகவும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற் படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆகப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆகப்பெரும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

12. **சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

அ. வருடத்திற்கான ஏற்புடையதாக அடிப்படை சம்பள வான்படை வீரர்/ நிரந்தர வீராங்கணைகள் விகிதங்கள் பின்வருமாறு:

| நிலை | அடிப்படை சம்பளம் | ஏனைய கொடுப்பனவுகள் | குறைக்கப்படாமல் முழுச் சம்பளம் |
|---|---|---|---|
| விமான வீரன் | 44,293.00 | 22,150.00+29,993.43 | 96,436.43 |
| முன்னணி விமான வீரன் | 45,409.00 | 22,150.00+29,993.43 | 97,552.43 |
| கோப்ரல் | 46,525.00 | 22,150.00+29,993.43 | 98,668.43 |

திருமணமாகி வெளியில் வசிக்கும் நபர்களுக்கு ரேசன் கொடுப்பனவு தோராயமாக ரூபா 30,000.00 மற்றும் பொருந்தக்கூடிய வாடகை உச்சவரம்பு.

ஆ. **ஓய்வூதியங்கள்/ பணிக்கொடுப்பனவு:** என்பன காலத்துக்கு காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் விமானப்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதி களின்படி செலுத்தப்படும். விமானப்படை வீரர்கள் அனைவரும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின் படியாகும்.

13. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்:**

அ. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். 2025, கார்த்திகை மாதம் 10 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர், "தலைமை ஆட்சேர்ப்பு அதிகாரி, தலைமை ஆட்சேர்ப்பு காரியாலயம், இலங்கை விமானப்படை தொழிற்துறை பயிற்சி பாடசாலை, ஏகல, கொட்டுகொட (CHIEF RECRUITING OFFICER, SRI LANKA AIR FORCE TRADE TRAINING SCHOOL, KOTUGODA.)" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை விமானப்படை நிரந்தர/ தொண்டர் வீரர் / வீராங்கணைகளுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரு துறைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். வேறு வேறு துறைகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். முடிவுத் திகதியின் பின்னர் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக் கப்படமாட்டாது.

ஆ. அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் / குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின்/ சபையின்/ குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழ் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. www.airforce.lk/joinus/apply மூலம் விண்ணப் பங்கள் இணையதளம் ஊடாகவும் அனுப்ப முடியும்.

ஈ. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதி மற்றும் பிரதிகளை நேர்முக பரீட்சையின் போது சமர்ப் பித்தல் வேண்டும். மற்றும் நேர்முக பரீட்சையின் போது உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப் பித்தல் வேண்டும்.

(1) பிறப்புப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் பிரதி (கல்விச் சட்டகோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ;

(2) தேசிய ஆளடையாள அட்டையின் மூலப் பிரதி ;

(3) விண்ணப்பித்த துறைக்குத் தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழின் மூலப் பிரதி;

(4) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில் / தொழில்நுட்பப்பயிற்சி அல்லது அனுபவச் சான்றிதழ் (எவையேனு மிருப்பின்) மூலப் பிரதி ;

(5) இரு குணநலச் சான்றிதழ்கள். (ஆறு மாதத்திற்கு உட்பட்ட) இதில் ஒன்று விண்ணப்பதாரர் கடைசியாகக் கல்விகற்ற பாடசாலை அதிபரினதும் மற்றயது இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பதாரரை அறிந்து உள்ளவரான பொறுப்புவாய்ந்த ஒருவரினதாக அல்லது தொழில் செய்ப வராயின் அப்போதைய தொழில்தருநரின தாக இருத்தல் வேண்டும் ;

(6) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள் மூலப் பிரதி ;

(7) ஆறு மாதத்திற்கு உட்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் ;

(8) பாடசாலை விடுகைப் பத்திரம் ;

(9) வெற்று பயில் கவர் மற்றும் பயில் டேக்;

(10) வர்ண புகைப்படம் 2 x 2 1/ 2 அங்குல அளவு கிராம அலுவலரினால் சான்றிதழ்படுத்தப் பட்டது.

உ. ஆவணங்களைக் காண்பிக்கும்படி வேண்டப்படும் போது அவற்றைக் காண்பிக்கத் தவறியவர்களான தேர்வு நாடிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது.

ஊ. ஆவணங்களோ ஆவணங்களின் மூலப்பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்க வேண்டாம்.

எ. விண்ணப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை தொலைந்து போனால் இலங்கை விமானப்படை பொறுப்பு கூறமாட்டாது.

ஏ. விண்ணப்பத்தில் வயது, உயரம், நிறை மற்றும் அடிப்படை கல்வித் தகைமை எதுவும் பிழை யானதெனக் காணப்படுமிடத்து, விண்ணப்பக் காரரைத் தகைமையற்றவராக்கும்.

14. மேற்கூறப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி முதற்கட்ட தேர்வு இடம் பெறும். தேர்ந்தெடுக்கப்படும் தேர்வு நாடிகள் வான்படை தளபதியினால் விதித் துரைக்கப்பட கூடியவாறான சோதனைகளுக்கு உட்படுத்தப்படும்படி தேவைப்படுத்தப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவு செய்யப்படும் தேர்வு நாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம் மற்றும் திகதி என்பன தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டாது.

15. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய ஆளடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய ஆளடையாள அட்டை இல்லாத விண்ணப்பத்தாரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பதாரரும் தேசிய ஆளடையாள அட்டையின்றி சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்.

16. தங்கள் இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்த மானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பத்தாரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

17. பொருத்தமான விண்ணப்பத்தாரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வு செய்யப்படுவர்.

18. விண்ணப்பக்காரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். அல்லது ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பத்தாரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தனித்தல் அத்தகைய விண்ணப்பத்தாரரை தகைமையிழக்கச் செய்யும்.

19. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பத் தாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

விபீ எதிரிசிங்க,
WWV, RWP, RSP and three Bars, USP,
fndu(China), psc, qhi,
எயார் மார்ஷல்,
விமானப் படைதளபதி.

தலைமையலுவலகம்,
இலங்கை விமானப்படை,
இல. 594,
பாதுகாப்பு தலைமைக் கட்டிடத் தொகுதி,
ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| அலுவலக பாவனைக்காக |
|---|

இலங்கை நிரந்தர / தொண்டர் வான்படையில் ................ ......................... பிரிவில் ஆண் / பெண் வான்படை வீரர்/ வீராங்கணைகளுக்கான விண்ணப்பம்

1. தேசிய இனம் : ............................................................ ...................................................................................
(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா? பதிவு முறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியையும் குறிப்பிடுக).

2. முழுப்பெயர் (தேசிய ஆளடையாள அட்டையில் உள்ள வாறு): ......................................................................... ...................................................................................

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ..................... ...................................................................................

4. நிரந்தர முகவரி :............................................................ ...................................................................................

5. அஞ்சல் முகவரி : ..............................................................................................................
..............................................................................................................

6. பிறந்த திததி : .................................................................. வயது :..............................................................
(2025, மார்கழி 01 ஆந் திகதி நிலவரப்படி)

7. உயரம் : சென்றி மீற்றரில் ............................................................ ( அடி............அங்குலம்.....................)

8. மார்பு அளவு : அங்குலம் .....................

9. நிறை : கிலோ கிராம் .....................

10. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் :..............................................................

11. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள வான்படை முகாம் :..............................................................

12. மாவட்டம்:..............................................................................................................

13. தேர்தற் தொகுதி :..............................................................................................................

14. கிராம அலுவலர் பிரிவு :..............................................................................................................

15. தொலைபேசி இலக்கம். :...................................................... WhatsApp இலக்கம்: .............................................................

E-mail முகவரி :...........................................................................

16. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா :..............................................................

17. பால் : ஆண்/பெண் :...........................................................................

18. பாடசாலை பற்றிய விபரங்கள் :..............................................................................................................

19. பாடசாலை அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| *பாடசாலை / சர்வகலாசாலை பெயர்கள்* | *பரீட்சை* | *ஆண்டு மற்றும் சுட்டிலக்கம்* | *சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட)* | |
|---|---|---|---|---|
| | க.பொ.த. (சா./ த.) | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | க.பொ.த. (உ./த.) | | | |
| | | | | |
| | | | | |
| | தொழில் தகைமைகள் வேறு | | | |

20. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :

21. பாடசாலையிலிருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :

| *தொழில் தருநரின் பெயரும் முகவரியும்* | *தொழிலின் தன்மை* | *சேவைக் காலப்பகுதி* | |
|---|---|---|---|
| | | *இருந்து* | *வரை* |
| | | | |

22. பெற்றோர் பற்றிய விபரங்கள் :

| *முழுப்பெயர்* | *தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்* | *தொழில்* | | *தற்போதைய முகவரி* |
|---|---|---|---|---|
| | | *முன்பு* | *தற்போதைய* | |
| தந்தை | | | | |
| தாய் | | | | |
| சகோதர /சகோதரிகள் | | | | |
| | | | | |
| | | | | |

23. நெருங்கிய உறவினர் யாரேனும் முன்பு அல்லது தற்போது வான் படையிலோ அல்லது ஏனைய ஆயுத படையிலோ சேவையாற்றினால் அது பற்றிய விபரங்கள் அல்லது சேவையில் இருந்து விலகி இருந்தால் விலகிய முறையினை குறிப்பிடுக. (சட்டபூர்வமாக அல்லது சட்டத்திற்கு புரம்பாக)

| *நிலை* | *பெயர்* | *பிரிவு/துறை* | *தற்போதைய விபரம்* |
|---|---|---|---|
| | | | |

24. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் : (குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

| *தொடர் இல.* | *விபரம்* | *பாடசாலை* | *மாகாணம்* | *தேசிய* | *சர்வதேச* |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

25. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :........................................................................................................

26. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை : ........................................................................................................................................

27. இலங்கை வான் படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிசில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தாரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணபத்தின் பேற்றினையும் தருக :.......................

28. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவரா? அல்லது பிணையில் விடப்பட்டவரா? அப்படியாயின் விபரங்கள் தருக : ........................................................................................................................................

29. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி / தேசிய வங்கி / பல்கலைக்கழகங்கள் / அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் : ....................................................

30. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

| *பெயர்* | *பதவிப் பெயர்* | *அஞ்சல் முகவரி* |
|---|---|---|
| | | |

31. விண்ணப்பதாரர் கைச்சாத்திட வேண்டிய வெளிப்படுத்துகை :

மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்களுக்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

. . . . . . . . . . . . . . . . . . . .
திகதி

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

32. விண்ணப்பதாரரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை:

அ. இலங்கை விமானப்படையில் பயிலுனராக விண்ணப்பித்து மேலே கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் 31 ஆம் சுட்டின் வெளிப்படுத்துகையில் கையொப்பமிடப்பட்டிருக்கும் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . இவருக்கு நான் பெற்றோர் /பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேற்கூறப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர் பயிற்சிக்குத் தேர்தெடுக்கப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கு நான் பொருப்பாளியாவேன் :

(1) பயிற்சியின் போது ஆணைக்கான அவரது தேர்வு நாடும் நிலையிலிருந்து தாமாகவே விலகுமிடத்தில் இலங்கை குடியரசினால் அக்காலம் வரை செலவிடப்பட்ட செலவுகள் யாவற்றையும் இலங்கை குடியரசிற்கு திரும்பக் கொடுப்பதற்கும்.

(2) பயிற்சியின்போது எச்சமயத்திலும் நடத்தை காரணமாக அல்லது அவரது சொந்த கட்டுப்பாடுக்கு காரணங்களுக்காக விண்ணப்பதாரர் தகுதிபெற்றவரென அதிகாரிகளினால் அறிக்கை விடப்படுமிடத்து இலங்கை குடியரசினால் அக்காலம் வரைக்கான செலவுகள் யாவும் இலங்கை குடியரசுக்கு திரும்பச் செலுத்துவதற்கும்.

.....................................................
பெற்றோர்/ பாதுகாவலர் கையொப்பம்

திகதி : ..........................................................................................................
பெயர் : (பெரிய எழுத்துக்களில்) ...................................................................
முகவரி : ......................................................................................................

...................................................
முதலாம் சாட்சியின் கையொப்பம்

திகதி : ..........................................................................................................
பெயர் (பெரிய எழுத்துக்களில்) :.....................................................................
முகவரி : ......................................................................................................

......................................................
இரண்டாம் சாட்சியின் கையொப்பம்

திகதி : ..........................................................................................................
பெயர் (பெரிய எழுத்துக்களில்) :.....................................................................
முகவரி : ......................................................................................................

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி உயர்கல்வி மற்றும் தொழில் கல்விஅமைச்சு மூன்று வருடகால சேவை முன் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியைப் பயிலுவதற்காக 2023 ஆம் ஆண்டு அல்லது 2024 ஆம் ஆண்டு க.பொ.த (உயர்தர) பெறுபேற்றின் அடிப்படையில் பயிலுநர்களினை ஒரே நேரத்தில் இரண்டு (2) குழுக்களாக மாணவர்களை தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு உள்வாங்குதல் - 2025

1.0 இலங்கை தேசிய கல்வியியற் கல்லூரிகளில் மூன்று வருட கால சேவை முன் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியைத் தொடர்வதற்கு ஆட்சேர்க்கும் நிமித்தம் தேவையான கல்வித் தகைமைகளையும் தகுதி களையும் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 இது உரித்தாவது 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்தவர்க்கு மாத்திரமே.

1.2 அதற்கமைய 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆண்டில் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் தோற்றி அதில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுக்கு இதற்காக விண்ணப்பிக்க இயலுமாகும்.

1.3 அனைத்து விண்ணப்பதாரிகளும் நிகழ்நிலை முறை (Online system) ஊடாக வர்த்தமானி அறி வித்தலில் 10.0 இல் 'விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள்' பகுதியில் குறிப்பிடப்பட்ட அறி வுறுத்தல்களுக்கமைய விண்ணப்பிக்க வேண்டும்.

1.4 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு விண்ணப் பிக்க தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கும் விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் நிகழ்நிலை முறை மூலம் இரண்டு ஆண்டுகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

1.5 விண்ணப்பித்தல் 2025.11.28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.6 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் மிகுந்த அவதானத் துடன் வாசித்து விளங்கிக்கொண்டு அதன் பிரகாரம் நிகழ்நிலை முறையில் விண்ணப்பிக்கும் பொறுப்பு விண்ணப்பதாரிகளின் வசமானதாகும். சரியான முறையில் விண்ணப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் தொடர்பாக பின்னர் விடுக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

1.7 விண்ணப்பிக்க முன் வர்த்தமானி அறிவித்தலில் 14.0 இன் கீழ் 14.01 இருந்து 14.8 வரை அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டவாறு ஒவ்வொரு பாடநெறிக்காகவும் 2023 மற்றும் 2024 ஆண்டின் க.பொ.த. (உயர்தர) பெறு பேற்றின் அடிப் படையில் ஆட்சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதோடு தேசிய / மாவட்ட மட்டத்தில் நிலவும் வெற்றிட எண்ணிக்கை தொடர்பாக தெளிவான விளக்கத்தைப் பெற்றுக் கொண்டு விண்ணப்பிப்பது உகந்தது.

2.0 **தகைமைகள் :**

சகல விண்ணப்பதாரிகளும் :

2.1 இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

2.2 சிறந்த நடத்தை, சிறந்த உடல், உள ஆரோக்கிய நிலை உடையவராக இருத்தல் வேண்டும்.

2.3 **வயது:**

2.3.1 2025.01.01 அன்று 25 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

2.3.2 சமய பாடநெறிக்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டிய சகல மதகுருமார்கள்/ வணக்கத்துக்குரியவர்கள் 2025.01.01 அன்று 30 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

2.4. விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும்.

3.0 **அடிப்படை கல்வித்தகைமைகள் :**

3.1 3.1.1 பௌத்த தர்ம பாடநெறி தவிர ஏனைய அனைத்து பாடநெறிகளுக்கும் விண்ணப் பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும் கல்வியியற் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்காக கீழ்க் காட்டப் பட்டுள்ள 3.2 மற்றும் 3.3.1 இல் குறிப் பிடப்பட்டுள்ள அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

3.1.2 பௌத்த தர்ம பாடநெறிக்காக விண்ணப் பிக்கும் போது மட்டும் 3.2 தகைமையுடன் 3.3.1 அல்லது 3.3.2 எனும் தகைமைகளில் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.2 2023 அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பிரதான மூன்று பாடங்களில் (03) ஒரே தடவையில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.

3.3

3.3.1 விண்ணப்பதாரிகள் க.பொ.த.(சாதாரணதர) பரீட்சையில் மொழிமூல மொழி (சிங்கள மொழி/தமிழ் மொழி) மற்றும் கணிதம் உள்ளிட்ட ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் அவற்றில் மூன்று பாடங்களில் திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் கட்டாயமானதாகும். இந்த தகைமை இரண்டு அமர்வுகளில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் முதல் அமர்வில் முதல்மொழி (சிங்கள மொழி/தமிழ் மொழி) உள்ளிட்டதாக ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் திறமை சித்தி மூன்றினை (03) பெற்றிருத்தல் கட்டாயமானதாகும்.

சிங்கள மொழிமூல பாடநெறிக்காக உரிய மொழிமூல மொழி சிங்களம் என்பதோடு, தமிழ் மொழிமூல பாடநெறிக்காக உரிய மொழிமூல மொழி தமிழாகும்.

**கவனத்திற் கொள்க :**

சிங்களம் அல்லது தமிழ் மொழிமூல பாட நெறிக்காக மேற்குறித்த க.பொ.த (உயர்தர) பரீட்சையில் உரிய மொழிமூலத்தில் தோற்றியிருக்க வேண்டும்.

3.3.2 பௌத்த தர்ம பாடநெறிக்காக விண்ணப்பிப்ப வர்கள் மேலே 3.3 யில் 3.3.1 யின் தகுதி அல்லது ஆரம்ப பிரிவெனா இறுதிப் பரீட்சையில் கணிதம், சிங்கள மொழி உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மூன்று (03) திறமைச் சித்திகளுடன் சித்தி யடைந்திருத்தல்.

3.4. மேற்குறிப்பிட்ட 3.2. மற்றும் 3.3 இல் குறிப்பிடப் பட்ட அடிப்படை கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் ஒவ்வொரு பாடநெறிக்கும் தேவையான விசேட க.பொ.த. (சாதாரண தர) தகைமைகள் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

3.5 ஒவ்வொரு பாடநெறி தொடர்பாக தேவையான விசேட தகைமைகள் அந்தந்தப் பாடநெறிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

**கவனத்திற் கொள்க** :

(அ) க.பொ.த (சாதாரணதர) பாடத்திட்டத்தின் கீழ் கவனத்தில் கொள்ளப்படுகின்ற பாடங்கள் :

முதன்மை (பிரதான) பாடம் :

(i) சமயம் (ii) சிங்கள மொழியும் இலக்கியமும் / தமிழ் மொழியும் இலக்கியமும் (iii) ஆங்கிலமொழி (iv) கணிதம் (v) வரலாறு (vi) விஞ்ஞானம்

2. தொகுதிப் பாடம்:

(i) முதலாவது தொகுதிப் பாடங்களிடையே யாதேனும் ஒரு பாடமும் ;

(ii) இரண்டாவது தொகுதிப் பாடங்களிடையே யாதேனும் ஒரு பாடமும்;

(iii) மூன்றாவது தொகுதிப் பாடங்களிடையே யாதேனும் ஒரு பாடமும்.

(ஆ) ஆரம்ப பிரிவெனா இறுதிப் பரீட்சையில் கவனத்திற் கொள்ளப்படும் பாடங்கள்

(i) சிங்களம், (ii) பாலி (iii) சமஸ்கிருதம் (iv) ஆங்கிலம் (v) கணிதம் (vi) திரிபிடக தர்மம்

(இ) எதிர்கால ஆட்சேர்ப்பின் போது ஒவ்வொரு பாடநெறிக்கும் தேவையான விசேட தகைமைகளின் கீழ் காட்டியுள்ள க.பொ.த (சாதாரண தர) குறைந்த பட்ச தகைமை திறமை சித்தியென திருத்தப்படுகின்றது.

3.6 ஆங்கில மொழி மூலத்தில் நடாத்தப்படும் பாட நெறிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்ப தாரிகள் ஆங்கில மொழித் தேர்ச்சியை பின்வருமாறு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.6.1 ஆங்கில மொழிப் பாடநெறி தவிர்ந்த ஆங்கில மொழி மூலம் நடைபெறும் ஏனைய பாட நெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி /ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**க.கொ.** 2025 ஆம் ஆண்டு க.பொ.த. (உ.த.) தேர்வு முடிவுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து ஆங்கில மொழி மூலம் நடத்தப்படும் பிற படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஆங்கில மொழிப் பாடத்தில் உயர் சித்தி (பி) பெற்றிருப்பது கட்டாயமாகும்.

3.6.2 மேற்கத்திய இசை பாடநெறி ஆங்கில மொழி மூலத்தில் மட்டுமே நடத்தப்பட்டாலும், ஆங்கிலம் மொழிமூலத்தில் மட்டுமன்றி ஏனைய மொழிமூலத்தில் க.பொ.த. (உயர்தரம்) கற்ற விண்ணபதாரர்களும் இதற்கு விண்ணப் பிக்கலாம்.

3.6.3 அனைத்து கற்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகள் ஆங்கில மொழி மூலமாக நடை பெறுவதால் ஆங்கில மொழியில் பாடநெறியை பயிலக்கூடிய விண்ணப்பதாரிகள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிப்பது உகந்ததாகும்.

3.7. சித்திரம் / நடனம் (கீழைத்தேய) / நடனம் (பரதம்)/ சங்கீதம் (கீழைத்தேய)/சங்கீதம் (கர்நாடகம்)/ நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்ப தாரர்கள் பின்வருமாறு தரப்படுத்தப் பட்டு தெரிவு செய்யப்படுவர்.

விண்ணபதாரர்கள், அவர்கள் க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் பெற்ற Z மதிப்பெண்ணின் திறனின் அடிப்படையில் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப் படுவார்கள். மேலும், நேர்முகத் தேர்வின்போது நடத்தப்படும் பாடவாரி நடைமுறைத் தேர்வில் பங்கேற்பது கட்டாயமாகும்.

க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் உரிய அழகியற் பாடத்துக்காக பெற்றுக்கொண்ட தரத்தை மேலிருந்து கீழாக வரிசைப்படுத்தி அவர்களின் Z புள்ளிப்பெறுமானத்தை அதனுடன் பொருத்தி தயாரிக்கப்படும் முன்னுரிமை தொடரொழுங்குக்கு அமைய மாவட்ட அடிப்படையில் விண்ணப்ப தாரிகள் தெரிவு செய்யப்படுவார்கள். மாவட்ட அடிப்படையில் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் முன்னுரிமை தொடரொழுங் குக்கு அமைய தேசிய மட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். அதற்கமைய உயர் Z புள்ளிப் பெறுமானத்தோடு உயரிய சித்தித் தரத்தை உரிய அழகியல் பாடத்துக்கு பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை உரித்தாகும்.

நேர்முகத் தேர்வின்போது பாடவாரியான நடை முறைத் தேர்விற்கு 100 மதிப்பெண்கள் வழங்கப் படும். அதில், தொடர்புடைய பாடத்திற்கான க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பெற்ற தரத்தின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மதிப்பெண்கள் வழங்கப்படும்.

A சித்திக்கு – 15 புள்ளிகள்
B சித்திக்கு – 10 புள்ளிகள்
C சித்திக்கு – 05 புள்ளிகள்
S சித்திக்கு – 01 புள்ளிகள்

**3.8 தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப் பிக்கின்ற அனைத்து கல்வி மற்றும் ஏனைய சான்றிதழ்களினதும் செல்லுபடியாகும் திகதி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் (2025.11.28) அல்லது அதற்கு முன்னரான தினமொன்றாக இருத்தல் வேண்டும்.**

**4.0 ஒவ்வொரு பாடநெறிக்கும் தேவையான தகைமைகள் :**
கீழ்க்காணும் விடயங்கள் தொடர்பாக உங்கள் விசேட கவனம் செலுத்தப்படுவது அவசியமானது.

**கவனத்திற் கொள்க :**

(அ) பாடநெறியின் மொழிமூலத்தை தெரிவு செய்யும் போது வர்த்தமானி அறிவிப்பின் 5.0 யில் காட்டப்பட்ட அட்டவணையில் குறிப்பிட்ட ஒவ்வொரு பாடநெறியும் நடத்தப்படும் மொழிமூலம் தொடர்பாக மற்றும் அதற்காக அவசியமாகும் தகைமைகள் தொடர்பாக மிகவும் தெளிவான விளக்கத்தைப் பெற்று கொள்ள வேண்டியது விண்ணப்பதாரரின் வசமானதாகும்.

(ஆ) மேற்படி 3.0 இல் 3.2 மற்றும் 3.3 இல் காட்டப் பட்டிருப்பது கல்வியியற் கல்லூரி பிரவேசத்திற்கு விண்ணப்பிப்பதற்காக க.பொ.த. (உயர்தர) மற்றும் (சாதாரண தர), அடிப்படை பிரிவெனா இறுதிப் பரீட்சைகளில் பூர்த்தி செய்யப்படவேண்டிய அடிப்படைக் கல்வித் தகைமைகளாகும். அதற்கு மேலதிகமாக ஒவ்வொரு பாடநெறி தொடர்பாகவும் விசேடமாக பூர்த்தி செய்யப்படவேண்டிய பாடத் தேர்ச்சி அவ்வப் பாடநெறிகளின் கீழ் காட்டப் பட்டுள்ளன.

(இ) ஒவ்வொரு பாடநெறியின் கீழும் நேர்முகப் பரீட் சைக்கு அழைக்கப்பட அல்லது / மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டியதற்காக காட்டப்பட்ட கோட்டா பெறுமானம், முன்னுரிமைத் தொட ரொழுங்கு எனுமாறான அனைத்து விடயங்களும் 2021 ஆம் ஆண்டின் மற்றும் 2023 / 2024 ஆம் ஆண்டின் என்பற்றின் கீழ், வேறான வகையில் கவனத்திற் கொள்ளப்படும்.

(ஈ) உடற்கல்விப் பாடநெறியில் விண்ணப்பதாரிகளின் விளையாட்டுச் சான்றிதழ் புள்ளிகளின் வரிசைப் படியும் ஆங்கிலம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாடநெறி மற்றும் கோட்டா பெறுமானம் காட்டப்பட்டுள்ள ஏனைய பாடநெறி களுக்கும் அதற்கான வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள வாசகங்களுக்கு ஏற்றவாறும் ஏனைய அனைத்து பாடநெறிகளுக்கும் வர்த்த மானியில் குறிப்பிடப்பட்ட முறைப்படியும் விண்ணப்பதாரியின் Z புள்ளித் தொடரொழுங்குக்கு அமைய நேர்முகப் பரீட்சைக்காக விண்ணப்ப தாரிகள் அழைக்கப்படுவர்.

(உ) எந்த மாவட்டத்திலிருந்தும் அல்லது தேசிய அடிப்படையிலிருந்தும் அந்தந்த பாடத்திட்டத்திற்கு சேர்க்கப்படும் மொத்த எண்ணிக்கையில் தொடர்புடைய ஒதுக்கீட்டிற்கு உரிய எண்ணிக்கையின் இரட்டிப்பு அளவிற்கு சமமான விண்ணப்ப தாரர்கள், நிகழ்நிலை தரவுத்தளத்தில் உள்ள தகவல்களில் இருந்து கணினி மென்பொருள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, தகுதி மற்றும் தகுதியைச் சரிபார்க்க நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். இவர்களில் தகுதிக்கேற்ப நிர்ணயிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்படுவர்.

(ஊ) பாடத்திட்டங்களுக்கான நேர்முகத் தேர்வுகளுக்கு அழைக்கப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும் ஒரு நடைமுறைத் தேர்வில் பங்கேற்பது கட்டாயமாகும், இங்கு ஆசிரியர் தொழிலுக்குள் நுழையத் தேவையான உடல் மற்றும் மன ஆற்றல்கள் பரிசோதிக்கப்படும். அழகியல் பாடத்திட்டங்கள் மற்றும் சுகாதார மற்றும் உடற்கல்வி பாடத்திட்டங்களுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள், இதற்கு மேலுமாக, பாடம் தொடர்பான நடைமுறைத் தேர்வில் பங்கேற்பது கட்டாயமாகும்.

(எ) ஒவ்வொரு பாடநெறிக்காக தகைமைகளை கவனத்திற் கொள்ளப்படும் தொகுதியினர் சிலர் இருக்கக்கூடும் என்பதோடு, அனைத்து மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்ட ஒட்டுமொத்த கோட்டா பெறுமானத்துக்கு அமைவாக உரிய சதவீத பெறுமானம் கணக்கிடப்படும் போது சில தொகுதியினர்களுக்கு விண்ணப்பதாரர்களை நேர்முகப்பரீட்சைக்கு அழைக்க மற்றும் ஆட்சேர்க்க வாய்ப்புகள் இல்லாது போதல் கூடும். விண்ணப்பிக்கும் போது அது தொடர்பாக விசேட கவனத்தைச் செலுத்தி செயற்படும் போது விண்ணப்பதாரர்க்கு மிகவும் அனுகூலமாக இருக்கும்.

(ஏ) ஏதாவது பாடநெறிக்கான தொகுதிகள் சிலவற்றின் கீழ் ஆட்சேர்க்கப்படும் போது ஒவ்வொரு தொகுதிகளுக்கும் உரிய முழுமையான வெற்றிட எண்ணிக்கையின் விகிதாசார எண்ணிக்கை ஒதுக்கப்படுவது வர்த்தமானியில் காட்டப்பட்டுள்ள அந்த ஒவ்வொரு பாடநெறிகளின் தொகுதி இலக்க தொடரொழுங்கின் முன்னுரிமை அடிப்படையிலாகும்.

(ஐ) “தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசைப்படி” குறிப்பிடப்பட்டிருக்கும் பாடநெறிகளில் அந்த வரிசைப்படுத்தல் குறித்து கருதுவது தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைப்படி தெரிவு செய்யும் போதே ஆகும்.

(ஒ) உடற்கல்விப் பாடநெறியின்போது ஒவ்வொரு தொகுதியின் கீழ் விளையாட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யும் விசேட செயன்முறைகளுக்கு அமைவாக அவ்வப் பாடநெறியின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் அதன் பிரகாரமும், ஏனைய பாடநெறிகளின் போது தகைமையுடன் கூடிய விண்ணப்பதாரிகளின் Z புள்ளித் தொடரொழுங்கு அடிப்படையிலும் சேர்த்துக்கொள்ளும் நடை முறைக்கு அமைவாக தெரிவு செய்தல் மேற் கொள்ளப்படும்.

(ஓ) ஒருவர் சமய நெறி கற்கைக்கு விண்ணப்பிக்க விரும்பினால் விண்ணப்பதாரரின் சமயம் தொடர்பான பாடநெறிக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரர் தனது சொந்த சமயத்தை தவிர வேறு சமய பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியாது.

- தேசிய கல்வியியற் கல்லூரிகளில் நடாத்தப்படும் ஒவ்வொரு பாடநெறிகளுக்குமான ஆட்சேர்ப்பதற்குரிய கல்வித் தகைமைகள் மற்றும் விசேட தகைமைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| பாடநெறி இலக்கம் | 01 - | ஆரம்பக்கல்வி (சிங்களம்) |
| | 02 - | ஆரம்பக்கல்வி (தமிழ்) |

4.1

4.1.1 க.பொ.த (உயர்தர) பரீட்சையில் கலைப்பிரிவில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி பாடங்களுடன் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகள்

4.1.1.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கு கலைப்பிரிவில் தோற்றி சிங்கள மொழி / தமிழ் மொழி பாடங்களுடன் மூன்று (03) பாடத்தில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.1.1.2 3.0 இல் 3.3.1 க்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் முதல் மொழி (சிங்களம்/ தமிழ்) மற்றும் கணிதம் போன்ற பாடங்களுக்காக குறைந்த பட்சம் திறமைச் சித்தி மற்றும் ஆங்கில மொழி பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.1.2. க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சிங்கள மொழி /தமிழ் மொழிப் பாடங்கள் இல்லாமல் ஏதேனும் ஒரு பாடத்துறையை கற்ற விண்ணப்பதாரிகள்.

4.1.2.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் கலைப் பாடத்துறையில் தோற்றி சிங்கள மொழி / தமிழ் மொழி இல்லாமல் வேறு மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.1.2.2 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞானம் (பௌதிக விஞ்ஞானம் / உயிரியல் விஞ்ஞானம்) வணிகம், ‘ஏனைய’, தொழிநுட்ப பாடத்துறை போன்ற யாதேனும் பாடப்பிரிவில் தோற்றி மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.1.2.3 3.0 இல் 3.3.1. க்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் முதல் மொழி (சிங்களம்/ தமிழ்) பாடங்களில் குறைந்த பட்சம் அதிதிறமைச் சித்தியும், கணிதத்திற்கு திறமைச் சித்தியும் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க** :

ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆரம்பக் கல்வித்துறைக்கு உள்வாங்கப்படும் மொத்த எண்ணிக்கையில் :

(i) க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றி கலைப்பாடத்துறையில் சிங்கள மொழி / தமிழ் மொழி ஒரு பாடமாக கற்ற விண்ணப்பதாரிகளின் 60% வீதமும்,

(ii) க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் சிங்கள மொழி / தமிழ் மொழியை ஒரு பாடமாக கற்காத கலைப் பிரிவின் விண்ணப்பதாரிகளில் 10%, விஞ்ஞானம் (பௌதிக விஞ்ஞானம்/ உயிரியல்) விடயத்துறையின் விண்ணப்ப தாரிகளில் 10% மற்றும் வணிக பாடப்பிரிவில் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகள் 10% வீதமும்

(iii) க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் “வேறு பாடத்துறையில்” கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகளில் 5% மற்றும் தொழில்நுட்பத் துறையில் கற்ற விண்ணப்பதாரிகளில் 5% என்பதாக அமையுமாறு உரிய விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை தெரிவு செய்யப்படும்.

(iv) குறிப்பிட்ட பாடத்துறையில் மாவட்ட/மாகாண/தேசிய என்ற அனைத்து திறமை வரிசை முறையிலும் போதுமான விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் கலைப்பாடத்துறையை சிங்கள மொழி/தமிழ் மொழி பாடம் இல்லாமல் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு மற்றும் வணிக பாடத் துறையை கற்ற விண்ணப்பதாரர்களுக்கு வரிசைப்படி முன்னுரிமை பெறும் விதத்தில் தேசிய மட்டத்தில் எஞ்சியுள்ள வெற்றிடங்களுக்காக விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **03** | **-** | **விஞ்ஞானம் (சிங்களம்)** |
| | **04** | **-** | **விஞ்ஞானம் (தமிழ்)** |
| | **05** | **-** | **விஞ்ஞானம் (ஆங்கிலம்)** |

4.2

4.2.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பௌதீகம், இரசாயனவியல் மற்றும் உயிரியல் போன்ற உயிரியல் பாடத்துறை சார்ந்த மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.2.2 3.0 இல் 3.3 உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :**

**விஞ்ஞானம் (ஆங்கில மொழி மூலம்) பாடநெறிக்காக :**

இந்த, பாடத்துறைக்காக ஆட்சேர்க்கும் முழு விண்ணப்பதாரர் எண்ணிக்கையில் 80% அளவினர் க.பொ.த. (உயர்தரம்) ஆங்கில மொழிமூலம் கற்ற விண்ணப்பதாரர்கள் ஆகும். எஞ்சிய 20% அளவினர் க.பொ.த. (உயர்தர) சிங்களம் / தமிழ் மொழி மூலம் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகளும் உள்ளடங்கலாக தெரிவு செய்யப்படுவர். (சிங்களம்/தமிழ் மொழிமூலம் க.பொ.த. (உயர்தர) கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்ளும் போது, அவர்களிடையே க.பொ.த (சாதாரண தர) ஆங்கில மொழி மூலம் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை உரித்தாகும்) இங்கு க.பொ.த. (உயர்தர) ஆங்கில மொழி மூலமாக கற்றலை மேற்கொண்டு தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் போதிய எண்ணிக்கையைக் கொண்டிராத சந்தர்ப்பங்களில் சேர்த்துக்கொள்ளும் அடிப்படையின் கீழ் க.பொ.த (உயர்தர) சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலமாக கற்றலை மேற்கொண்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கிடையில் எஞ்சியுள்ள வெற்றிட எண்ணிக்கை பூர்த்தி செய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **06** | **-** | **கணிதம் (சிங்களம்)** |
| | **07** | **-** | **கணிதம் (தமிழ்)** |
| | **08** | **-** | **கணிதம் (ஆங்கிலம்)** |

4.3.

4.3.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் போன்ற பௌதீக விஞ்ஞான பாடத்துறைகளை சார்ந்த பாடங்கள் மூன்றில் (03) இல் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.3.2 3.0 இல் 3.3.1 க்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :**

**கணிதம் (ஆங்கில மொழி மூலம்) பாடநெறிக்காக :**

இந்த பாடத்துறைக்காக ஆட்சேர்க்கும் முழு விண்ணப்பதாரர் எண்ணிக்கையில் 80% அளவினர் க.பொ.த. (உயர்தரம்) ஆங்கில மொழிமூலம் கற்ற விண்ணப்பதாரர்கள் ஆகும். எஞ்சிய 20% அளவினர்; க.பொ.த. (உயர்தர) சிங்களம் / தமிழ் மொழி மூலம் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகளும் உள்ளடங்கலாக தெரிவு செய்யப்படுவர். (சிங்களம்/தமிழ் மொழிமூலம் க.பொ.த. (உயர்தர) கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்ளும் போது, அவர்களிடையே க.பொ.த. (சாதாரண தர) ஆங்கில மொழி மூலம் கற்றலை மேற்கொண்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை உரித்தாகும்) இங்கு க.பொ.த. (உயர்தர) ஆங்கில மொழி மூலமாக கற்றலை மேற்கொண்டு தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் போதிய எண்ணிக்கையைக் கொண்டிராத சந்தர்ப்பங்களில் சேர்த்துக்கொள்ளும் அடிப்படையின் கீழ் க.பொ.த (உயர்தர) சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலமாக கற்றலை மேற்கொண்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கிடையில் எஞ்சியுள்ள வெற்றிட எண்ணிக்கை பூர்த்தி செய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **09** | **-** | **சமூக விஞ்ஞானம் (சிங்களம்)** |
| | **10** | **-** | **சமூக விஞ்ஞானம் (தமிழ்)** |

4.4

4.4.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் வரலாறு, புவியியல், அரசியல் விஞ்ஞானம், பொருளியல் போன்ற பாடங்களில் குறைந்த பட்சம் ஒரு பாடத்திலும் அதனுடன் கலைப் பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.4.2 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பொருளியல் பாடத்துடன் வணிகப் பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.4.3 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் புவியியல் பாடத்துடன் 'வேறு' பாடத்துறையில் மூன்று ( 03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.4.4 3.0 இல் 3.3.1 க்குரிய உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் வரலாறு / குடியுரிமைக் கல்வி/ புவியியல் போன்ற பாடங்களில் ஒரு பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.4.5 ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த பாடத்துறைக்காக சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த எண்ணிக்கையில் 60% வீதம் 4.4.1 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளும், 30% வீதம் 4.4.2 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளும், 10% வீதம் 4.4.3. இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளும் உள்ளடங்கும் வகையில் தகைமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். ஏதேனும் ஒரு பாடத்துறையின் கீழ் போதிய தகைமை பெற்றோர் எண்ணிக்கை இல்லாத சந்தர்ப்பங்களில் 4.4.1, 4.4.2, 4.4.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு வரிசை அடிப்படையில் முன்னுரிமை கிடைக்கும் விதத்தில் எஞ்சிய வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

| பாடநெறி இலக்கம் | 11 - | பௌத்த தர்மம் (சிங்களம்) |
|---|---|---|

பௌத்த தர்ம பாடநெறிக்கு புத்த பிக்குகள், பெண் துறவிகள், புத்தசாசன அமைச்சின் கீழ் உள்ள பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட தசசில் மாதாக்கள் மற்றும் துறவறம் சாராத விண்ணப்பதாரர்களும் விண்ணப்பிக்க முடியும்.

4.5

4.5.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பௌத்த தர்மம், பௌத்த நாகரிகம், பாலி, சமஸ்கிருதம் மற்றும் சிங்களம் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.5.2 3.0 இல் 3.3.1 க்குரிய உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் பௌத்த தர்ம பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் / அடிப்படை பிரிவெனா இறுதிப் பரீட்சையின் போது 3.0 இல் 3.3.2 இன் கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல்.

அத்துடன்

4.5.3 பௌத்த தர்மாச்சாரிய பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.5.4 பிராச்சீன ஆரம்ப பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.5.5 அறநெறிப் பாடசாலை இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

4.5.6 மதகுருமார்களுக்காக சாரிபுத்த தேசிய கல்வியியற் கல்லூரி (நிட்டம்புவ) ஒதுக்கப்பட்டுள்ளது. தகைமை பெற்ற பிக்குணிமார்கள் அல்லது தசசில் மாதாக்கள் உள்ளார்கள் எனின் மதகுருமார் அடிப்படையில் சேர்க்கப்பட்டு, சாரிபுத்த கல்வியியற் கல்லூரிக்கு (தம்பதெனிய) அனுப்பப்படுத்தப்படுவார்கள்.

4.5.7 மதகுருமார் விண்ணப்பதாரரிடையே 2023 க.பொ.த. (உயர்தர) சித்தி பெற்ற துறவற விண்ணப்பதாரிகள் போதிய தொகையில் இல்லாவிடில் 2022, 2021, 2020, 2019 எனும் அண்மித்த வருடங்களில் க.பொ.த. (உயர்தர.) சித்தி பெற்ற மதகுருமார்களுக்கு முன்னுரிமை கிடைக்குமாறு தேவையான எஞ்சிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை தெரிவு செய்யப்படும்.

4.5.8 வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், மதகுருமார்களுக்கான கிடைக்கக்கூடிய வெற்றிடங்களுக்கு போதிய எண்ணிக்கையில் குருமார்களிடமிருந்து விண்ணப்பதாரர்கள் இல்லாதபோது, மீதமுள்ளவர்கள் சாரிபுத்த தேசிய கல்வியியல் கல்லூரிக்கு (தம்பதெனிய) சாதாரண விண்ணப்பதாரர்களிடமிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

4.5.9 தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசை

(அ) 4.5.1., 4.5.2 மற்றும் 4.5.3 சான்றிதழ்களைக் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(ஆ) 4.5.1., 4.5.2 மற்றும் 4.5.4 சான்றிதழ் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(இ) 4.5.1, 4.5.2 மற்றும் 4.5.5 சான்றிதழ் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(ஈ) 4.5.1. மற்றும் 4.5.2. சான்றிதழ் கொண்ட விண்ணப்பதாரர்கள்

| பாடநெறி இலக்கம் | 12 - | இந்து சமயம் (தமிழ்) |
|---|---|---|

4.6.

4.6.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் இந்து சமயம், இந்து நாகரிகம், மற்றும் சமஸ்கிருதம் போன்ற பாடங்களில் ஒரு பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.6.2 3.0 இல் 3.3.1 க்குரிய உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சைவநெறி பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

உள்ளடங்கலாக

4.6.3 சைவ சித்தாந்த பண்டிதர் சான்றிதழைப் பெற்றிருத்தல்

அல்லது / மற்றும்

4.6.4 சைவப் புலவர் சான்றிதழை பெற்றிருத்தல்

அல்லது / மற்றும்

4.6.5 இளம் சைவ புலவர் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

4.6.6 தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசை

(அ) 4.6.1., 4.6.2 மற்றும் ஏனைய அனைத்து சான்றிதழ் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(ஆ) 4.6.1., 4.6.2, 4.6.5. மற்றும் ஏனைய சான்றிதழ் இரண்டில் ஒன்றை பெற்ற விண்ணப்பதாரர்கள்
(இ) 4.6.1., 4.6.2 மற்றும் ஏனைய சான்றிதழ் மூன்றில் ஒன்றை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்கள்
(ஈ) 4.6.1., 4.6.2. சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரர்கள்

| பாடநெறி இலக்கம் | 13 - | இஸ்லாம் (தமிழ்) |
|---|---|---|

4.7

4.7.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகம் மற்றும் அரபு போன்ற பாடங்களில் ஒன்றுடன் மூன்று பாடங்களில் (03) ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

அத்துடன்;

4.7.2 3.0 இல் 3.3.1 க்குரிய உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இஸ்லாம் சமய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்

உள்ளடங்கலாக

4.7.3 அல் ஆலிம் பரீட்சையில் (ஆரம்ப பரீட்சையில் சகல பாடங்களிலும் மற்றும் இறுதிப் பரீட்சையில் சகல பாடங்களிலும் ஆகிய இரண்டிலும்) சித்தி பெற்றிருத்தல்,

அல்லது

4.7.4 அல் ஆலிம் ஆரம்ப பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல்

மற்றும்

4.7.5 மௌலவி சான்றிதழ் பெற்றிருத்தல்

4.7.6 தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசை

(அ) 4.7.1., 4.7.2, 4.7.3. மற்றும் 4.7.5. சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(ஆ) 4.7.1., 4.7.2, 4.7.4. மற்றும் 4.7.5. சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(இ) 4.7.1., 4.7.2 மற்றும் 4.7.5. சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்
(ஈ) 4.7.1. மற்றும் 4.7.2. சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்

| | | |
|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **14 -** | **கத்தோலிக்க சமயம் /கிறிஸ்தவ சமயம் (சிங்களம்)** |
| | **15 -** | **கத்தோலிக்க சமயம் /கிறிஸ்தவ சமயம் (தமிழ்)** |

4.8

4.8.1

4.8.1.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஏதேனும் (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.8.1.2. 3.0 இல் 3.3.1 க்குரிய உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் கத்தோலிக்க சமய / கிறிஸ்தவ சமய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.8.1.3. விண்ணப்பதாரர்கள் கத்தோலிக்க சமயத்தில் விசுவாசம் உடையவர் என்பதற்கான கத்தோலிக்க ஆயர் பதவிச் சான்றிதழ் / கிறிஸ்தவ சமயத்தில் விசுவாசம் என்பதற்கான தேசிய கிறிஸ்தவ சபையின் சான்றிதழ் பெற்றிருத்தல்;

அத்துடன்

4.8.2 கத்தோலிக்க சமய விண்ணப்பதாரர்களை தெரிவு செய்தல் பின்வரும் தகைமைகளுக்கு வரிசை அடிப்படையில் முன்னுரிமை வழங்கி மேற்கொள்ளப்படும்.

4.8.2.1 தேசிய குருத்துவக் கல்லூரியில் இறையியல் தொடர்பான நான்கு வருட பாடநெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல்

அல்லது

4.8.2.2 தேசிய குருத்துவக் கல்லூரியில் தத்துவம் தொடர்பான பாடநெறிக்கான சான்றிதழ் பெற்றிருத்தல்

அல்லது

4.8.2.3 இறையியல் கல்லூரியில் மூன்று வருட சமயக் கல்வி தொடர்பான பாடநெறி சான்றிதழ் பெற்றிருத்தல்

அல்லது

4.8.2.4 துறவி / துறவறப்பெண் ஆகுவதற்கான சமயக்கல்வி மற்றும் பயிற்சி பாடநெறி (Novitiate) சிறந்த முறையில் கற்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதற்காக துறவற சபையின் நிறுவனத் தலைவரினால் / தலைவியினால் அல்லது உரிய மாவட்ட ஆயரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் பெற்றிருத்தல்.

4.8.2.5 தேசிய மறைக் கல்வி மையத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க அறநெறி ஆசிரியர் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல். அதாவது,

மறைநெறி ஆசிரியர் (03) (இறுதி)
அல்லது
மறைநெறி ஆசிரியர் (02) (மத்திய)
அல்லது
மறைநெறி ஆசிரியர் (01) (ஆரம்ப)

4.8.2.6 க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் கிறிஸ்தவ சமயம் / கிறிஸ்தவ நாகரிக பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்

4.8.3 கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரர்களை தெரிவு செய்தல் தொடரொழுங்கு அடிப்படையில் பின்வரும் தகைமைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

4.8.3.1 பிலிமத்தலாவ இலங்கை இறையியல் கல்லூரியினால் நடாத்தப்படும் இறையியல் பட்டதாரி சான்றிதழை பெற்றிருத்தல்.

4.8.3.2 பிலிமத்தலாவ இலங்கை இறையியல் கல்லூரியினால் நடாத்தப்படும் இறையியல் டிப்ளோமா சான்றிதழை பெற்றிருத்தல்.

4.8.3.3 தேசிய கிறிஸ்தவ சபை ஊடாக நடாத்தப்படும் சமய அறிவு தொடர்பான தேசிய சான்றிதழ் (தர்மாசிரியர்) பெற்றிருத்தல்.

4.8.3.4 க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் கிறிஸ்தவ சமயம் / கிறிஸ்தவ நாகரிகம் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :**

(i) சேர்த்துக்கொள்ளப்படும் முழு விண்ணப்பதாரர் எண்ணிக்கையில் 40% வீதம் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மத குருமார்களின் தகைமை வரிசையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். 40% வீதம் மதகுருமார் எண்ணிக்கையினர் முன்வராத பட்சத்தில் அந்த வெற்றிடங்களுக்கு துறவறம் சாரா விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(ii) சேர்த்துக்கொள்ளப்படும் முழு துறவறம் சாரா விண்ணப்பதாரர் எண்ணிக்கையில் 85% வீதம் 4.8.1. இன் கீழ் தகைமை பெறும் கத்தோலிக்க துறவறம் சாரா விண்ணப்பதாரர்களிடையில் 4.8.2. இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களுள் தொடரொழுங்கு அடிப்படையை மையமாக வைத்து தெரிவு செய்யப்படும். 85% வீதம் பூர்த்தி செய்வதற்கு தகைமைகளைக் கொண்ட கத்தோலிக்க துறவறம் சாரா விண்ணப்பதாரிகள் இல்லையெனில் அந்த வெற்றிட எண்ணிக்கை கிறிஸ்தவ துறவறம் சாரா விண்ணப்பதாரிகளைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும்.

(iii) சேர்த்துக்கொள்ளப்படும் முழு துறவறம் சாரா விண்ணப்பதாரர் எண்ணிக்கையில் 15% வீதம் 4.8.1. இன் கீழ் தகைமை பெறும் கிறிஸ்தவ துறவறம் சாரா விண்ணப்பதாரர்களிடையில் 4.8.3. இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களுள் தொடரொழுங்கு அடிப்படையை மையமாக வைத்து தெரிவு செய்யப்படும். 15% வீதம் பூர்த்தி செய்வதற்கு தகைமைகளைக் கொண்ட கிறிஸ்தவ துறவறம் சாரா விண்ணப்பதாரிகள் இல்லையெனில் அந்த வெற்றிட எண்ணிக்கை கத்தோலிக்க துறவறம் சாரா விண்ணப்பதாரிகளைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும்.

(iv) கத்தோலிக்க மற்றும் சிறிஸ்தவ துறவறம் சாரா விண்ணப்பதாரிகள் பொதுவாக அவர்களின் Z புள்ளியின் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு, கிறிஸ்தவ துறவறம் சாரா விண்ணப்பதாரிகளில் 15% வீதம் சேர்த்துக்கொள்ளப்படும் மாவட்டம் எது என்பதை நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் அதிக Z புள்ளி கொண்ட கிறிஸ்தவ விண்ணப்பதாரிகள் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்ட அடிப்படையிலும் அங்கு நிலவும் வெற்றிட எண்ணிக்கை அடிப்படையாகக் கொண்டும் தீர்மானிக்கப்படும்.

(v) 2023 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தர) கற்ற மதகுருமார்களில் உரிய தகைமைகளோடு கூடிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை போதுமானளவு இல்லாதவிடத்து 2022, 2021, 2020, 2019 ஆம் வருடங்களின் தொடரொழுங்கின் அண்மித்த வருடங்களில் க.பொ.த. (உயர்தர) சித்திபெற்ற மதகுருமார்களுக்கு முன்னுரிமை கிடைக்குமாறு தேவையான எஞ்சிய விண்ணப்பதாரர் எண்ணிக்கையினர் தெரிவு செய்யப்படுவர்.

| **பாடநெறி இலக்கம்** | **16 -** | **சிங்கள மொழியும் இலக்கியமும்** |
|---|---|---|

4.9

4.9.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சிங்கள மொழிப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.9.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சிங்கள மொழி மற்றும் இலக்கியப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்

| **பாடநெறி இலக்கம்** | **17 -** | **தமிழ் மொழியும் இலக்கியமும்** |
|---|---|---|

4.10

4.10.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் தமிழ் மொழிப்பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.10.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

| **பாடநெறி இலக்கம்** | **18 -** | **ஆங்கில மொழியும் இலக்கியமும்** |
|---|---|---|

4.11

4.11.1

4.11.1.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஆங்கில மொழி (பாட எண் 73) உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்

மற்றும்

4.11.1.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியும் / ஆங்கில இலக்கிய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்

அல்லது

4.11.2

4.11.2.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்

மற்றும்

4.11.2.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில இலக்கிய பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியும் ஆங்கில மொழிப் பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.11.3

4.11.3.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.11.3.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் குறைந்த பட்சம் அதிதிறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :**

ஆட்சேர்க்கும் போது 4.11.1 இன் கீழ் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கி அவர்களின் Z புள்ளி பெறுமானத் தொடரொழுங்கு அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு, சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை பூர்த்தியாக்கப்படுவதற்கு அந்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாவிடின் 4.11.2 இன் கீழ் விண்ணப்பித்த தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளில் இருந்து அவர்களின் Z புள்ளி தொடரொழுங்கு அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படும். உரிய ஆட்சேர்க்கப்படும் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு அந்த எண்ணிக்கையும் போதாதெனில் 4.11.3 இன் கீழ் விண்ணப்பித்த தகைமைகளோடு கூடிய விண்ணப்பதாரிகள் அவர்களின் Z புள்ளி தொடரொழுங்கு அடிப்படையில் முன்னுரிமை கிடைக்கும் விதத்தில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

4.11.4 தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசை

(i) 4.11.1 இன் கீழ் தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் அவர்களின் Z புள்ளி தொடரொழுங்கு அடிப்படையில் முன்னுரிமை வழங்கி தெரிவு செய்யப்படுவர்.

(ii) இதற்கு அப்பால் மேலும் நிலவும் வெற்றிடங்கள் 4.11.2 இல் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் அவர்கள் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில இலக்கிய பாடத்தில் பெற்ற தரத்தை மேலிருந்து கீழாக வரிசைப்படுத்தி மற்றும் அதனுடன் Z புள்ளியையும் ஒப்பிட்டு தெரிவு செய்யப்படும்.

(iii) மேலே இலக்கம் (ii) இன் கீழ் தெரிவு செய்த பின்பு மேலும் வெற்றிடங்கள் நிலவுமெனில் 4.11.3. இல் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள், அவர்கள் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்திற்கு பெற்றுக்கொண்ட தரத்தை மேலிருந்து கீழாக வரிசைப்படுத்தி மற்றும் அதனுடன் Z புள்ளியையும் ஒப்பிட்டு தெரிவு செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **19 -** | **சித்திரம் (சிங்களம்)** |
| | **20 -** | **சித்திரம் (தமிழ்)** |

4.12.

4.12.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்திர பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.12.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுக்கு மேலாக க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்திர பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.12.3 4.12.1 மற்றும் 4.12.2 தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கிடையில் இருந்து 3.7 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைக்கு அமைவாக தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **21 -** | **நடனம் - (கீழைத்தேய)** |

4.13

4.13.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் நடனம் (கீழைத்தேய) பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.13.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுக்கு மேலாக க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் நடனம் (கீழைத்தேய) பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.13.3 4.13.1 மற்றும் 4.13.2 தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்து 3.7 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைக்கு அமைவாக தெரிவு செய்தல் இடம்பெறும்.

| | | |
|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **22 -** | **நடனம் - (பரதம்)** |

4.14

4.14.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் நடனம் (பரதம்) பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.14.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுக்கு மேலாக க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் நடனம் (பரதம்) பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.14.3. 4.14.1 மற்றும் 4.14.2 தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்து 3.7 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைக்கு அமைவாக தெரிவு செய்தல் இடம்பெறும்.

| | | |
|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **23 -** | **சங்கீதம் (கீழைத்தேய)** |

4.15

4.15.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சங்கீதம் (கீழைத்தேய) பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.15.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுக்கு மேலாக க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சங்கீதம் (கீழைத்தேய) பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.15.3 4.15.1 மற்றும் 4.15.2 தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்து 3.7 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைக்கு அமைவாக தெரிவு செய்தல் இடம்பெறும்.

| | | |
|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **24 -** | **சங்கீதம் (கர்நாடகம்)** |

4.16

4.16.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் சங்கீதம் (கர்நாடகம்) பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.16.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சங்கீதம் (கர்நாடகம்) பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.16.3 4.16.1 மற்றும் 4.16.2 தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களில் இருந்து 3.7 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைக்கு அமைவாக தெரிவு செய்தல் இடம்பெறும்.

| | | |
|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **25 -** | **மேற்கத்தேய சங்கீதம் (ஆங்கிலம்)** |

4.17

4.17.1

4.17.1.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் மேற்கத்தேய சங்கீத பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.17.1.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி / ஆங்கில இலக்கிய பாடத்தில் சாதாரண சித்தியுடன் மேற்கத்தேய சங்கீத பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.17.2

4.17.2.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.17.2.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி / ஆங்கில இலக்கிய பாடத்தில் சாதாரண சித்தியுடன் மற்றும் மேற்கத்தேய சங்கீத பாடத்தில் சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்

மற்றும்

4.17.2.3 கல்வியியற் கல்லூரி நிறுவக சபை /கல்விச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மேற்கத்தேய சங்கீதம் தொடர்பான 05வது வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் (கோட்பாடு மற்றும் பிரயோகம்)

அல்லது

4.17.3

4.17.3.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.17.3.2 3.0 இல் 3.3.1 க்குரிய உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி / ஆங்கில இலக்கிய பாடத்தில் சாதாரண சித்தியுடன் மற்றும் மேற்கத்தேய சங்கீத பாடத்தில் சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.17.3.3 க.பொ.த (உயர்தர) பரீட்சையில் மேற்கத்தேய சங்கீத பாடத்தை மேலதிக பாடமாக சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.17.4

4.17.4.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.17.4.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் மேற்கத்தேய சங்கீத பாடத்தில் விசேட சித்தியும் ஆங்கில மொழி பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி / ஆங்கில இலக்கிய பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க :**

(i) மேற்கத்தேய சங்கீத பாடநெறிக்காக நடாத்தப்பட்ட பிரயோகப் பரீட்சையில் திருப்திகரமான திறமை மட்டத்திற்கு அண்மித்திருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகளை தெரிவு செய்யும்போது மேலே 4.17.1, 4.17.2, 4.17.3, 4.17.4 வரிசைக்கிரமப்படி முன்னுரிமை வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **26 -** | **நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)** |
| | **27 -** | **நாடகமும் அரங்கியலும் (தமிழ்)** |

4.18

4.18.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.18.2 3.0 இல் 3.3.1. உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

4.18.3 4.18.1 மற்றும் 4.18.2 இல் குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுள் 3.7 இல் குறிப்பிட்ட முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

| | | |
|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **28 -** | **சுகாதாரம் மற்றும் உடற்கல்வி (சிங்களம்)** |
| | **29 -** | **சுகாதாரம் மற்றும் உடற்கல்வி (தமிழ்)** |
| | **30 -** | **சுகாதாரம் மற்றும் உடற்கல்வி (ஆங்கிலம்)** |

4.19

4.19.1. 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.19.2 3.0 இல் 3.3.1. உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில் சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்

அத்துடன்

4.19.3 அங்கீகரிக்கப்பட்ட தடகள மெய்வல்லுநர் விளையாட்டுக்கள், ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டுக்கள் சம்பந்த மான தேர்ச்சிகள் / திறமைகள் பெற்றிருத்தல் (இதன் கீழ் வேறுபட்ட விளையாட்டுக்கள்/நிகழ்ச்சிகள் மூன்றுக்கு சமர்ப்பிக்கின்ற சான்றிதழ்கள் கவனத்திற்கொள்ளப்பட்டு 4.19.3.1. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய ஆகக்கூடுதலாக 75 புள்ளிகள் வழங்கப்படும்).

4.19.3.1 விளையாட்டுக்கள் / நிகழ்ச்சிகளுக்காக புள்ளிகள் வழங்கப்படுவதற்குரிய முன்னுரிமைத் தொடரொழுங்கு கீழே காட்டப்பட்டுள்ளதுடன் அதற்காக உரிய அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக்களின் பெயர்ப் பட்டியல் 4.19.5 – X அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**விளையாட்டு / நிகழ்ச்சி முன்னுரிமை தொடரொழுங்கு**

| *தொடர் இல.* | *மட்டம்/ விடயம்* | *தனி* | *குழு* | *இடம்/ தரம்* | *புள்ளி* |
|---|---|---|---|---|---|
| 01 | சர்வதேச மட்டம் | தனி | - | 1 | 25 |
| 02 | சர்வதேச மட்டம் | தனி | - | 2 | 24 |
| 03 | சர்வதேச மட்டம் | தனி | - | 3 | 23 |
| 04 | சர்வதேச மட்டம் | - | குழு | 1 | 24 |
| 05 | சர்வதேச மட்டம் | - | குழு | 2 | 23 |
| 06 | சர்வதேச மட்டம் | - | குழு | 3 | 22 |
| 07 | சர்வதேச தேசிய பிரதிநிதி | தனி | குழு | - | 21 |
| 08 | தேசிய மட்டம் | தனி | - | 1 | 20 |

| *தொடர் இல.* | *மட்டம்/ விடயம்* | *தனி* | *குழு* | *இடம்/ தரம்* | *புள்ளி* |
|---|---|---|---|---|---|
| 09 | தேசிய மட்டம் | தனி | - | 2 | 19 |
| 10 | தேசிய மட்டம் | தனி | - | 3 | 18 |
| 11 | தேசிய மட்டம் | - | குழு | 1 | 19 |
| 12 | தேசிய மட்டம் | - | குழு | 2 | 18 |
| 13 | தேசிய மட்டம் | - | குழு | 3 | 17 |
| 14 | தேசிய விளையாட்டு சங்கங்கள் மற்றும் பாடசாலை விளையாட்டு சங்கங்கள் நடத்தும் தேசிய விளையாட்டு போட்டி | தனி | - | 1 | 16 |
| 15 | தேசிய விளையாட்டு சங்கங்கள் மற்றும் பள்ளி விளையாட்டு சங்கங்கள் நடத்தும் தேசிய விளையாட்டு போட்டி | தனி | - | 2 | 15 |
| 16 | தேசிய விளையாட்டு சங்கங்கள் மற்றும் பள்ளி விளையாட்டு சங்கங்கள் நடத்தும் தேசிய விளையாட்டு போட்டி | தனி | - | 3 | 14 |
| 17 | தேசிய விளையாட்டு சங்கங்கள் மற்றும் பள்ளி விளையாட்டு சங்கங்கள் நடத்தும் தேசிய விளையாட்டு போட்டி | - | குழு | 1 | 15 |
| 18 | தேசிய விளையாட்டு சங்கங்கள் மற்றும் பள்ளி விளையாட்டு சங்கங்கள் நடத்தும் தேசிய விளையாட்டு போட்டி | - | குழு | 2 | 14 |
| 19 | தேசிய விளையாட்டு சங்கங்கள் மற்றும் பள்ளி விளையாட்டு சங்கங்கள் நடத்தும் தேசிய விளையாட்டு போட்டி | - | குழு | 3 | 13 |
| 20 | மாகாண மட்டம் | தனி | - | 1 | 16 |
| 21 | மாகாண மட்டம் | தனி | - | 2 | 15 |
| 22 | மாகாண மட்டம் | தனி | - | 3 | 14 |
| 23 | மாகாண மட்டம் | - | குழு | 1 | 15 |
| 24 | மாகாண மட்டம் | - | குழு | 2 | 14 |
| 25 | மாகாண மட்டம் | - | குழு | 3 | 13 |
| 26 | றெஜிமென்ட் சார்ஜன்ட் மேஜர் /அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் 1 (இராணுவ/காவல்துறை)/ குழு பிரதம சாதாரண உத்தியோகத்தர் (கடற்படை) /பிரதான அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் (விமானப்படை)/ ஹர்மன் லோஸ் கிண்ண வெற்றியாளர்/ டி.சொய்ஸா கிண்ண வெற்றியாளர் / மாணவர் படையணி (கெடெட்) கீழைத்தேயம் / மேற்கத்தேய பாண்ட் வாத்தியம் (ஆண்/ பெண்) வெற்றியாளர் | - | - | - | 10 |
| 27 | சனாதிபதி சாரணியமும் / பெண் சாரணியமும் | - | - | - | 10 |
| 28 | சாஜன்ட மேஜர் /அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் 11 (இராணுவம்/காவல்துறை) / நிர்வாக சாதாரண உத்தி யோகத்தர் (கடற்படை) /அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தி யோகத்தர் (விமானப்படை) / ஹர்மன் லோஸ் கிண்ண இரண்டாவது வெற்றியாளர் / டி.சொய்ஸா கிண்ண இரண் டாவது வெற்றியாளர்/மாணவர் படையணி (கெடெட்) கீழைத்தேயம்/மேற்கத்தேய பாண்ட் வாத்தியம் (ஆண்/ பெண்) இரண்டாவது வெற்றியாளர் | - | - | | 09 |
| 29 | கல்வி வலய மட்டம் / மாவட்ட மட்டம் | தனி | - | 1 | 10 |
| 30 | கல்வி வலய மட்டம் / மாவட்ட மட்டம் | தனி | - | 2 | 09 |

| *தொடர் இல.* | *மட்டம்/ விடயம்* | *தனி* | *குழு* | *இடம்/ தரம்* | *புள்ளி* |
|---|---|---|---|---|---|
| 31 | கல்வி வலய மட்டம் / மாவட்ட மட்டம் | தனி | - | 3 | 08 |
| 32 | கல்வி வலய மட்டம் / மாவட்ட மட்டம் | - | குழு | 1 | 09 |
| 33 | கல்வி வலய மட்டம் / மாவட்ட மட்டம் | - | குழு | 2 | 08 |
| 34 | கல்வி வலய / மாவட்ட மட்டம்/ பதவியணி சார்ஜன்ட் (Staff Sergeant) (இராணுவ/காவல்துறை) / பிரதம சாதாரண உத்தியோகத்தர் (கடற்படை) /அதிகாரம் அளிக்கப்பட்ட சார்ஜன்ட் உத்தியோகத்தர் (விமானப்படை) /ஹர்மொன் லோஸ் கிண்ண மூன்றாவது நிலை / டி.சொய்ஸா கிண்ண மூன்றாவது நிலை | - | குழு | 3 | 07 |
| 35 | கல்விக் கோட்ட / பிரதேச செயலாளர் பிரிவு மட்டம் | தனி | | 1 | 06 |
| 36 | கல்விக் கோட்ட / பிரதேச செயலாளர் பிரிவு மட்டம் | தனி | | 2 | 05 |
| 37 | கல்விக் கோட்ட / பிரதேச செயலாளர் பிரிவு மட்டம் | தனி | | 3 | 04 |
| 38 | கல்விக் கோட்ட / பிரதேச செயலாளர் பிரிவு மட்டம் | | குழு | 1 | 05 |
| 39 | கல்விக் கோட்ட / பிரதேச செயலாளர் பிரிவு மட்டம்/ பற்றாலியன் வெற்றியாளர் (ஆண் பற்றாலியன் 29/பெண் 09) | | குழு | 2 | 04 |
| 40 | கல்விக் கோட்ட / பிரதேச செயலாளர் பிரிவு மட்டம் | | குழு | 3 | 03 |

4.19.4 க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்திற்கு விண்ணப்பதாரி தோற்றியிருப்பின் அதற்குப் பெற்றுக்கொண்டுள்ள சித்திக்கு அமைய கீழே காட்டப்பட்டுள்ள வகையில் மேலதிக புள்ளிகள் உரித்தாவதோடு அவை விளையாட்டுச் சான்றிதழ்களுக்குரிய புள்ளிகளுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டு மொத்த புள்ளிகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும்.

A சித்தி - 05
B சித்தி - 03
C சித்தி - 02
S சித்தி - 01

4.19.5 *கீழ்க்காணும் விடயம் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்:*

(i) உடற்கல்வி பாடநெறிக்கு தெரிவு செய்யும்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் விண்ணப்பதாரர்களினது முழுமையான விளையாட்டு திறமை புள்ளி வரிசைக் கிரமப்படி கீழே காட்டப்பட்டுள்ள செயன்முறையின்படி தேர்ந்தெடுக்கப்படுவர். (4.19.3.1 அட்டவணை மற்றும் 4.19.4 அதற்காக உரியதாகும்)

(ii) ஆட்சேர்க்கும் போது தடகள விளையாட்டுப் போட்டிக்கான குழு இலக்கம் 01 இன் கீழ் 30 % ம் கரப்பந்து (Volleyball), வலைப்பந்து (Netball) மற்றும் காற்பந்து (Foot ball) போன்ற விளையாட்டுக்களின் குழு இலக்கம் 02 இன் கீழ் 30 % ம் மற்றும் 4.19.5 – X இன் கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு பிறிதும் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக்களின் குழு இலக்கம் 03 இன் கீழ் 40 % ம் ஆகுமாறு விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படுவர். வெற்றிடங்களுக்காக ஆட்சேர்க்கும் போது குழு இலக்கம் 1,2,3 எனும் தொடரொழுங்கில் முன்னுரிமை பெறுமாறு வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

(iii) விண்ணப்பதாரிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கும் நியதிகளுக்கு அமைய புள்ளிகள் வழங்கப்படுவதோடு, ஒவ்வொரு குழுவின் கீழ் வெவ்வேறாக ஈட்டிக்கொண்ட புள்ளிகளுக்கிடையில் உயரிய (highest) புள்ளிப் பெறுமதி உரியதான குழுவின் அடிப்படையில் விண்ணப்பதாரி உரித்தாகும் குழு இலக்கம் தீர்மானிக்கப்பெறும். யாதேனும் விண்ணப்பதாரி ஒருவர் குழு இலக்கம் 02 அல்லது குழு இலக்கம்

03 இன் கீழ் உயரிய சம மொத்தப் புள்ளிகளைப் பெற்றிருப்பின் உயரிய வெற்றி பெற்ற சான்றிதழுக்கு உரித்தான குழுவின் கீழ் அவர் கருத்திற்கொள்ளப்படுவார். அதன்போது ஒவ்வொரு குழுவின் கீழும் முன்வைக்கப்படும் உயரிய சான்றிதழுக்கு சமமான புள்ளி பெறப்படுமாயின் குழு இலக்கம் 01, 02, 03 எனும் தொடரொழுங்குக்கு அமைய முன்னுரிமை கிடைக்குமாறு விண்ணப்பதாரிகள் குழுக்களாக்கப்படுவர்.

(iv) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் (சர்வதேசம்) - தெற்காசிய, ஆசிய, காமன்வெல்த், உலக சாம்பியன்ஷிப், ஒலிம்பிக் விளையாட்டுகள் போன்ற சர்வதேசப் போட்டிகள் இளைஞர், கனிஷ்ட மற்றும் சிரேஸ்ட பிரிவுகளில் நடைபெறுகின்றன, இதில் இலங்கையின் தேசிய விளையாட்டு அணிகள் அல்லது பாடசாலை தேசிய விளையாட்டு அணிகள் கல்வி அமைச்சகம் / விளையாட்டு அமைச்சகம் மற்றும் அவற்றின் பதிவு செய்யப்பட்ட தேசிய விளையாட்டு சங்கங்கள் மூலம் பங்கேற்கின்றன. (பாடசாலை விளையாட்டுக் குழுவில் தனிப்பட்ட ரீதியில் பங்குபற்றிய சர்வதேசப் போட்டிகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது). மேலும் சர்வதேச போட்டிச் சான்றிதழ்கள் கருத்திற் கொள்ளப்படுவது குறைந்த பட்சம் உரிய விளையாட்டுக்காக தேசிய மட்ட போட்டியில் முதலாம், இரண்டாம், அல்லது மூன்றாம் இடம் பெற்றிருந்தால் மாத்திரமே. அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்ற அல்லது சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்க, உரிய தேசிய அணிக்கான தெரிவு செய்ய சோதிப்பதற்கான அழைப்புக் கடிதம் மற்றும் தேர்வு செய்யப்பட்டதாக தேசிய சங்கம் அளித்த கடிதத்தை நேர்முகப்பரீட்சை குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டியது அவசியம்.

(v) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டி (தேசிய மட்டம்) - கல்வி அமைச்சு / விளையாட்டு அமைச்சு/ தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளும் மாகாணக் கல்வித் திணைக்களம் / மாகாண விளையாட்டு அமைச்சு / தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மாகாண மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளும் மாகாண விளையாட்டு அமைச்சு / தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மாவட்ட மட்டத்திலான/ பிரதேச செயலாளர் பிரிவிலான விளையாட்டுப் போட்டிகள் / மாகாண கல்வி திணைக்களம் மூலமாக ஒழுங்கு செய்யப்பட்ட கல்வி வலய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கல்விக் கோட்ட மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளும், இதற்காக செல்லுபடியாகும்.

(vi) விளையாட்டு அமைச்சில் மற்றும் கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்ட "A" தர குழுக்களுக்கான போட்டிகளில் 1ம், 2ம் மற்றும் 3ம் இடங்களைப் பெற்றவர்களுக்கு மாத்திரம் அப் போட்டிகளில் அவ்வொழுங்கில் முன்னுரிமை வழங்கப்படும்.

(vii) 2023 க.பொ.த (உயர்தர) பெறுபேற்றின் அடிப்படையில் விண்ணப்பிப்பவர்களுக்காக 2019.01.01 ஆந் திகதி தொடக்கம் 2023.12.31 ஆந் திகதி வரை பெற்றுக் கொண்ட விளையாட்டு வெற்றி சான்றிதழ்களும்,

2024 க.பொ.த (உயர்தர) பெறுபேற்றின் அடிப்படையில் விண்ணப்பிப்பவர்களுக்காக 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் 2024.12.31 ஆந் திகதி வரை பெற்றுக் கொண்ட விளையாட்டு வெற்றி சான்றிதழ்களும் இதற்காக செல்லுபடியானதாகும்.

**கவனத்திற் கொள்ள வேண்டியவை :**

(இக் காலப்பகுதிக்கு முன்னர் மற்றும் பின்னர் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் புள்ளிகள் வழங்குவதற்காக கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது என்பதோடு முன்வைக்கப்படும் அனைத்து சான்றிதழ்களும் உண்மைத்தன்மைக்காக அதற்குரிய நிறுவனத்தால் உறுதிபடுத்தப்படல் வேண்டும்).

(viii) அக் காலப்பகுதிக்குரிய விண்ணப்பதாரிகளின் உயரிய திறன் ஆற்றல் காண்பிக்கப்பட்டுள்ள விளையாட்டின் வெற்றிச் சான்றிதழ்கள் மூன்றிற்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படுவதோடு நேர்முகப் பரீட்சைத் தினத்தில் உரிய அனைத்து சான்றிதழ்களையும் நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

(ix) அவ்வாறு புள்ளிகள் உரித்தாவது ஒரே நிகழ்ச்சியில் ஒரே வருடத்தில் பெறப்பட்ட சான்றிதழ்களில் உயரிய சான்றிதழ் ஒன்றுக்கு மட்டுமான வகையில் ஆகும்.

(x) சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கும் போது கருத்திற் கொள்ளப்படும் விளையாட்டு அமைச்சின் மற்றும் கல்வி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் பாடசாலை விளையாட்டுக் கழகங்களுக்குரிய விளையாட்டுக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| பூப்பந்து (Badminton) | டைக்குவாண்டோ ( Tae-Kon-Do) | மல்யுத்தம் | வலைப்பந்து |
| நீர் விளையாட்டுக்கள் (நீச்சல்) | எறிபந்து | கூடைப்பந்து | வூஸ்சு (Wushu) |
| ஜூடோ | ரக்பி | மென்பந்து கிரிக்கட் | டெனிஸ் |
| சைக்கிள் ஓட்டம் | பாரம் தூக்கல் | கைபந்து | குத்துச்சண்டை |
| எல்லே | காற்பந்து | தடகள விளையாட்டு | கபடி |
| கொக்கி | ஜிம்னாஸ்டிக் | கிரிக்கட் | பேஸ்போல் |
| கராத்தே | மேசைப்பந்து | கரப்பந்து | உடற் பயிற்சிகள் |
| சதுரங்கம் | கேரம் | | |

**கவனத்திற் கொள்க :**

I. சுகாதாரம் மற்றும் உடற்கல்வி பாடத்திற்கு நடத்தப்படும் நடைமுறைத் தேர்வில் குறைந்தது 40 மதிப்பெண்களைப் பெறுவது கட்டாயமாகும்.

II. விண்ணப்பதாரர்கள் தெரிவின் போது எண் 1, 2 மற்றும் 3 தொகுதி தொடரொழுங்கு வரிசைப்படி முன்னுரிமை வழங்கப்படும்.

III. தெரிவு செய்யப்பட / தகுதிபெற, மொத்த விளையாட்டுப் புள்ளிகள் 10 க்கு மேல் இருக்க வேண்டும். வெற்றிடங்கள் இருந்தாலும் விளையாட்டு புள்ளி 10 அல்லது அதற்கும் குறைவாக இருந்தால் அவர் தெரிவுக்கு தகுதியற்றவர்.

IV. பாடசாலை விளையாட்டு சங்கங்கள் அல்லது தேசிய விளையாட்டு சங்கங்கள் நடத்தும் போட்டிகள் வெவ்வேறு நிலைகளில் நடத்தப்பட்டாலும், அந்தந்த போட்டிகளுக்காக நடத்தப்படும் உயர்நிலை போட்டிகளில் வழங்கப்படும் சான்றிதழ்களுக்கு மட்டுமே நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **31 -** | **உணவு நுகர்வுத் தொழில்நுட்பவியல் (சிங்களம்)** |
| | **32 -** | **உணவு நுகர்வுத் தொழில்நுட்பவியல் (தமிழ்)** |

4.20

4.20.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் மனைப்பொருளியல் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

4.20.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் விஞ்ஞானப் பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

| | | |
|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **33 -** | **விவசாயத் தொழில்நுட்பவியல் (சிங்களம்)** |
| | **34 -** | **விவசாயத் தொழில்நுட்பவியல் (தமிழ்)** |

4.21

4.21.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல் ஆகிய மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.21.2 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் தொழினுட்பவியல் பிரிவில் உயிரியல் முறைமைகள் தொழினுட்பவியல், தொழினுட்பத்திற்கான விஞ்ஞானம் மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகிய மூன்று (03) பாடங்களில ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.21.3 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் கலைப் பாடப்பிரிவில் விவசாய விஞ்ஞானம் / விவசாயத் தொழினுட்பவியல் / உயிரியல் வளத் தொழினுட்பவியல் / உணவுத் தொழினுட்பவியல் ஆகிய பாடங்களில் ஒன்று உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.21.4 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் விஞ்ஞானம்; பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் மற்றும் விவசாயமும் உணவுத்தொழில்நுட்பமும் அல்லது நீர்வாழ் உயிரின வள தொழில்நுட்பம் ஆகிய இரண்டு பாடங்களில் ஒன்றில் திறமை சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கவனத்திற் கொள்க :**

- பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவது எண்ணிக்கையின் 50% நபர்கள் 4.21.1. இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளில் இருந்தும், 25% நபர்கள்; 4.21.2. இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளில் இருந்தும், எஞ்சிய 25% நபர்கள் 4.21.3 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளில் இருக்குமாறு தெரிவு செய்யப்படுவர்.
- எந்தவொரு பாடத்தொகுதியின் கீழும் போதுமான விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து 4.21.1, 4.21.2, 4.21.3 இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு அமைய வரிசைக்கிரம அடிப்படையில் முன்னிலைப்படுத்தி மிகுதி வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

| | | |
|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **35 -** | **வடிவமைப்புக்கலைகள் மற்றும் உற்பத்தித் தொழில்நுட்பவியல் (சிங்களம்)** |
| | **36 -** | **வடிவமைப்புக்கலைகள் மற்றும் உற்பத்தித் தொழில்நுட்பவியல் (தமிழ்)** |

4.22

4.22.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் ஏதாவது மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

4.22.2 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் நுட்பக்கலை பாடத்திற்கு திறமை சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

.

| | | |
|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **37 -** | **வடிவமைப்பும் மற்றும் பொறியியல் தொழில்நுட்பவியலும் (சிங்களம்)** |
| | **40 -** | **வடிவமைப்பும் மற்றும் பொறியியல் தொழில்நுட்பவியலும் (தமிழ்)** |

4.23

4.23.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பொறியியல் தொழினுட்பவியல், தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் பாடத்துறைக்கான மூன்றாவது பாடமாக அங்கீகரிக்கப்பட்ட பாடங்களில் ஒரு பாடம் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.23.2 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் வன்பொருள் தொழினுட்பவியல் பாட பிரிவில் குடிசார் தொழினுட்பவியல், பொறிமுறைத் தொழினுட்பவியல், மின் இலத்திரனியல், மற்றும் தகவல் தொழினுட்பவியல் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்று உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.23.3 3.0 இல் 3.3.1 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க : க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் வடிவமைப்பு மற்றும் நிர்மாணிப்புத் தொழில்நுட்பவியல், வடிவமைப்பும் இயந்திரவியல் தொழில்நட்பவியலும், வடிவமைப்பு, வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில்நுட்பவியலும் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒன்றில் சாதாரண தர சித்தி பெற்றிருத்தல் கூடுதல் தகுதியாக கருத்தில் கொள்ளப்படும்.**

**மிகவும் விசேடமானது :**

(i) இந்த பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினால் இந்தப் பாடநெறியைக் கற்பதற்காக தாம் கொண்டுள்ள தகைமைகள் தொடர்பாக விஷேட கவனத்தைச் செலுத்தி அதற்கமைய தமது விருப்பத்திற்கேற்ப, சிங்கள மொழி மூல விண்ணப்பதாரிகளினால் பாடநெறி இலக்கம் 37, 38 மற்றும் 39 வரையுள்ள பாடநெறிகளில் ஒன்றுக்கோ அல்லது சிலவற்றுக்கோ, தமிழ்மொழி மூல விண்ணப்பதாரிகளினால் பாடநெறி இலக்கம் 40, 41 மற்றும் 42 வரையான பாடநெறிகளில் ஒன்றுக்கோ அல்லது சிலவற்றுக்கோ என்றவாறாக உரிய மொழி மூலத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

(ii) இதற்காக விண்ணப்பிக்கும் போது தம்மால் உரிய மொழி மூலத்தில் விண்ணப்பிக்கப்படும் பாடநெறி இலக்கம் சரியாக உள்ளிடப்பட வேண்டும்.

(iii) ஒவ்வொரு பாடநெறிகளுக்கும் இலக்கம் 4.23.1 அல்லது 4.23.2 தகுதிகளின் படி விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளிடமிருந்து அவர்களின் Z புள்ளிப் பெறுமான தொடரொழுங்கின் படி மாவட்ட அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு ஆட்சேர்க்கப்படும் எண்ணிக்கை கீழ்க்காணும் தொடரொழுங்கின்படி தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும்.

4.23.4 தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசை

(அ) 4.23.1., 4.23.3 தகைமையுள்ள விண்ணப்பதாரிகள்
(ஆ) 4.23.2., 4.23.3 தகைமையுள்ள விண்ணப்பதாரிகள்

**பாடநெறி இலக்கம் 43 - தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம் (ஆங்கிலம்)**

4.24

4.24.1

4.24.1.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

4.24.1.2 3.0 இல் 3.3.1 ற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி / ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.24.2

4.24.2.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பப் பாடத்தில் சாதாரண சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

4.24.2.2 3.0 இல் 3.3.1 ற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பப் பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் மற்றும் ஆங்கில மொழி பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச்சித்தி / ஆங்கில இலக்கிய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்

அல்லது

4.24.3

4.24.3.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பௌதிக விஞ்ஞான பிரிவு பாடங்களில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்;

மற்றும்

4.24.3.2 3.0 இல் 3.3.1 ற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பப் பாடத்தில் குறைந்த பட்சம் அதிதிறமைச் சித்தியுடன் மற்றும் ஆங்கில மொழி பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தி / ஆங்கில இலக்கிய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்;

4.24.4.3 12 ஆவது தரத்தில் பொதுத் தகவல் தொழில்நுட்பத் தேர்வில் (GIT) சித்தி பெற்ற தகுதியான விண்ணப்ப தாரர்கள் தங்கள் Z புள்ளி தொடரொழுங்கு வரிசைக்கு உட்பட்டு இந்தப் பிரிவில் தொகுதியினர் செய்ய முன்னுரிமை பெறுவார்கள்.

அல்லது

4.24.4

4.24.4.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.23.4.2 3.0 இல் 3.3.1 ற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பப் பாடத்தில் குறைந்த பட்சம் அதிதிறமைச் சித்தியுடன் மற்றும் ஆங்கில மொழி பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தி / ஆங்கில இலக்கிய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்;

அல்லது

4.24.4.3 12 ஆவது தரத்தில் பொதுத் தகவல் தொழில்நுட்பத் தேர்வில் (GIT) சித்தி பெற்ற தகுதியான விண்ணப்ப தாரர்கள் தங்கள் Z புள்ளி தொடரொழுங்கு வரிசைக்கு உட்பட்டு இந்தப் பிரிவில் தொகுதியினர் தெரிவு செய்ய முன்னுரிமை பெறுவார்கள்.

4.24.5

4.24.5.1 2023 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் கலை, வணிக, தொழிநுட்பவியல், "வேறு" எனும் யாதேனும் பாடத்துறையின் கீழ் யாதேனும் மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.23.5.2 3.0 இல் 3.3.1 ற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பாடத்திற்கு விஷேட சித்தியுடன் ஆங்கில மொழி பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தி / ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.24.5.3 12வது தரத்தில் பொதுத் தகவல் தொழில்நுட்பத் தேர்வில் (GIT) சித்தி பெற்ற தகுதியான விண்ணப்பதாரர்கள் தங்கள் Z புள்ளி தொடரொழுங்கு வரிசைக்கு உட்பட்டு இந்தப் பிரிவில் தொகுதியினர் தெரிவு செய்ய முன்னுரிமை பெறுவார்கள்.

4.24.6 ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்குரிய இந்த பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக நேர்முகப் பரீட்சை மற்றும் பாடநெறி நடாத்தப்படுவது ருவான்புர தேசிய கல்வியியற் கல்லூரியிலாகும்.

**கவனத்திற் கொள்க** :

ஆட்சேர்க்கப்படவுள்ள விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை அவர்களின் Z புள்ளி பெறுமானத்துக்கு அமைய கீழ்க் காணும் முறைமைக்கமைய நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

அதன்படி,

(i) 4.24.1 இன் தகைமைகளுடன் விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள்

(ii) நிலவும் மாவட்ட மட்ட வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு 4.24.1 இன் கீழ் விண்ணப்பித்த விணணப்பதாரிகளின் எண்ணிக்கை போதுமாக இல்லாவிடின் 4.24.2 இன் கீழ் விண்ணப்பித்துள்ள தகைமை கொண்ட விண்ணப்பதாரிகள்.

(iii) வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை மேலும் போதுமானதாக இல்லாவிடின் அதற்காக 4.24.3, 4.24.4 மற்றும் 4.24.5 தொகுதிகளின் தொடரொழுங்குப்படி முன்னுரிமை கிடைக்குமாறாக தகைமையுள்ள விண்ணப்பதாரிகள்.

4.23.7 தெரிவு செய்யும் முன்னுரிமை தொடரொழுங்கு

(i) Z புள்ளி பெறுமான தொடரொழுங்குப்படி 4.24.1 இன் கீழ் தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள்

(ii) Z புள்ளி பெறுமான தொடரொழுங்குப்படி 4.24.2 இன் கீழ் தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள்

(iii) ஒவ்வொரு பாடத்துறையிலும் பொதுத் தகவல் தொழில்நுட்பம் (GIT) சித்தியடைந்தவர்களுக்கு அந்தந்த தொகுதியின் விண்ணப்பதாரர்களிடையே முன்னுரிமை வழங்குமாறு Z புள்ளி தொடரொழுங்கு வரிசையின்படி 4.24.3, 4.24.4, 4.24.5 இன் கீழ் தகுதிகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள், இந்த தொகுதியின் முன்னுரிமை தொடரொழுங்கு வரிசைக்கு உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**பாடநெறி இலக்கம் 44 - இரண்டாம் மொழி (சிங்களம்)**

4.25

4.25.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் சிங்கள மொழிக்கு திறமைச் சித்தி உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.25.2 3.0. இல் 3.3.1. உரிய தகைமைகளுடன் க.பொ.த (சாதாரணதர) பரீட்சையில் சிங்கள மொழி மற்றும் இலக்கிய பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமை சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.25.3 க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் இரண்டாம் மொழி (தமிழ்) பாடத்தில் அல்லது அரச கரும மொழி திணைக்களத்தின் இரண்டாம் மொழி (தமிழ்) உயர் பாடநெறி அல்லது க.பொ.த (சாதாரண தர) விருப்பத் தமிழ் மொழிப் பாடத்தில் சித்தி.

**கவனத்திற் கொள்க** :

- இப்பாடநெறிக்கு சேர்த்துக்கொள்வது க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் இரண்டாம் மொழி (தமிழ்) பாடம் அல்லது அரச கரும மொழித் திணைக்களத்தின் இரண்டாம் மொழி (தமிழ்) உயர் பாடநெறி அல்லது க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் விருப்பத்திற்குரிய தமிழ் பாடத்தில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுக்கு தொடரொழுங்குக்கு அமைய முன்னுரிமை கிடைக்கும் வகையில் Z புள்ளித் தொடரொழுங்குக்கு அமைய மேற்கொள்ளப்படும்.

- இந்த பாடநெறிக்காக விண்ணப்பிக்க வேண்டியவர்கள் நாட்டின் யாதேனும் தமிழ் மொழி மூல பாடசாலையில் சேவையாற்றுவதற்கு உடன்படுவதாயின் மட்டுமே.

| பாடநெறி இலக்கம் | 45 - | இரண்டாம் மொழி (தமிழ்) |
|---|---|---|

4.26

4.26.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் தமிழ் மொழியில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.26.2 3.0. இல் 3.3.1. உரிய தகைமைகளுடன் க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கிய பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமை சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.26.3 க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் இரண்டாம் மொழி (சிங்களம்) பாடத்தில் அல்லது அரச கரும மொழி திணைக்களத்தின் இரண்டாம் மொழி (சிங்களம்) உயர் பாடநெறி அல்லது க.பொ.த (சாதாரண தர) விருப்பத் சிங்கள மொழிப் பாடத்தில் சித்தி.

**கவனத்திற் கொள்க :**

- நேர்முகப் பரீட்சையின் பின் இப்பாடநெறிக்கு சேர்த்துக்கொள்வது க.பொ.த(சாதாரண தர) பரீட்சையில் இரண்டாம் மொழி (சிங்களம்) பாடத்தில் சித்தியடைந்திருத்தல் அல்லது அரசகரும மொழிகள் திணைக்களத்தில் இரண்டாம் மொழி (சிங்களம்) உயர் பாடநெறியில் சித்தியடைந்த அல்லது க.பொ.த (சாதாரணதர) பரீட்சையில் விருப்பத்திற்குரிய சிங்களப் பாடத்தில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுக்கு தொடரொழுங்குக்கமைய முன்னுரிமை கிடைக்கும் வகையில் Z புள்ளித் தொடரொழுங்குக்கு அமைய மேற்கொள்ளப்படும்.

- இந்த பாடநெறிக்காக விண்ணப்பிக்க வேண்டியவர்கள் நாட்டின் யாதேனும் சிங்கள மொழிமூல பாடசாலையில் சேவையாற்றுவதற்கு உடன்படுவதாயின் மட்டுமே.

| பாடநெறி இலக்கம் | 46 - | விசேட தேவைக் கல்வி (சிங்களம்) |
|---|---|---|
| | 47 - | விசேட தேவைக் கல்வி (தமிழ்) |

4.27

4.27.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

4.27.2 க.பொ.த (சாதாரணதர) பரீட்சையில் 3.0. இல் 3.3.1. உரிய தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்

**கவனத்திற் கொள்க** :

இப்பாடநெறிக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பாடநெறியைப் பூர்த்தி செய்த பின்னர் விசேட கல்வித் தேவைகளுடைய கேட்டல், பார்வை, மந்தப்புத்தி, ஒடிசம், கற்றல் குறைபாடுகள், பல்வித குறைபாடுகளுடன் கூடிய மாணவர்களுக்கு ஆசிரியர்களாக நியமனம் பெற்றுத் தரப்படும். எனவே, மேற்கூறப்பட்ட விசேட கல்வித் தேவைகளுடைய மாணவர்கள் காணப்படுகின்ற அலகுகளில் கட்டாயம் சேவையாற்றுவதற்கு இணங்கி உடன்படிக்கை செய்ய விரும்பும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் இந்தப் பாடநெறிக்கு விண்ணப்பிக்க வேண்டும். (கல்விச் செயலாளரின் சுற்றறிக்கை 42/2021 மற்றும் கல்விச் செயலாளரின் இல. ED/9/18/8/2/6 மற்றும் 2017.05.17 திகதிய கடிதத்தின் படியாகும்.)

| | | |
|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **48 -** | **முயற்சியாண்மையும் நிதியியல் அறிவும் (சிங்களம்)** |
| | **49 -** | **முயற்சியாண்மையும் நிதியியல் அறிவும் (தமிழ்)** |

4.28

4.28.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் கணக்கியல், வணிகக்கல்வி மற்றும் பொருளியல் எனும் வணிக பாடத்துறைக்குரிய பாடங்கள் மூன்று (03) அல்லது அவற்றில் இரண்டு (02) பாடங்களுடன் மூன்றாவது பாடமாக கீழ்க்குறிப்பிட்ட ஒரு பாடத்துடன் பாடங்கள் மூன்றில் (03) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

- வர்த்தக புள்ளிவிபரவியல், புவியியல், அரசியல் விஞ்ஞானம், வரலாறு, அளவையியலும் விஞ்ஞான முறையும், ஆங்கிலம், ஜேர்மன், பிரெஞ்சு, விவசாயம், இணைந்த கணிதம் அல்லது கணிதம், தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், பௌதிகவியல்

மற்றும்

4.28.2 3.0 இல் 3.3.1 உரிய தகைமைகளுடன் க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் அல்லது முயற்சியாண்மைக் கல்வி பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமை சித்தியுடன் சித்தியடைந்திருத்தல்.

| | | |
|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **50 -** | **இஸ்லாம் (சிங்களம்)** |

4.29

4.29.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகம் மற்றும் அரபு போன்ற பாடங்களில் ஒன்றுடன் மூன்று பாடங்களில் (03) ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.29.2 3.0 இல் 3.3.1 க்குரிய உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இஸ்லாம் சமய பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்

உள்ளடங்கலாக

4.29.3 அல் ஆலிம் பரீட்சையில் (ஆரம்ப பரீட்சையில் சகல பாடங்களிலும் மற்றும் இறுதி பரீட்சையில் சகல பாடங்களிலும் ஆகிய இரண்டிலும்) சித்தி பெற்றிருத்தல்

அல்லது

4.29.4 அல் ஆலிம் ஆரம்ப பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல்

மற்றும்

4.29.5 மௌலவி சான்றிதழ் பெற்றிருத்தல்

4.29.6 தெரிவு செய்யப்படும் முன்னுரிமை வரிசை

(அ) 4.29.1., 4.29.2, 4.29.3. மற்றும் 4.29.5. சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்

(ஆ) 4.29.1., 4.29.2, 4.29.4. மற்றும் 4.29.5. சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்

(இ) 4.29.1., 4.29.2 மற்றும் 4.29.5. சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்

(ஈ) 4.29.1. மற்றும் 4.29.2. சான்றிதழ்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள்

| | | | |
|---|---|---|---|
| **பாடநெறி இலக்கம்** | **51** | **-** | **மாணவர் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் (சிங்களம்)** |
| | **52** | **-** | **மாணவர் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் (தமிழ்)** |

4.30

4.30.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தர) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.30.2 3.0 இன் 3.3.1க்கு ஏற்ப தகுதிகளுடன் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் கற்பித்தல் மொழி (சிங்களம் / தமிழ்) மற்றும் கணிதம் பாடங்களில் குறைந்தபட்சம் திறமை சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**கவனிக்கத்தக்கது :**

பாடசாலை மட்டத்தில் ஆண்கள் சாரணர் குழுவில் (Scout), பெண்கள் சாரணர் குழுவில், மாணவர் படையணி, செஞ்சிலுவை சங்கம், சுகாதார சேவை, சுற்றுச்சூழல் படையணி போன்ற குழு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இது நேர்முகத் தேர்வின் போது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் க.பொ.த (உயர்தர)பரீட்சையில் பெற்றுள்ள Z மதிப்பெண் அடிப்படையில் மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். தேர்வு செய்யப்படுவது விண்ணப்பதாரர்கள் க.பொ.த (உயர்தர) L பரீட்சையில் பெற்றுள்ள Z மதிப்பெண் மற்றும் நேர்முகத் தேர்வில் பெறப்படும் திறனாய்வு மதிப்பெண் இணைத்து தயாரிக்கப் படும் முன்னுரிமை பட்டியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். திறனாய்வு மதிப்பெண் வழங்கப்படும் போது குழு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிலைக்கு ஏற்ப மதிப்பெண்கள் வழங்கப்படும்.

மாவட்டஅடிப்படையிலானதேர்வுகள்முடிந்தபின்தேசியஅடிப்படையில்முன்னுரிமைபட்டியலின்படிசேர்த்துக்கொள்ளப்படும். அதன்படி உயர்ந்த Z மதிப்பெண் மற்றும் நேர்முகத் தேர்வில் பெறப்படும் உயர்ந்த திறனாய்வு மதிப்பெண் அடிப்படையில் தயாரிக்கப்படும் முன்னுரிமை பட்டியலை கொண்டு தேர்வு செய்யப்படும்.

இந்த பாடநெறிக்கு தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பாடநெறி முடிந்த பின் பாடசாலைகளில் மாணவர் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் ஆசிரியர்களாக நியமனம் வழங்கப்படும். எனவே, ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் ஆசிரியர்களாக கட்டாயமாக பணியாற்ற ஒப்புக்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே இந்த பாடநெறிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

**பாடநெறி இலக்கம் 53 – சமூக விஞ்ஞானம் (ஆங்கிலம்)**

4.31

4.31.1 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் வரலாறு, புவியியல், அரசியல் விஞ்ஞானம், பொருளியல் போன்ற பாடங்களில் குறைந்த பட்சம் ஒரு பாடத்துடன் கலைப் பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.31.2 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பொருளியல் பாடத்துடன் வணிகப் பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

4.31.3 2023 ஆம் ஆண்டில் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் புவியியல் பாடத்துடன் 'வேறு' பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

4.31.4 3.0 இல் 3.3.1 க்குரிய உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் வரலாறு / குடியுரிமைக் கல்வி/ புவியியல் போன்ற பாடங்களில் ஒரு பாடத்திற்கு குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

4.31.5 இந்த பாடத்துறைக்காக சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த எண்ணிக்கையில் 60% வீதம் 4.31.1 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளும், 30% வீதம் 4.31.2 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளும், 10% வீதம் 4.31.3. இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளும் உள்ளடங்கும் வகையில் தகைமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். ஏதேனும் ஒரு பாடத்துறையின் கீழ் போதிய தகைமை பெற்றோர் எண்ணிக்கை போதுமானளவு இல்லாத சந்தர்ப்பங்களில் 4.31.1, 4.31.2, 4.31.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு வரிசை அடிப்படையில் முன்னுரிமை கிடைக்கும் விதத்தில் எஞ்சிய வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

5.0 பாடநெறி இலக்கம், பாடநெறியின் பெயர், மொழி மூலத்திற்கு அமைய ஒவ்வொரு பாடநெறியும் நடைபெறும் தேசிய கல்வியியற் கல்லூரிகள் கீழ் அட்டணையில் காட்டப்பட்டுள்ளன.

**கவனத்திற் கொள்க** :

- நிகழ்நிலை முறைமை (Online system) ஊடாக விண்ணப்பிக்கும் போது உரிய தகவல்கள் சரியான முறையில் பயன் படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் யாதேனும் பாடநெறி ஒன்றை கல்வியியற் கல்லூரியில் உசிதமான வகையில் ஆரம்பிப்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் கல்வியியல் கல்லூரி நிறுவக சபை / கல்விச் செயலாளர் வசமானது.

- நிகழ்நிலை முறையில் விண்ணப்பிக்கும் போது ஒவ்வொரு பாடநெறிக்கும் அதில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலத்தில் பாடநெறி இலக்கம் இந்த அட்டவணையில் நிரல் - i இல் குறிப்பிட்டவாறு சரியாக உள்ளிட வேண்டியது கட்டாயமாகும்.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிரலானது கீழே காட்டப்பட்டுள்ளது.

i. நிரல் – பாடநெறி இலக்கம்
ii. நிரல் – பாடநெறியின் பெயர்
iii. நிரல் – சிங்கள மொழிமூலம் நடாத்தப்படும் கற்கை நெறியுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள்
iv. நிரல் – தமிழ் மொழிமூலம் நடாத்தப்படும் கற்கை நெறியுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள்
v. நிரல் – ஆங்கில மொழிமூலம் நடாத்தப்படும் கற்கை நெறியுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள்.

| *பாட இல.* | *பாடநெறி* | *மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியற் கல்லூரிகள்* | | |
|---|---|---|---|---|
| | | *சிங்கள மொழிமூலம்* | *தமிழ் மொழிமூலம்* | *ஆங்கில மொழிமூலம்* |
| *I* | *II* | *III* | *IV* | *V* |
| 01 | ஆரம்பக்கல்வி (சிங்களம்) | ஊவா | வவுனியா | - |
| | | நில்வளா | ஸ்ரீபாத | - |
| 02 | ஆரம்பக்கல்வி (தமிழ்) | மகாவலி | அட்டாளைச்சேனை | - |
| | | சாரிபுத்த (தம்பதெனிய) | அட்டாளைச்சேனை (ஆசிரியர் பயிற்சி கல்லூரி) | - |
| | | ஸ்ரீபாத | மட்டக்களப்பு | |
| | | பஸ்துன்ரட்ட | யாழ்ப்பாணம் | - |
| | | புலதிஸிபுர | தர்கா நகர் | - |
| | | | | - |
| | | வயம்ப | - | - |
| | | றுவன்புர | - | - |
| | | ருகுணு | - | - |
| | | ஹாபிடிகம | - | - |
| | | மஹரகம | - | - |
| | | சியனே | - | - |

| *பாட இல.* | *பாடநெறி* | *மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியற் கல்லூரிகள்* | | |
|---|---|---|---|---|
| | | *சிங்கள மொழிமூலம்* | *தமிழ் மொழிமூலம்* | *ஆங்கில மொழிமூலம்* |
| I | II | III | IV | V |
| 03<br>04<br>05 | விஞ்ஞானம் (சிங்களம்)<br>விஞ்ஞானம் (தமிழ்)<br>விஞ்ஞானம் (ஆங்கிலம்) | நில்வளா<br>சியனே<br>ஸ்ரீபாத<br>புலதிஸிபுர | வவுனியா,<br>ஸ்ரீபாத<br>அட்டாளைச்சேனை<br>மட்டக்களப்பு<br>யாழ்ப்பாணம்<br>அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சி கல்லூரி | நில்வளா<br>சியனே<br>யாழ்ப்பாணம் |
| 06<br>07<br>08 | கணிதம் (சிங்களம்)<br>கணிதம் (தமிழ்)<br>கணிதம் (ஆங்கிலம்) | நில்வளா<br>பஸ்துன்ரட்ட<br>சியனே<br>ஸ்ரீபாத | வவுனியா<br>மட்டக்களப்பு<br>ஸ்ரீபாத<br>அட்டாளைச்சேனை<br>யாழ்ப்பாணம்<br>அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கல்லூரி | நில்வளா<br>சியனே<br>யாழ்ப்பாணம் |
| 09<br>10 | சமூக விஞ்ஞானம் (சிங்களம்)<br>சமூக விஞ்ஞானம் (தமிழ்) | ருகுணு<br>ஸ்ரீபாத | ஸ்ரீபாத<br>மட்டக்களப்பு<br>தர்கா நகர் | - |
| 11 | பௌத்த சமயம் | சாரிபுத்த – (நிட்டம்புவ மற்றும் தம்பதெனிய) | | |
| 12 | இந்து சமயம் (தமிழ்) | - | வவுனியா | - |
| 13 | இஸ்லாம் (தமிழ்) | - | அட்டாளைச்சேனை | |
| 14<br>15 | கத்தோலிக்க சமயம் / கிறிஸ்தவ சமயம் (சிங்களம்)<br>கத்தோலிக்க சமயம் / கிறிஸ்தவ சமயம் (தமிழ்) | வயம்ப | வவுனியா | - |
| 16 | சிங்கள மொழியும் இலக்கியமும் | வயம்ப<br>பேராதெனிய<br>ஹாப்பிட்டிகம<br>மகாவலி<br>வவுனியா | | |
| 17 | தமிழ் மொழியும் இலக்கியமும் | - | ஸ்ரீபாத<br>தர்காநகர்<br>மட்டக்களப்பு<br>பேராதெனிய | |

| பாட இல. | பாடநெறி | மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியற் கல்லூரிகள் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
| I | II | III | IV | V |
| 18 | ஆங்கில மொழியும் இலக்கியமும் | - | - | மகாவலி<br>பஸ்துன்ரட்ட<br>யாழ்ப்பாணம்<br>பேராதெனிய<br>மஹரகம<br>ருகுண<br>ருவான்புர<br>அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கல்லூரி |
| 19<br>20 | சித்திரம் (சிங்களம்)<br>சித்திரம் (தமிழ்) | மகாவலி<br>வயம்ப<br>ஹாப்பிட்டிகம | ஸ்ரீபாத,<br>மட்டக்களப்பு<br>யாழ்ப்பானம் ஆசிரியர் கலாசாலை | -<br>-<br>- |
| 21 | நடனம் (கீழைத்தேயம்) | மகாவலி<br>வயம்ப<br>ஹாப்பிட்டிகம | - | - |
| 22 | நடனம் (பரதம்) | | ஸ்ரீபாத<br>யாழ்ப்பாணம் | |
| 23 | சங்கீதம் (கீழைத்தேயம்) | மகாவலி<br>வயம்ப<br>ஹாப்பிட்டிகம | | |
| 24 | சங்கீதம் (கர்நாடகம்) | - | ஸ்ரீபாத<br>யாழ்ப்பாணம் | - |
| 25 | மேற்கத்தேய சங்கீதம் (ஆங்கிலம்) | - | - | மஹரகம |
| 26<br>27 | நாடகமும் அரங்கியலும்(சிங்களம்)<br>நாடகமும் அரங்கியலும் (தமிழ்) | மகாவலி | கோப்பாய் ஆசிரியர் கலாசாலை<br>மட்டக்களப்பு | |
| 28<br>29<br>30 | சுகாதாரமும் உடற்கல்வியும் (சிங்களம்)<br>சுகாதாரமும் உடற்கல்வியும் (தமிழ்)<br>சுகாதாரமும் உடற்கல்வியும் (ஆங்கிலம்) | ஊவா<br>நில்வளா<br>ஹாப்பிட்டிகம<br>ருகுணு | வவுனியா<br>மட்டக்களப்பு<br>யாழ்ப்பாணம் | ஊவா<br>- |
| 31<br>32 | உணவு நுகர்வுத் தொழில்நுட்பவியல் (சிங்களம்)<br>உணவு நுகர்வுத் தொழில்நுட்பவியல் (தமிழ்) | ருகுணு | வவுனியா<br>தர்காநகர் | |
| 33<br>34 | விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பவியல் (சிங்களம்)<br>விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பவியல் (தமிழ்) | புலதிஸிபுர | வவுனியா | |

| *பாட இல.* | *பாடநெறி* | *மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியற் கல்லூரிகள்* | | |
|---|---|---|---|---|
| | | *சிங்கள மொழிமூலம்* | *தமிழ் மொழிமூலம்* | *ஆங்கில மொழிமூலம்* |
| I | II | III | IV | V |
| 35<br>36 | வடிவமைப்புக்கலைகள் மற்றும் உற்பத்தித் தொழிநுட்பவியல் (சிங்களம்)<br>வடிவமைப்புக்கலைகள் மற்றும் உற்பத்தித் தொழிநுட்பவியல் (தமிழ்) | சியனே | மட்டக்களப்பு | |
| 37<br>40 | வடிவமைப்பும் பொறியியல் தொழில்நுட்பவியலும் (சிங்களம்)<br>வடிவமைப்பும் பொறியியல் தொழிநுட்பவியலும் (தமிழ்) | சியனே | மட்டக்களப்பு | |
| 43 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் (ஆங்கிலம்) | | | றுவன்புர<br>பஸ்துன்ரட<br>மஹரகம<br>யாழ்பாணம்<br>தர்காநகர் |
| 44 | இரண்டாம் மொழி (சிங்களம்) | மகாவலி<br>வயம்ப<br>மஹரகம<br>வவுனியா | | |
| 45 | இரண்டாம் மொழி (தமிழ்) | | மகாவலி<br>வவுனியா | |
| 46<br>47 | விசேட தேவைக் கல்வி (சிங்களம்)<br>விசேட தேவைக் கல்வி (தமிழ்) | ஹாபிடிகம<br>மஹரகம | அட்டாளைச்சேனை<br>யாழ்ப்பாணம் | |
| 48<br>49 | முயற்சியாண்மையும் நிதியியல் அறிவும் (சிங்களம்)<br>முயற்சியாண்மையும் நிதியியல் அறிவும் (தமிழ்) | மஹரகம | அட்டாளைச்சேனை | |
| 50 | இஸ்லாம் (சிங்களம்) | அட்டாளைச்சேனை | | |
| 51<br>52 | மாணவர் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் (சிங்களம்)<br>மாணவர் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் (தமிழ்) | பஸ்துன்ரட்ட<br>வயம்ப | யாழ்ப்பாணம் | |
| 53 | சமூக விஞ்ஞானம் (ஆங்கிலம்) | | | ருகுணு |

**கவனத்திற் கொள்க** :

- தமிழ்மொழி மூலம் பாடநெறி நடாத்தப்படுகின்ற தர்காநகர் தேசிய கல்விக் கல்லூரி ஒதுக்கப்பட்டிருப்பது பெண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே.

6.0 2024 ஆம் ஆண்டிற்கு ஆசிரிய மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒழுங்கு முறைமை

6.1 தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படை:

6.1.1 2023 ஆம் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு முறையே 2028, 2029 ஆம் ஆண்டில் ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுச் செல்வதினால் பாடசாலைத் தொகுதியில் ஏற்படும் வெற்றிட எண்ணிக்கை மற்றும் தற்போது நிலவும் ஆசிரிய பற்றாக்குறை மற்றும் கஸ்ட பிரதேசங்களில் பாட பல்வகைமையை ஏற்படுத்துவதற்கான தேவை தொடர்பாக கவனத்திற் கொண்டு பாட அடிப்படையில் ஆசிரியர் தேவையைக் கணக்கிட்டு அந்த எண்ணிக்கையை 2025 ஆம் வருடத்தில்

பயிலுநர்களுக்காக ஒவ்வொரு பாட நெறிக்கும் கல்வியியற் கல்லூரியினுள் ஒரே தடவையில் வசதிகளை வழங்கக் கூடிய எண்ணிக்கையோடு பொருந்துமாறு உள்ளெடுக்கப்படும் பயிலுநர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

- சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை தொடர்பாக செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக அமைவது ஒவ்வொரு பாடநெறிக்கும் கல்வியியற் கல்லூரிகளில் நிலவும் வசதிகள் வழங்கப்படக்கூடிய எண்ணிக்கையாகும்.

6.1.1.1 2023 ஆம் அல்லது 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தர) பெறுபேற்றின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டு பாடநெறிகளுக்கு ஆட்சேர்த்தல் கீழ் வருமாறு மேற்கொள்ளப்படும்.

(i) பாடநெறி மொழிமூலத்தை தேர்ந்தெடுப்பதில், வர்த்தமானி அறிவிப்பின் 5.0 இல் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஒவ்வொரு பாடநெறியும் நடத்தப்படும் மொழிமூலம் மற்றும் அதற்குத் தேவையான தகுதிகள் பற்றிய தெளிவான புரிதலுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

(ii) ஆட்சேர்ப்பு செய்யப்படும் மொத்த வெற்றிடங்களில் 50% தேசிய அடிப்படையிலும் மீதமுள்ள 50% மாவட்ட அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். தேசிய மற்றும் மாவட்ட அடிப்படையில் வெற்றிடங்களை ஒதுக்குவதில் தேசிய அடிப்படைக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(iii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏதேனும் பாடநெறிக்கு (உடற்கல்வி பாடநெறி தவிர) உரிய மொழி மூலத்தில் உரிய மாவட்டத்திலிருந்து சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு அறியத்தரப்பட்டுள்ள எண்ணிக்கை, மாவட்ட அடிப்படையில் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட Z புள்ளிகளின் தொடரொழுங்கில் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு ஏனைய தகைமைகளையும் சரியான விதத்தில் தொடர்புபடுத்தப்பட்டு, 4.0 இல் "கவனத்திற் கொள்க" என்ற பகுதியில் மற்றும் உரிய பாடநெறியின் கீழ் காட்டப்பட்டுள்ள முறைமைக்கு அமைய தெரிவுசெய்யப்படுவர். உடற்கல்விப் பாடநெறிக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும், உரிய மொழி மூலத்திலும் சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை, விண்ணப்பதாரிகளின் விளையாட்டு புள்ளிகளின் தொடரொழுங்குக்கு அமைய 4.0 இல் மற்றும் உரிய பாடநெறியின் கீழ் காட்டப்பட்டுள்ள முறைமைக்கு அமைய மேற்கொள்ளப்படும்.

(iv) மாவட்ட அடிப்படையிலான வெற்றிடங்களை நிரப்பிய பிறகு தேசிய மட்டத்திலான வெற்றிடங்களுக்கான தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும். பின்னர், மீதமுள்ள விண்ணப்பதாரர்களில், பத்தி 4.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளுக்கு ஏற்ப, சம்பந்தப்பட்ட பாடத்திட்டத்தின் கீழ், நாட்டில் அதிக Z புள்ளி வரிசை மற்றும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பிற தகுதிகளுடன் சேர்த்து ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். உடற்கல்வி பாடநெறிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படுவது மாவட்ட மட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு எஞ்சிய விண்ணப்பதாரிகளில் நாட்டிலே விளையாட்டு புள்ளி தொடரொழுங்கு வரிசை 4.0 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி மற்றும் தொடர்புடைய பாடநெறியின் கீழ் காட்டப்பட்டவாறாகும்.

(v) வெற்றிடங்களை நிரப்பிய பிறகு மாவட்ட மட்டத்தில் வெற்றிடம் ஏற்பட்டால், தேசிய மட்டத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து அந்த மாவட்டத்தின் தகுதி தொடரொழுங்கு மற்றும் விருப்பத்துக்கு அமைய மாவட்ட வெற்றிடங்கள் நிரப்பப்படும். அதன் போது தேசிய மட்டத்தில் வெற்றிடம் ஏற்பட்டால், அந்த வெற்றிடம் தேசிய மட்டத்தில் நிரப்பப்படும்.

(vi) ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஒவ்வொரு பாடநெறிக்குமாக உரிய மொழிமூலத்தில் பெருந்தோட்ட மாவட்டத்திலிருந்து சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை, அதற்குச் செல்வாக்குச் செலுத்தும் விஷேட நிபந்தனைகளுக்கு உட்பட்டு விண்ணப்பதாரிகள் பெற்றுள்ள Z புள்ளியின் தொடரொழுங்கு மற்றும் ஏனைய தகைமைகள் சரியான விதத்தில் தொடர்புபடுத்தப்பட்டு 4.0 இல் "கவனத்திற் கொள்க" என்ற பகுதியின் கீழ் காட்டப்பட்டுள்ள முறைமைக்கு அமைய தெரிவுசெய்யப்படுவர்.

6.1.2 Z புள்ளி திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படும் பாடநெறிகளில் உரிய மாவட்டத்தில் சமமான Z புள்ளிகளைப் பெற்ற பல மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் ஒருவரை மாத்திரம் தேர்ந்தெடுக்க வேண்டிவரும் போது/ விளையாட்டுத் திறமை அடிப்படையில் சமமான புள்ளிகளைப் பெற்ற பல மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் ஒருவரை மாத்திரம் தேர்ந்தெடுக்க வேண்டிவரும் போது, முதற் தடவையாக க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் 3.0 இல் 3.5 இன் கீழ் குறிப்பிடப்பட்ட வகையில் முதன்மை (பிரதான) பாடங்கள் ஆறிற்கு (06) பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் கவனத்திற் கொள்ளப்படுவதற்காகப் பயன்படுத்தப்படும்.

அதற்கிணங்க க.பொ.த (சாதாரணதர) பரீட்சைப் பெறுபேறுகளில் விசேட சித்திக்காக 04 புள்ளிகளும் அதிதிறமைச் சித்திக்காக 03 புள்ளிகளும் திறமைச் சித்திக்காக 02 புள்ளிகளும் சாதாரண சித்திக்காக 01 புள்ளியும் என்ற வகையில் புள்ளிகள் வழங்கப்பட்டு அந்த மொத்தப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவு மேற்கொள்ளப்படும்.

6.1.3 உடற்கல்வி, நடனம் (கீழைத்தேயம்), நடனம்(பரதம்), சங்கீதம் (கீழைத்தேயம்), சங்கீதம்(கர்நாடகம்), நாடகமும் அரங்கியலும் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் ஆகிய பாடநெறிக்காக நடாத்தப்படும் பிரயோகப் பரீட்சையில் பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் பாடத்திற்குரிய விஷேட தேர்ச்சியை உறுதி செய்தல் வேண்டும்.

6.1.4 மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்படும் போது ஏதேனும் ஒரு பாடநெறிக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மொத்த தரவுத் தளத்திலும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் போதுமான எண்ணிக்கை இல்லாத பட்சத்தில் அந்த மாவட்டம் உரித்தாகும் மாகாணத்தின் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் உரிய திறமைகளின் தொடரொழுங்கிலும் அவையும் போதுமான எண்ணிக்கையில் இல்லாதவிடத்து தேசிய மட்ட திறமைகள் தொடரொழுங்கும் கவனத்திற் கொள்ளப்பட்டு அவ் வெற்றிட எண்ணிக்கை நிரப்பப்படும்.

6.2 நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தல் :

6.2.1 விண்ணப்பதாரிகளின் நிரந்தர வதிவிட மாவட்டம்/மாகாணம் கீழ்க் குறிப்பிடப்பட்ட முறையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

6.2.1.1 மாவட்ட அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும் போது விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் மாவட்டம் என்பது அவர் முதன் முறையாக க.பொ.த (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் மற்றும் அதற்கு முன்னைய இரண்டு வருடங்கள் நிரந்தரமாக வசித்த மாவட்டமாகும்.

6.2.1.2 இங்கு விண்ணப்பதாரி முதன்முறை அல்லது இரண்டாவது தடவை க.பொ.த (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை உரித்தாகும் மாவட்டம், விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிடத்திலிருந்து வெளியேயுள்ள மாவட்டம்/ பிரத்தியேக வசதி கருதி உரிய காலத்தினுள் தற்காலிகமாக வசித்திருந்த மாவட்டம்/ தற்போது வதிவிடத்தினை வேறு மாவட்டத்திற்கு மாற்றியிருப்பின் அம்மாவட்டம் விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டமாகக் கருதப்பட மாட்டாது என்பது வலியுறுத்தப்படுகிறது.

6.2.1.3 மாகாண மட்ட தகைமை அடிப்படையாகக் கருதும் போது விண்ணப்பதாரி முதன்முறையாக க.பொ.த (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய வருடத்துடன் முன்னைய இரண்டு (02) வருடங்கள் வரை அவர் நிரந்தரமாக வசித்த மாகாணம் விண்ணப்பதாரியின் மாகாணமாக கொள்ளப்படும்.

6.2.2 அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது நிரந்தர வதிவிடத்தினை கீழே குறிப்பிடப்பட்ட முறைக்கமைய உறுதிப்படுத்த வேண்டும்.

**கவனத்திற் கொள்க** :

- வாக்காளர் பட்டியலின் தரவு நேர்முகப்பரீட்சையின் போது தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியின் அடிப்படையில் இணையத்தளத்தின் ஊடாக பரிசோதிக்கப்படுவதால் எந்த ஒரு விண்ணப்பதாரியும் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் இதற்குரிய எந்தவொரு ஆவணத்தையும் முன்வைக்க தேவையில்லை எனவும் நேர்முகப்பரீட்சையின் போது கீழ்க்காணும் வகையில் உரியவாறு உறுதிப்படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.

  i. சேர்த்துக்கொள்ளப்படும் நிபந்தனைக்கு அமைவாக விண்ணப்பதாரியினால் தமது நிரந்தர வதிவிடம் வாக்காளர் பெயர்ப் பட்டியல் தரவு ஊடாக உறுதி செய்ய வேண்டும்.

  ii. விண்ணப்பதாரியின் வயது பூரணமாகாத காரணத்தால் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பதிவு செய்யாத விண்ணப்பதாரர்கள் உரிய வருடங்களுக்காக பெற்றோரின் பெயர்கள் உள்ளடங்கிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தரவு ஊடாக வதிவிடம் குறித்த தகவல் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

  iii. யாதுமொரு காரணத்தினால் பெற்றோர்கள் அல்லாது வேறு பாதுகாவலரின் கீழ் உரிய காலப் பகுதியில் நிரந்தரமாக வதிவிடத்தைக் கொண்ட விண்ணப்பதாரிகள் அந்தப் பாதுகாப்பிலிருந்த காலப்பகுதியோடு கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவிட மற்றும் நடத்தை தொடர்பான சான்றிதழில் (DS-04) - 'வேறு காரணங்கள்' என்னும் பகுதியின் கீழ் குறிப்பிட்டு, நேர்முகப்பரீட்சை சந்தர்ப்பத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதன் போது ஒரு விண்ணப்பதாரியின் வாக்கு இல்லாத வருடத்திற்காக பாதுகாவலரின் வதிவிடத்தை வாக்காளர் பெயர்ப்பட்டியல் தரவு ஊடாக உறுதி செய்ய வேண்டும்.

  iv. ஏதாவது காரணத்தால் உரிய மூன்று (03) வருடங்கள் அல்லது சில வருடங்களுக்கு உரிய வாக்காளர் பதிவு மேற்கொள்ளப்படாதிருந்தால்/பதிவுகளின் பிரதியூடாக வதிவிடத்தை உறுதிப்படுத்த முடியாத சந்தர்ப்பத்தில்

வாக்காளர் பதிவு செய்ய முடியாமைக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணத்தை கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவிட மற்றும் நடத்தை சம்பந்தமான சான்றிதழில் (DS-04) ‘வேறு காரணங்கள்’ என்பதன் கீழ் அக்காலப்பகுதிக்கான நிரந்தர வதிவிட பிரதேசத்தின் கிராம அலுவலர் கையொப்பத்துடன்; உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

v. வாக்கு பதிவு செய்யப்படாத காரணத்தால் ஒரு வருடத்திற்கோ அல்லது இரு வருடங்களுக்கோ மட்டும் உரிய வாக்காளர் இடாப்பின் பதிவுப் பிரதிகள் முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் எஞ்சிய வருடங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வேறு ஆவணங்களினால் வதிவிடம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். (உதாரணம் : கிராம அலுவலர் சான்றிதழ், ஆட்பதிவு திணைக்களத்தின் தேசிய அடையாள அட்டையின் முகவரி)

vi. ஏதும் காரணத்தால் மூன்று வருடங்களுக்காக (03) அல்லாமல் ஒரு வருடத்துக்கு மாத்திரம் விண்ணப்பதாரர் பதிவு செய்திருந்தால், எஞ்சிய வருடங்களுக்கு பெற்றோர்/பாதுகாவலர் வாக்காளர் எந்த மாவட்டத்துக்கு பதிவு செய்யப்பட்டிருந்தாலும் விண்ணப்பதாரரின் வாக்காளர் பதிவுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6.3 ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்குத் தேர்ந்தெடுத்தல்:

6.3.1 சேர்த்துக்கொள்ளும் எண்ணிக்கையில் 75% இந்திய வம்சாவளி தமிழ் விண்ணப்பதாரர்களும் 25% சிங்கள இன விண்ணப்பதாரர்கள் மூலமும் வெற்றிடம் நிரப்பப்படும் (நேர்முகப்பரீட்சையின் போது இந்திய வம்சாவளி தமிழர்கள் தொடர்பாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு இயலுமாக இருத்தல் வேண்டுமென்பதோடு, தமது பிறப்புச் சான்றிதழில் தந்தையின் அல்லது தாயின் இனம் இந்தியத் தமிழ் எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

6.3.2 பெருந்தோட்ட மாவட்டங்களில் காணப்படும் வெற்றிடங்களின் போதுமான தன்மைக்கு அமைய சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை அம் மாவட்டங்களுக்கு பிரிக்கப்பட்டுள்ளது.

6.3.3 ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்க வேண்டியது நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தறை, காலி, குருநாகல் மற்றும் கொழும்பு ஆகிய பெருந்தோட்ட மாவட்டங்களில் வதியும் பெருந்தோட்டத்துறையில் சேவையாற்றுபவர்களின் பிள்ளைகள் மாத்திரம் ஆகும்.

6.3.4 இதுவரை பெருந்தோட்டங்களில் சேவை புரிகின்றவர்களின்; பிள்ளைகளுக்கும் தற்போது தோட்டங்களில் வசிக்கும், பெருந்தோட்ட துறையில் 10 வருடங்கள் சேவையாற்றிய பின்,

2014 – 2023 (2023 ஆம் ஆண்டில் க.பொ.த (உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரருக்கு)

2015 – 2023 (2024 ஆம் ஆண்டில் க.பொ.த (உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரருக்கு)

எனும் காலப்பகுதியில் ஓய்வு பெற்ற, சுகயீனம் காரணமாக சேவையிலிருந்து விலகிய அல்லது இறந்தவர்களின் பிள்ளைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

6.3.5 மேலே 6.3.4 இல் குறிப்பிட்ட விண்ணப்பதாரிகள் போதியளவில் காணப்படாவிடில் பெருந்தோட்டப் பகுதிகளில் தற்போது சேவை புரியாவிடினும், கீழே குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யும் பெருந்தோட்டப் பிள்ளைகள் தொடர்பாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

6.3.5.1 2023 ஆம் ஆண்டில் க.பொ.த (உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரருக்கு உரியதாக 2013 வருடம் அல்லது அதற்குப் பின்னருள்ள வருடங்களில் தோட்ட சேவையில் குறைந்தபட்சம் ஐந்து (05), நான்கு (04), மூன்று (03) வருடங்கள் தொடர்ச்சியான சேவை புரிந்தோரின் பிள்ளைகள் தொடர்பாக ஒழுங்கு முறையில் கருத்திற் கொள்ளப்படும். (முன்னுரிமை வழங்கப்படுவது 2022,2021,2020 ஆகிய வருடங்களின் ஒழுங்குமுறையில் ஆகும்.)

6.3.5.2 2024 ஆம் ஆண்டில் க.பொ.த (உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரருக்கு உரியதாக 2014 வருடம் அல்லது அதற்குப் பின்னருள்ள வருடங்களில் தோட்ட சேவையில் குறைந்தபட்சம் ஐந்து (05), நான்கு (04), மூன்று (03) வருடங்கள் தொடர்ச்சியான சேவை புரிந்தோரின் பிள்ளைகள் தொடர்பாக ஒழுங்கு முறையில் கருத்திற் கொள்ளப்படும். (முன்னுரிமை வழங்கப்படுவது 2023,2022,2021 ஆகிய வருடங்களின் ஒழுங்குமுறையில் ஆகும்.)

6.3.6 ஏதாவது தமிழ்மொழி மூல பாடநெறியொன்றுக்கு மேற்கூறப்பட்ட விண்ணப்பதாரிகளில் தகைமை பெறுகின்ற போதியளவான எண்ணிக்கையினர் இல்லாது இருப்பின் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் வசிக்கின்ற

தோட்டப்பகுதிகளில் வேலை செய்யாத இந்திய வம்சாவளி விண்ணப்பதாரிகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும்.

6.3.7 அதற்கேற்ப, போதியளவான எண்ணிக்கை இல்லாது இருப்பின் வேறு மாவட்டங்களில் வசிக்கின்ற இந்திய வம்சாவளி தமிழ் மொழிமூல விண்ணப்பதாரர்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படும்.

6.3.8

6.3.8.1 சிங்கள மொழிமூல பாடநெறிகளுக்கு பெருந்தோட்ட மாவட்டத்தில் வசிக்கும் பெருந்தோட்டப்பகுதியில் சேவைபுரியும் வதிவாளர்களின் பிள்ளைகள் போதியளவான எண்ணிக்கை இல்லையென்றால் மீதமுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படுவது ஸ்ரீபாத/ ஏனைய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் அந்தப் பாடநெறிகளுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து அவர்களின் Z புள்ளி மற்றும் வேறு பொருத்தமான தகைமைகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

6.3.8.2 தமிழ் மொழி மூல பாடநெறிகளுக்காக 6.3.4 - 6.3.7 இன் படி தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் போதிய எண்ணிக்கையை கொண்டிராவிடில், அந்த பாடநெறிகளுக்காக தமிழ் மொழிமூல நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும் ஏனைய கல்வியியற் கல்லூரி ஊடாக தரவு அடிப்படை முறைமையிலுள்ள தகைமை பெற்றோரை தொடரொழுங்கின் அடிப்படையில் அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

6.3.9 நேர்முகப்பரீட்சையின் போது அரச மற்றும் பதிவு செய்யப்பட்ட தனியார் தோட்ட கம்பனிகளின் ஊழியர்களின் பிள்ளைகள் அதனை உறுதி செய்வதற்காக கீழ்க்காணும் ஆவணங்களில் தமக்குப் பொருத்தமான ஆவணங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

- தற்போது பெருந்தோட்டங்களில் சேவை புரிபவர்களாயின் தோட்டங்களில் சேவை செய்கின்றார்கள் எனவும் (அந்த காலப்பகுதியை குறிப்பிட்டு) மற்றும் நிரந்தரமாக தோட்டங்களில் வதிவது தொடர்பாக தோட்ட அதிகாரியால் உறுதிப்படுத்திய கடிதம்.

- பத்து ஆண்டுகள் (10) சேவையின் பின்

  2014 – 2023 (2023 ஆம் ஆண்டில் க.பொ.த (உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரருக்கு)

  2015 – 2023 (2024 ஆம் ஆண்டில் க.பொ.த (உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரருக்கு)

  காலப் பகுதியில், சுகயீனம் காரணமாக பெருந்தோட்ட சேவையில் இருந்து விலகிக் கொண்ட /ஓய்வு பெற்றுக் கொண்ட அல்லது இறந்து போன தொழிலாளரின் குடும்ப உறுப்பினர்கள் தற்போது பெருந்தோட்டங்களில் நிரந்தரமாக வசிப்பது தொடர்பாக உரிய வதிவிடப் பதிவு மற்றும் சேவையில் இருந்து விலகிய / ஓய்வு பெற்ற வருடம் மற்றும் தினம் தெளிவாக உறுதி செய்யப்பட்டு தோட்ட அதிகாரியினால் வழங்கப்பட்ட கடிதம் மற்றும் கிராம சேவகரின் சான்றிதழ்.

- பெருந்தோட்ட சேவையில் இருந்து

  2014 அல்லது அதன் பின்னரான வருடங்களில் (2023 ஆம் ஆண்டில் க.பொ.த (உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரருக்கு)

  2015 அல்லது அதன் பின்னரான வருடங்களில் (2024 ஆம் ஆண்டில் க.பொ.த (உயர்தர) சித்தி பெற்ற விண்ணப்பதாரருக்கு)

  ஓய்வு பெற்றுள்ள/ பெருந்தோட்ட சேவையிலிருந்து விலகிய சேவையாளர்கள் தாம் கடந்த ஐந்து (05) வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான காலம் தொடர்ச்சியாக சேவையாற்றியமை குறித்து உறுதிப்படுத்தி ஓய்வு பெற்ற/ தோட்ட சேவையிலிருந்து விலகிய வருடம், திகதி என்பன தெளிவாக குறிப்பிட்டு தோட்ட அதிகாரியினால் வழங்கப்பட்ட கடிதம்.

- ஊழியர் நலன்புரி நிதியத்திற்கு பணம் அறவிடுவதாக / அறவிடப்பட்டமை தொடர்பாக பதிவு இலக்கத்துடன் உறுதி செய்யக்கூடிய கடிதம் / கடிதங்கள் மற்றும் பெருந்தோட்டப் பகுதியில் வசிக்கின்றமை உறுதிப்படுத்தும் கிராம சேவகரினால் வழங்கப்படும் கிராம சேவகர் சான்றிதழ்.

6.3.10 விண்ணப்பதாரி கற்கையின் பின்னர் பெருந்தோட்டப்பகுதி பாடசாலைகளில் தொடர்ச்சியாக பத்து (10) வருடங்கள் சேவையாற்றுதற்கு சம்மதிப்பதாக சத்திய பிரமாணத்தை நேர்முகப்பரீட்சையின் போது கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

6.3.11 சிங்கள மொழி மூலம் கல்வி கற்ற இந்திய வம்சாவளி தமிழ் விண்ணப்பதாரர்கள் இருப்பின் இந்திய வம்சாவளிக்குரிய விகிதாசாரத்திற்கு அமைய கருத்திற் கொள்ளப்படும். அத்துடன் தமிழ் மொழி மூலம் கல்வி கற்கும் சிங்கள விண்ணப்பதாரர்கள் எனின் சிங்கள மொழி மூல விகிதாசாரத்திற்கு அமைய கருத்திற்கொள்ளப்படும்.

6.3.12 ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்படும் பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் பெருந்தோட்டப் பகுதிகளில் சேவை புரிபவர்களின் பிள்ளைகளுக்கு தகைமைகளின் அடிப்படையில் தமக்கு உரிய மொழியில் ஏனைய கல்லூரிகளில் நடைமுறைப்படுத்தப்படும் பாடநெறிக்காகவும் விண்ணப்பிக்க முடியும்.

7.0 தேர்ந்தெடுப்பதற்கான ஏனைய விடயங்கள் :

7.1 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் உரிய பாடநெறிக்கான தகைமைகளை உறுதி செய்வதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சிகள் மற்றும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்கத் தயாராக இருத்தல் வேண்டும். குறித்த தினத்தில் எந்தவித அறிவித்தலும் இன்றி நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்காத அந்தந்த மாவட்டங்களின் விண்ணப்பதாரிகளுக்குப் பதிலாக உரிய மாவட்டத்தின் தகைமை தொடரொழுங்குக்கு அமைய வேறொரு விண்ணப்பதாரி அழைக்கப்படுவதோடு சமுகமளிக்காத விண்ணப்பதாரி தொடர்பாக மீண்டும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

7.2 அனைத்து சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிப்பது கட்டாயமாவதுடன் அத்தினத்தில் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் விண்ணப்பதாரிகள் தொடர்பாக தெரிவு செய்யும்போது கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

7.3 பாடநெறி மூலம் எதிர்பார்க்கப்பட்ட ஏற்புடைய மட்டத்தை அடைந்து ஆசிரிய தொழிலுக்குள் நுழைய விண்ணப்பதாரிகளிடம் இருக்க வேண்டிய உடல் மற்றும் உள தகவுதிறன், கல்வி அமைச்சினால் வழங்கப்படும் நியதிகள் அடிப்படையில் முதலாவது நேர்முகப்பரீட்சையின் போது உரிய நேர்முகப்பரீட்சைச் சபையினால் பரிசீலிக்கப்படும். அதன் போது பாடநெறியை தொடருவதற்கு மற்றும் ஆசிரிய தொழிலுக்குள் நுழைவதற்கு விண்ணப்பதாரியின் உடல், உள தகவுதிறன் போதுமானது என்பது தொடர்பாக அவரின் பெயர் விதப்புரையில் முன்வைக்கப்படும்.

7.4 மேலே 7.3 வகுதியின் படி தகைமைகளுடன் அத்தகைய இணைத்துக்கொள்ளும் நியதிகளின் கீழ் தகைமைகள் கொண்டுள்ள தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பதிவுத் தபால் மூலம் அது குறித்து அறிவிக்கப்படும். உரிய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பதிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மீண்டும் ஒருமுறை இரண்டாவது தடவை தகைமைகள் பரீட்சிக்கும் பொருட்டு நேர்முகப்பரீட்சை சபையினால் முன்வைக்கப்பட்ட தரவுகளின் பிழையற்ற தன்மை உறுதிசெய்து கொள்ளப்படும். அதற்கிணங்க தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் உரிய தேசிய கல்வியியற் கல்லூரியில் உரிய பாடநெறிக்காக பதிவு செய்து கொள்ளப்படுவர். தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்வதற்கு உரிய தினத்திலிருந்து பத்து (10) வேலை நாட்களுக்குள் பதிவு மேற்கொள்ளப்படாவிடின் சேர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை அவர்கள் இழக்க வேண்டியேற்படும். அதனால் ஏற்படும் வெற்றிடம் சேர்த்துக்கொள்ளப்படும் நியதியின் கீழ் உரிய தரவுத் தொகுதியில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரிகளுக்குரிய திறமைத் தொடரொழுங்குக்கமைய நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

7.4.1 எனவே உரிய தினத்திற்கு பதிவு செய்யாத விண்ணப்பதாரர்களால் பின்னர் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் தொடர்பாக எக்காரணம் கொண்டும் கருத்திற்கொள்ளப்படமாட்டாது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

- மேலே இலக்கம் 7.3 அல்லது 7.4 இன் கீழ் நேர்முகப்பரீட்சைச் சபையினால் விதப்புரை செய்ய முடியாத பட்சத்தில் யாதும் விசேட பிரச்சினை காணப்படும் பட்சத்தில் மாத்திரம் அந்நிலைமை தொடர்பாக நேர்முகப்பரீட்சைச் சபை திருப்தியடையாத பட்சத்தில் விடயம் விசேட நேர்முகப்பரீட்சைச் சபைக்கு உட்படுத்தப்படும். அந்த சபை அறிக்கையை கல்வியியற் கல்லூரி நிறுவக சபைக்கு / கல்விச் செயலாளருக்கு சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளும் தீர்மானம் அமுல்படுத்தப்படும்.

7.5 முதலாவது மற்றும் இரண்டாவது நேர்முகப்பரீட்சைக்கு தோற்றிய பின்னர் கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்ய தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் கல்வியியற் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் தமது உடல் உள தேகாரோக்கியத்தினை உறுதிசெய்வதற்காக வைத்திய பரிசோதனைக்கு உட்படவேண்டும்.

7.6 ஏதேனும் விண்ணப்பதாரிக்கு தமது விருப்பத்தின் தொடரொழுங்கிற்கு அமைய 03 பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். எனினும், தேர்ச்சிகளின் அடிப்படையில் தகைமை பெறும் பாடநெறிக்காக மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவதோடு, பாடநெறி ஒன்றுக்கு அதிகமாக தெரிவு செய்யப்படுவதற்குத் தகைமை பெறும் பட்சத்தில் விண்ணப்பதாரிகளின் விருப்பத் தொடரொழுங்கின் முன்னுரிமை அடிப்படையில் ஒரு பாடநெறிக்காக தெரிவுசெய்யப்படுவர்.

7.7 தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஏதேனும் பாடநெறிக்காக பதிவு செய்யப்பட்ட பின்னர் எந்தவொரு காரணத்திற் காகவும் வேறொரு பாடநெறிக்கு பின்னர் தேர்ந்தெடுக்கப்படின் அதற்கிணங்க முதலாவது பாடநெறியை அல்லது தேசிய கல்வியியற் கல்லூரியை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. அதேபோல் ஒரு தேசிய கல்வியியற் கல்லூரியில் ஏதாவதொரு பாடநெறிக்கு பதிவுசெய்த பின்னர் வேறு பிரத்தியேகக் காரணங்களினால் தேசிய கல்வியியற் கல்லூரி, பாடநெறி, பாடநெறி மொழிமூலம் மாற்றப்படுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

7.8 எந்தவொரு பாடநெறிக்கும் போதியளவு பயிலுனர்; எண்ணிக்கை ஏதேனும் கல்வியியற் கல்லூரிகளில் இல்லாத சந்தர்ப்பத்தில் உரிய பாடநெறி நடாத்தப்படுகின்ற அண்மையில் உள்ள வேறு கல்வியியற் கல்லூரிக்கு மாற்றப்படுவர்.

7.9 போதியளவு ஆசிரியர் தேவை இல்லாத பாடநெறி இரத்துச் செய்யப்படுதல், சேர்த்துக்கொள்ளும் பயிலுநர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுதல் மற்றும் ஒவ்வொரு பாடநெறியையும் நிறுவனங்களில் நிலைப்படுத்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் கல்வியியற் கல்லூரி நிறுவக சபை /கல்விச் செயலாளர் வசமானதாகும்.

8.0 பாடநெறிக்காக விண்ணப்பிக்க அல்லது சேர்வதற்கு தகைமையற்றவர்கள்.

8.1 ஏற்கனவே அரசாங்க அல்லது அரசாங்க உதவி பெறும் பாடசாலைகளில், அரசாங்கத்தில் பதிவு செய்த பிரிவெனாக்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட வேறு கல்விக்கூடங்களில் ஆசிரிய நியமனம் பெற்றுள்ளவர்கள்.

8.2 அரசாங்க பாடசாலைகளில் நியமனம் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளோர்.

8.3 தற்போது வரைக்கும் தேசிய கல்வியியற் கல்லூரியில் பாடநெறியைத் தொடராது கைவிட்டவர்கள் அல்லது தொடர்ந்து கொண்டிருப்பவர்கள் அல்லது தொடர்ந்து பூர்த்தி செய்தவர்கள்.

8.4 அரசாங்க பல்கலைக்கழகம் / அரசாங்க பல்கலைக்கழக நிறுவகம் க.பொ.த (உயர்தர) தகைமைகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளும் பட்டப் பாடநெறி தொடர்வதற்காக 'அரச இலவசக் கல்வி வாய்ப்பு" என்பதன் கீழ் மாணவர்களாக பதிவு செய்திருக்கின்ற/ பாடநெறியைத் தொடர்கின்ற/ பட்டப் பாடநெறியைத் தொடர்ந்து பூர்த்தி செய்துள்ளோர், (தற்போது மேற்கூறிய நிறுவனங்களில் இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்ட பாடநெறிக்கு பதிவு செய்துள்ள மாணவர்கள் வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்த பின்னர் பதிவு இரத்து செய்யப்பட்டிருப்பின் அவர்கள் விண்ணப்பிப்பதற்கு / அனுமதி பெறுவதற்கு தகுதியற்றவர்களாவர்.

**கவனத்திற் கொள்க**:

நிகழ்நிலை (Online System) முறையில் பாடநெறியினை தொடர்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருப்பது, தேசிய கல்வியியல் கல்லூரிக்கு விண்ணப்பிப்பதில் இருந்து உங்களைத் தகுதியற்றதாக்கும்.

8.5 ஒழுக்காற்று செயற்பாடுகளின் அடிப்படையில் அல்லது வேறு காரணங்களுக்காக தேசியக் கல்வியியற் கல்லூரியின் மாணவ அந்தஸ்து ரத்து செய்யப்பட்டவர்கள்.

8.6 திருமணப் பதிவு மேற்கொண்ட/ விவாகரத்து செய்த விண்ணப்பதாரிகள்.

9.0 **பாடநெறிக்கான நிபந்தனைகள் :**

9.1 பாடநெறியின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும். இது தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இரண்டு வருடங்கள் வதிவிடக் கற்கை பெற்றதன் பின்னர் பாடசாலைகளுக்கு இணைப்பு செய்து ஒரு வருடகாலம் கட்டுறுப்பயில்வு மேற்கொள்ளல் உள்ளடங்குகிறது. இரண்டாவது ஆண்டின் இறுதியில் நடாத்தப்படும் வெளிவாரி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பயிலுநர்களின் வரவு 90% விட குறையாதிருக்க வேண்டும்.

9.2 சகல ஆசிரிய மாணவர்களும் முதலாவது ஆண்டில் மற்றும் இரண்டாவது ஆண்டில் நடாத்தப்படும் உள்ளக தொடர் மதிப்பீட்டிலும், உள்ளகப் பரீட்சைகளிலும் மற்றும் இறுதி வெளிவாரிப் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும். அத்துடன் ஆங்கில மொழி பாடநெறியைத் தொடருகின்றவர்கள் தவிர்ந்த ஏனைய சகல பாடநெறிகளைத் தொடர்கின்றவர்கள் மேற்கூறப்பட்ட பரீட்சைகளில் ஆங்கில மொழியில் சித்தியடைய வேண்டும்.

9.3 சகல ஆசிரிய மாணவர்களும் வதிவிடக் கற்கை பெறும் இரண்டு வருடங்களுக்கும் ஒரு வருடத்திற்கு பத்து (10) மாதங்களுக்காக மாதமொன்றிற்கு ரூபா 8000/- பெறுமதி கொண்ட உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும். கட்டுறுப்பயில்வு காலத்தில் பத்து (10) மாதங்களுக்காக மாதமொன்றிற்கு ரூபா 8000/- வீதமும் கொடுப்பனவு செலுத்தப்படும். சொந்தத் தேவைகளுக்கான செலவுகள் பயிலுநர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

9.4 தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவாகும் விண்ணப்பதாரர்களுக்கு பாடநெறிக்குச் செலவாகும் நிதி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக கல்வி அமைச்சின் செயலாளருடன் ரூபா எட்டு இலட்சம் (ரூபா 800,000) முறி மற்றும் உடன்படிக்கையொன்றில் ஒப்பமிட வேண்டும். விண்ணப்பதாரிகள் தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்த தினத்திலிருந்து நாட்காட்டியில் 60 தினங்களுக்குள் பாடநெறியை இடைநிறுத்துவாராயின் ஆசிரிய மாணவர்களுக்காக செலவிடப்பட்ட தொகையை அரசுக்கு மீளச் செலுத்திய பின்பு விலகிக் கொள்ள முடியும். விண்ணப்பதாரிகள் தேசிய கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்த தினத்திலிருந்து நாட்காட்டியில் 60 தினங்களின் பின்னர் பயிற்சியை இடைநிறுத்துவாராயின் இப்பிணை முறியின் முழுத் தொகையையும் (ரூபா 800,000.00) அரசுக்கு செலுத்த வேண்டும். மேலும் யாதேனும் விண்ணப்பதாரி எந்தவொரு முறையான அறிவித்தலுமின்றி ஒரு மாதத்திற்கு குறையாத காலப்பகுதியில் பாடநெறியின் கல்வி நடவடிக்கைகளுக்கு பங்குபற்றாதிருப்பின் அவர் பாடநெறியைக் கைவிட்டுச் சென்றதாக கருதப்பட்டு இப்பிணை முறி மற்றும் உடன்படிக்கையில்; குறிப்பிடப்பட்ட முழுத்தொகையையும் (ருபா 800,000.00) அரசுக்கு செலுத்திய பின்னர் பாடநெறியிலிருந்து விலகிக்கொள்ள முடியும்.

பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர்; அரச பாடசாலையொன்றிற்கு வழங்கப்படும் ஆசிரிய நியமனத்தைப் பெற்றுக்கொள்ளாவிடின் இப்பிணை முறி மற்றும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட முழுத்தொகையையும் (ருபா 800,000.00) அரசுக்குச் செலுத்த வேண்டும். மேலும் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் அரசாங்க பாடசாலையொன்றிற்கு வழங்கப்படும் ஆசிரிய நியமனத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஐந்து (05) வருடங்கள் அரசாங்க சேவையில் இருக்காதவர், சேவையாற்ற வேண்டிய ஐந்து வருடத்தில் எஞ்சிய காலங்களுக்கு (மாத அடிப்படையில் கணக்கிடப்பட்டு) உரிய தொகையை செலுத்த வேண்டும்.

செலுத்தப்படவேண்டிய தொகையானது

$$\frac{\text{ரூபா } 800,000.00}{60 \text{ மாதங்கள்}} \times \text{பூரணப்படுத்துவதற்கு எஞ்சியுள்ள மாதங்கள்}$$

எனக் கணக்கிடப்படும்.

9.4.1 விசேட மருத்துவ காரணங்களுக்காக பாடநெறியைத் தொடரும் காலப்பகுதியில் பாடநெறியைவிட்டு விலக வேண்டியேற்படுமாயின் கீழ்க்காணும் ஆவணங்கள் சகிதம் நோயின் உண்மைத்தன்மை உறுதி செய்யப்பட வேண்டும்.

- பிணியுற்ற நிலைமை காரணமாக சிகிச்சை பெறுவதற்கான ஏற்புடைய வைத்திய அறிக்கை.
- மேலும் கல்வி நடவடிக்கையை மேற்கொள்ள உகந்த ஆரோக்கியமின்மை தொடர்பாக அரசாங்க மருத்துவரினால் உறுதிசெய்த கடிதம்.

உரிய ஆவணங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு, கல்வியியற் கல்லூரி முகாமைத்துவ குழுவினால் நோக்கப்பட்டு பரிந்துரைப்புகள் முன்வைக்கப்பட்ட பின் கல்வி அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவினதும் சுகாதார அமைச்சினால் அனுப்பப்பட்ட அரசாங்க வைத்தியசாலையின் வைத்தியர் அல்லது வைத்திய சபையினதும் சிபார்சுகளைப் பெற்று அதற்காக கல்வியியற் கல்லூரி நிறுவக சபை / கல்விச் செயலாளர் அனுமதி பெறப்பட்டு எவ்வித அறவிடலும் இன்றி பாடநெறியிலிருந்து விலகிக்கொள்ள வாய்ப்பளிக்கப்படும்.

9.4.2 சட்டப்படி பாடநெறியிலிருந்து விலகிக்கொள்ளாமல் பாடநெறியைத் தொடரும் காலப்பகுதியில் அல்லது நிரந்தர ஆசிரிய நியமனம் பெறும் வரையான காலப்பகுதியில் வெளிநாடு செல்வதற்காக எந்தவொரு பயிலுநருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

9.5 பாடநெறியைத் தொடரும் காலப் பகுதியில் ஒழுக்காற்றுக் காரணமாகவோ அல்லது சேர்த்துக்கொள்வதன் பொருட்டு போலித் தகவல்கள் முன்வைத்ததன் அடிப்படையில் 8.0 பகுதியில் குறிப்பிடப்பட்ட வகையில் விண்ணப்பித்தமை அல்லது அனுமதிக்கு தகைமையற்ற போன்ற பகுதிக்கு உரிய வகையில் போலித் தகவல்கள் வழங்கப்பட்ட அடிப்படையில் பாடநெறியை விட்டு விலக்கும் போது பிணை முறியின் முழுப்பெறுமதி (ரூபா 800,000.00) அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9.6 பாடநெறியைத் தொடரும் காலப்பகுதிக்குள் ஆசிரிய மாணவர்களுக்கு பகுதி 8.4 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாடநெறியைத் தொடர்வதற்கு எவ்விதத்திலும் அனுமதி வழங்கப்படமாட்டாது. அவ்வாறு பாடநெறிகளில் கலந்துகொள்வதாக உறுதிசெய்யப்படும் பட்சத்தில் ஆசிரிய மாணவர் ஒப்பமிடுகின்ற பிணைமுறி மற்றும் ஒப்பந் தத்தின் மொத்தப் பெறுமதி (ரூபா 800,000.00) மீள அறவிடப்பட்டு பாடநெறியிலிருந்து நீக்கப்படுவர்.

9.7 வர்த்தமானி அறிவித்தலில் 8.4. பகுதியில் காட்டப்பட்ட தகைமை மற்றும் நிபந்தனைகளின் கீழ் வேறு ஏதேனும் அரச உயர்கல்வி நிறுவனங்களில் தொழில்சார் பயிற்சிப் பாடநெறி / டிப்ளோமா அல்லது உயர் டிப்ளோமா பாடநெறிக்காக பதிவு செய்த / கற்றலை மேற்கொள்கின்ற விண்ணப்பதாரிகள், கல்வியியல் கல்லூரி அனுமதிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் அதற்காகப் பதிவு செய்யப்பட்ட தினத்தில் மேற்கூறிய நிறுவனத்தில் தம்மால் பதிவு செய்துகொண்டுள்ளதாக / கற்கின்ற பாடநெறிகளிலிருந்து முறைப்படி விலகிக் கொண்டமையை உறுதிசெய்த ஆவணங்கள் கல்வியியல் கல்லூரிக்கு ஒப்படைக்கப்படுவது கட்டாயமானது என்பதோடு, அவ்வாறு செய்யாத விண்ணப்பதாரிகள் கல்வியியல் கல்லூரியில் பதிவு செய்யப்படமாட்டார்கள்.

9.8 பாடநெறியைத் தொடரும் காலப் பகுதியில் பயிலுநர் திருமணப் பதிவு செய்தல் அல்லது விண்ணப்பிக்கும் போது / கல்வியியற் கல்லூரியில் பதிவு செய்வதற்கு முன்னர் திருமணப் பதிவு செய்தவர் / விவாகரத்தானவர் என உறுதி செய்யப்படின் மாணவ அந்தஸ்து இரத்துச் செய்யப்படும். திருமணமானமை தெரிய வந்ததன் பின்னர் எந்தவொரு காரணத்தினாலும் பாடநெறிக் காலப்பகுதிக்குள் விவாகரத்து செய்திருந்தாலும் எக்காரணம் கொண்டும் மீண்டும் மாணவர் அந்தஸ்து வழங்கப்பட மாட்டாது.

9.9 மதகுருமார்களுக்கான / துறவிகளுக்கான விசேட ஒதுக்கீட்டின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் பதிவு செய்ததன் பின்னர் பாடநெறிக் காலத்திலே சாதாரண வாழ்க்கைக்கு தம்மை மாற்றிக்கொண்டாராயின் பிணை முறிக்கு அமைய முழுப்பெறுமதி (ரூபா 800,000.00) அறவிடப்பட்டு பாடநெறியிலிருந்து விலக்கப்படுவார்கள். பயிற்சியை முடித்துக்கொண்டதன் பின்னர் சகல சமயங்களுக்குமுரிய மதகுருமார் / துறவிகள் தமது துறவி வாழ்க்கையைக் கைவிடுவதில்லையென்றும் குறைந்தது 05 வருடங்களுக்கு கல்வி அமைச்சுக்கு சேவையாற்றுவதாகவும் கல்வி அமைச்சுடன் பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்துக்கு உடன்பட வேண்டும். ஏதும் காரணத்தால் உரிய ஐந்து (05) வருட பூர்த்திக்கு முன் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதாயின் எஞ்சிய காலத்துக்காக (மாத அடிப்படையில் கணக்கிடப்பட்டு) பிணைமுறி உடன்படிக்கைக்கு உரிய தொகை கணக்கிடப்பட்டு, அந்த முழுத்தொகை அரசுக்கு செலுத்தப்படவேண்டும்.

செலுத்தப்படவேண்டிய தொகையானது

$\frac{\text{ரூபா } 800,000.00}{60 \text{ மாதங்கள்}}$ X பூரணப்படுத்துவதற்கு எஞ்சியுள்ள மாதங்கள் என அமையும்.

கவனத்திற் கொள்க :

- இதன்போது தகுதிகாண் காலத்துக்குள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பின் உரிய தொகை அறவிடப்பட்டு சேவையிலிருந்து விலக்கப்படுவார்.

9.10 பாடநெறியைத் தொடரும் காலத்திற்குள் எதிர்பார்க்கப்பட்ட பழக்கவழக்கங்கள், வரவு, ஆர்வம் உட்பட பிறிதும் கல்விச் செயற்பாடுகளில் முன்னேற்றங்களைக் காண்பிக்காத (இணைப்பாடவிதான செயற்பாடுகள் உட்பட) பயிலுநர்கள் பாடநெறியைத் தொடர்வதிலிருந்து நீக்கப்படுவர். அத்துடன் பாடநெறியின் முதலாவது ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் போது திருப்திகரமான மட்டத்தை அடையத் தவறும் போது பாடநெறியிலிருந்து நீக்கப்படுவர். இது தொடர்பாக கல்வி அமைச்சின் கல்வியியற் கல்லூரி நிறுவக சபையின் / கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

9.11 பாடநெறியைத் தொடரும் கால எல்லைக்குள் பயிலுநர்களின் உடல், உள பொருத்தம் தொடர்பாக பீடாதிபதி அல்லது கட்டுறுப்பயில்வு கால எல்லைக்குள் அதிபரின் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் மீண்டும்

விசேட நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதன் அறிக்கை கல்வியியற் கல்லூரி நிறுவக சபைக்கு / கல்விச் செயலாளருக்குச் சமர்ப்பித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

9.12 பாடநெறியைத் தொடரும் காலத்தின் போது கல்வியியற் கல்லூரியின் ஒழுக்க விதிமுறைகளுக்கு ஊறுவிளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவது உறுதி செய்யப்படுமாயின் அது தொடர்பாக கல்வியியற் கல்லூரியின் ஒழுக்காற்றுச் சபையின் விதப்புரைக்கு அமைய குறித்த காலப்பகுதியில் வகுப்புத்தடை செய்தல் / பாடநெறிக் காலத்தை நீடித்தல் / பாடநெறியிலிருந்து நீக்கப்படுதல் / பிறிதும் பொருத்தமான தண்டனைக்குட்படுத்தலுக்கான அதிகாரம் கல்வியியற் கல்லூரி நிறுவக சபையின் / கல்விச் செயலாளரின் வசமானதாகும்.

9.13 பாடநெறியைத் தொடரும் காலப்பகுதியில் பயிலுநர் யாதுமொரு பிற பாடநெறியை பின்பற்றுவதற்காக வார நாட்கள் / வார இறுதி நாட்களில் நிறுவனத்தை விட்டு வெளியே செல்ல எவ்விதத்திலும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

9.14 கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சகிதம் முதல் ஐந்து வருட காலம் ஆசிரிய சேவையில் இருக்கும் போது யாதும் காரணத்துக்காக சேவையிலிருந்து விலகுவதாயின் அல்லது வெளிநாடு செல்வதாயின் உரிய பிணைமுறி உடன்படிக்கைக்கு அமைய முழுத்தொகையான எட்டு இலட்சத்தில் (ரூபா 800,000.00) எஞ்சியிருக்கும் காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய (மாதங்கள் அடிப்படையில் கணக்கிடப்பட்டு) தொகை அரசுக்கு செலுத்தப்படவேண்டும்.

செலுத்தப்பட வேண்டிய தொகையானது

$$\frac{\text{ரூபா } 800{,}000.00}{60 \text{ மாதங்கள்}} \times \text{பூரணப்படுத்துவதற்கு எஞ்சியுள்ள மாதங்கள்}$$ என அமையும்.

**கவனத்திற் கொள்க :**

- முதல் ஐந்து வருட காலப்பகுதிக்குள் 9.14 பகுதியில் குறிப்பிட்டவாறு சேவையிலிருந்து விலகினால் மீண்டும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரியாக ஆசிரிய தொழிலில் நுழைவதற்கு சந்தர்ப்பம் பெற்றுக்கொடுக்கப்பட மாட்டாது.

- அரச பாடசாலையில் முதல் நியமனத் திகதி தொடக்கம் 05 வருட காலப்பகுதிக்கு முனைப்பான சேவைக் காலத்தினை பூர்த்திசெய்யாத ஆசிரியர் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா கொண்ட ஆசிரியருக்குரிய விரிவான டிப்ளோமா சான்றிதழைக் கோருவதற்கு தகைமையற்றவர்.

- ஆசிரிய சேவையின் முதல் ஐந்து (05) வருடங்களைப் பூர்த்திசெய்யாத தகுதிகாண் காலத்துக்குட்பட்ட கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரி ஆசிரியருக்கு கல்விச் செயலாளரின் 24/2017 சுற்றறிக்கையின்படி மற்றும் வர்த்தமானி அறிவித்தல், உடன்படிக்கை, பிணைமுறி, தாபனக்கோவை ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகளும் உரிய காலப்பகுதியினுள் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய ஒழுங்குவிதிகளும் செல்லுபடியாகும் என்ற வகையில் கல்விச் செயற்பாடுகளுக்காக மாத்திரம் சம்பளமற்ற லீவு பெற்று வெளிநாடு செல்லலாம்.

- ஆசிரிய சேவையின் முதல் ஐந்து (05) வருடங்களைப் பூர்த்திசெய்யாத எனினும் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரி ஆசிரியருக்கு கல்விச் செயலாளரின் 24/2017 சுற்றறிக்கையின்படி மற்றும் வர்த்தமானி அறிவித்தல், உடன்படிக்கை, பிணைமுறி, தாபனக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தில் 16 ஆவது பகுதியில் குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் உரிய காலப்பகுதியினுள் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய ஒழுங்குவிதிகளும் செல்லுபடியாகும் என்ற வகையில் அதற்கமைய கல்விச் செயற்பாடுகளுக்காக / வேலை நடவடிக்கைகளுக்காக சம்பளமற்ற லீவு பெற்று வெளிநாடு செல்லலாம்.

9.15 பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் ஆசிரிய மாணவர்களுக்கு கற்பித்தலில் தேசிய டிப்ளோமா வழங்கப்படும். பாடநெறி சார்ந்த பணிகள் மற்றும் ஆளுமை விருத்தி (கட்டாயமாக பங்கேற்க வேண்டிய பாட இணைச் செயற்பாடுகள் உட்பட) பாடநெறி தொடரும் காலத்திற்குள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுவதுடன், இம் மதிப்பீடு கற்பித்தலில் தேசிய டிப்ளோமா வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் இறுதி மதிப்பீட்டின் ஒரு பகுதியாகும்.

9.16 கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பெற்றுக்கொண்ட ஆசிரிய மாணவர்கள் அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர். இவர்கள் மாவட்ட அடிப்படையில் / மாகாண அடிப்படையில் / தேசிய மட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட போதிலும் இடைநிலைப்படுத்தும் போது உரிய மாவட்டத்தில் / மாகாணத்தில் வெற்றிடம் இல்லாவிடின் நாட்டின் ஏதாவது ஒரு இடத்தில் சேவை புரிவதற்கு இணங்க வேண்டும். (இரண்டாம் மொழி சிங்களம்/ தமிழ் பாடநெறிக்காக பாடநெறி இலக்கம் 44 மற்றும் 45 இன் கீழ்க் காட்டப்பட்டுள்ள நிபந்தனை பொருத்தமாகும்)

சேவைக்கமர்த்தப்படுதல் தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் அனுமதியுடன் கல்வியியற் கல்லூரி நிறுவக சபையின் / கல்விச் செயலாளரின் வசமானதாகும்.

9.16.1 பாடநெறிக்காக தெரிவுசெய்யப்படுவதற்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகள் மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உடன்படுவாராயின் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க வேண்டும்.

9.16.2 மேற்கூறப்பட்ட நிபந்தனையின் கீழ் பாடநெறியைத் தொடரும் விண்ணப்பதாரர்கள் கட்டாயமாகத் தாம் பயிலும் பாடநெறிக்குரிய பாடத்தைக் கற்பிக்க வேண்டும். மேலும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்த பின் மாவட்ட அடிப்படையில் /மாகாண அடிப்படையில் / தேசிய அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகள் முதல் நியமனம் பெறும், தமது நிரந்தர வதிவிட மாவட்டத்தில் / நிரந்தர வதிவிட மாகாணத்தில் அல்லது தேசிய மட்ட அடிப்படையில் குறிப்பிடப்பட்ட மாவட்;டத்தில் அல்லது முதல் நியமனம் பெறும் யாதேனுமொரு மாவட்டத்தில் / மாகாணத்தில் முதல் நியமனத் திகதி தொடக்கம் குறைந்த பட்சம் ஐந்து வருடங்கள் (05) சேவையாற்றுவது கட்டாய சேவை நிபந்தனையாகும் எனக் கவனத்திற் கொண்டு கல்வி அமைச்சின் செயலாளருடன் பிணைமுறி மற்றும் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும்.

9.17 கல்வி அமைச்சினால் பாடநெறிக்காக சேர்த்துக் கொள்ளப்படுகின்ற தேசிய கல்வியியற் கல்லூரியை, வைத்திய / தனிப்பட்ட காரணங்களுக்காக மாற்றிக்கொள்வதற்கு யாராவது ஒரு பயிலுநர் முயற்சிக்கின்றாராயின் அவர் தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றுக்கு அனுமதி பெறுவதற்கு தகைமை பெற மாட்டார்.

9.18 சேர்த்துக்கொள்ளும் செயன்முறை ஒழுங்குவிதிகள் நடைமுறைப்படுத்தப்படும் போது அது தொடர்பான உரிய அலுவலர்களுக்கு பயிலுநரினால் அல்லது அவருடன் தொடர்புடைய பிற நபர்களால் முறையற்ற செல்வாக்குகள் செலுத்தப்பட்டால் அவர் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு தகைமை இல்லாதவராக கருதப்படுவார்.

9.19 விண்ணப்பதாரியினால் விண்ணப்பிக்கும் பாடநெறிக்குரிய அனைத்து கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் விண்ணப்பம் கோரும் இறுதித் தினத்திற்கு (2025.11.28)அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்த வேண்டும்.

9.20 ஏதேனும் கல்வியியற் கல்லூரிக்கு ஏதேனும் பாடநெறிக்கு, உரிய மொழிமூலத்தில், உரிய மாவட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய எண்ணிக்கை நிரப்பப்படுவதற்கு மாவட்ட / மாகாண / தேசிய தேர்ச்சிகளின் தொடரொழுங்கில் தகைமை பெற்றோர் போதுமான அளவில் இல்லாதிருப்பின் அக் கல்வியியற் கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்படும் ஏதேனும் பாடநெறிகளில் கல்வி முறைமைக்குள் காணப்படும் அதிகளவிலான ஆசிரிய தேவைப்பாடுள்ள பாடநெறிக்கு முன்னுரிமை கிடைக்கும் வகையில் அவ்வவ் பாடநெறியின் கீழ் தேசிய மட்டத்தில் தகைமை கொண்ட விண்ணப்பதாரிகள் மூலம் எஞ்சிய வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும். (வர்த்தமானி அறிவித்தலில் ஆரம்பக் கல்வி பாடநெறியின் கீழ் “கவனத்தில் கொள்க” இல் iv மற்றும் 6.3 - ‘ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு தெரிவு செய்தலின்’ கீழ் 6.3.8. இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அந்தப் பாடநெறியின் கீழ் முதலாவது வாய்ப்பு பெற்றுத் தரப்படும்)

9.21 விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களில் இருந்து நேர்முகத் தேர்வுக்கு அழைக்க தகுதியான விண்ணப்பதாரர்களின் பட்டியல் கல்வி அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்படும். அதைப் பற்றி கவனமாக இருப்பது விண்ணப்பதாரர்களின் பொறுப்பாகும். மேலும், நேர்முகத் தேர்வில் பங்கேற்பது மட்டும் நியமனம் பெறுவதற்கான உரிமையை வழங்காது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

9.22 இந்த பாடநெறிகள் தற்போதைய பாடசாலைகளில் நடைமுறையில் உள்ள பாடத்திட்டங்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. எதிர்கால கல்வி சீர்திருத்தங்களுக்கு ஏற்ப மாற்றங்கள் நிகழ்ந்தால், இப்பாடநெறிகளிலும் மாற்றங்கள் ஏற்படக்கூடும். அதற்கேற்ப பொருத்தமான பாடநெறிகளை கற்கத் தேர்ந்தெடுக்கப்படும் பயிற்சியாளர்கள் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**10.0 விண்ணப்பித்தலுக்கான அறிவுறுத்தல்கள் :**

- வர்த்தமானி அறிவித்தலில் 14.0 இற்கு உரியதான 14.1- 14.8 பகுதியின் கீழ்க் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு பாடநெறிக்கும் மாவட்ட மட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை தொடர்பாக மிகவும் தெளிவாக விளங்கிக்கொண்டு அதன்படி விண்ணப்பிக்க வேண்டும்.

10.1 மிக விஷேடமானது

10.1.1 அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்க வேண்டியது நிகழ்நிலை முறை (Online System) மூலம் மட்டுமே.

**கவனத்திற் கொள்க :** பதிவுத் தபாலில் விண்ணப்பம் அனுப்பப்படக்கூடாது.

10.1.2 நிகழ்நிலை முறை (Online System) மூலம் விண்ணப்பிப்பது ஆங்கில மொழி மூலமாக மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன்படி உரிய நிகழ்நிலை முறைக்கு நுழைவதற்காக கீழ்க் காட்டப்பட்டவாறு கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குள் நுழைந்து உரிய படிமுறைகளைக் கடைப்பிடித்து உங்களுடைய விண்ணப்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.
https://ncoe.moe.gov.lk/NCOE

10.2 மேற்காட்டிய 10.1.1 இற்கமைய விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சமர்ப்பித்த (submit) பின்பு யாதேனும் ஒரு மாற்றத்தையும் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்பதால் வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட அறிவுரைகளை மிகவும் நன்றாக வாசித்து மிகச் சரியான தரவுகளை வழங்குதலின் முழுப்பொறுப்பும் விண்ணப்பதாரியினுடையதாகும். விஷேடமாக விண்ணப்பிக்கும் பாடநெறி தொடர்பாக தகவல் அல்லது வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதற்காக பின்னர் விடுக்கும் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படாது என்பதை கவனத்தில் கொள்க.

10.3 வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்ட நிபந்தனைத் தகைமை மற்றும் வெற்றிட எண்ணிக்கை தொடர்பாக விஷேட கவனம் செலுத்தி, ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் உச்சபட்சமாக மூன்று (03) பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

10.4 ஒரு பாடநெறிக்கு இரண்டு மொழிகள் மூலம் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அது இரண்டு (02) பாடநெறிகளுக்கு விண்ணப்பித்ததாக கருதப்படும். ஒவ்வொரு சமய மதகுருமார் தமது சமயத்திற்கு பொருத்தமான பாடநெறிக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

உதாரணம் : விஞ்ஞானப் பாடநெறி சிங்கள மொழிமூலம் மற்றும் ஆங்கில மொழிமூலம் ஆகிய இரண்டு மொழிமூலங்களிலும் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் இரண்டு பாடநெறிகளுக்கு விண்ணப்பித்ததாகக் கருதப்படுவர். எனவே அவ்விண்ணப்பதாரிக்கு விண்ணப்பிக்க முடிவது மேலும் ஒரு பாடநெறிக்கு மாத்திரமே.

10.5 வர்த்தமானி அறிவித்தலில் 6.2 – “நிரந்தர வதிவிடத்தைத் தீர்மானித்தல்” இன் கீழ் 6.2.1 பகுதிக்குரிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| *மாவட்டம்* | *மாவட்ட இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |

| *மாவட்டம்* | *மாவட்ட இலக்கம்* |
|---|---|
| கிளிநொச்சி | 11 |
| மன்னார் | 12 |
| வவுனியா | 13 |
| முல்லைத்தீவு | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அனுராதபுரம் | 20 |
| பொலன்னறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

- அந்த மாவட்டத்தின் இலக்கம் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தி விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவுக்குரிய மாவட்டத்திற்குரிய இலக்கத்தை சரியாக உள்ளிட வேண்டும்.

10.6 விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரி ஒருவருக்கு பிரத்தியேக மின்னஞ்சல் முகவரி (Personal Email Address) இல்லையாயின் நிகழ்நிலை முறைமை (Online System) ஊடாக விண்ணப்பிக்குமுன் பிரத்தியேக மின்னஞ்சல் முகவரியை உருவாக்கிக் கொள்ளல் மிகவும் அவசியமானது. இந்த மின்னஞ்சல் முகவரி விண்ணப்பாதாரியின் தனிப்பட்டவொன்றாக தாயாரித்துக்கொள்ளப்பட வேண்டும்.

10.7 அது போல யாதேனும் பாடநெறிக்கு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டவாறு தகுதி இல்லாமல் விண்ணப்பித்த பின் விண்ணப்பதாரிக்கு ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பாக கல்வி அமைச்சினால் எவ்வித பொறுப்பும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு பிழையின்றி நிகழ்நிலையின் மூலம் விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலையின் ஊடாக மட்டும் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பப்படும். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன், அது பற்றி குறிப்பிடப்படும் அறிவித்தலொன்று விண்ணப்பதாரர்களுக்கு குறுந்தகவலொன்றின் மூலம் / இணையதள அறிவித்தல் மூலம் வெளி யிடப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் இருப்பின், இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் கேட்டறிதல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், தொடரிலக்கம் மற்றும் முகவரி என்பனவற்றை சரியாக குறிப்பிட்ட கோரிக்கைக்

கடிதமொன்றை இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலத்திரனியல் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரித்தல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனுமொரு தகவலை உறுதிப் படுத்திக் கொள்ளும் பொருட்டு தங்களிடம் வைத்துக் கொண்டுள்ள விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியையும் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதன் பின்னர் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டின் பிரதியையும் ஆயத்தமாக வைத்திருப்பதும் பயனுள்ளதாக அமையும்.

(iv) அனுமதிப்பத்திரத்தினை பரீட்சித்து பார்த்து திருத்தங்கள் இருப்பின் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினை அழைத்து விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் உரிய திருத்தங்களை செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் அல்லது நேர்முகப் பரீட்சையின் போது திருத்தம் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

8.0 நியமனத்திற்காக விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிப்பதற்கு திணைக்களத் தலைவர் விருப்பம் தெரிவித்தல் வேண்டும். பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்ப தாரரின் கையெழுத்தினை திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தி யோகத்தரினால் சான்றுரைப்படுத்தல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப் படும் அனுமதிப் பத்திரத்தையுடைய உத்தியோகத் தர்களுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு இயலுமான வகையில் திணைக்கள தலைவர்களினால் கடமை விடுமுறை வழங்குதல் வேண்டும். பயணக் கட்டணங்கள் செலுத்தப்பட மாட்டாது.

**9.0 பரீட்சைக்கு தோற்றுதல் :**

(அ) பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரரொருவர் அவரது அனுமதி அட்டையினை பரீட்சை மண்டப பொறுப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரருக்கு பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் உரிய அனுமதிப் பத்திரத்தில் தமது கையெழுத்தினை உறுதிப்படுத்தி பரீட்சைக்கு தோற்றும் முதலாவது நாளில், பரீட்சை மண்டப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்பற்ற வேண்டிய ஒழுங்குவிதிகள் இவ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

**குறிப்பு**: விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரமொன்றை வெளியிடல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது இப் பதவிக்கான தகைமையை பூர்த்தி செய்வதாக கருதக்கூடாது.

**10.0 பரீட்சார்த்தியின் ஆளடையாளம்:**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களின் பொருட்டும் பரீட்சை மண்டபத்தின் பொறுப்பதிகாரி திருப்பதியடையும் வகையில் தமது சுய ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு கீழ்க் குறிப்பிடப்படும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் மற்றும் மின் தொடர்பாடல் கருவிகளை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் முகம் மற்றும் காதுகள் இரண்டும் மூடியிருக்காதவாறு பரீட்சை மண்டபத்திற்குள் உட்செல்லுதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு உட்செல்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. மேலும், பரீட்சை மண்டபத்திற்கு உட்சென்ற நேரம் தொடக்கம் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாதிருத்தல் வேண்டும்.

**11.0 போலியான தகவல்களுக்கான தண்டனை:**

இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என தெரிய வருமாயின், அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரர் சமர்ப்பித்துள்ள தகவல்கள் போலியானது என அறிந்தே சமர்ப்பித்துள்ளதாக தெரியவருமிடத்து, அல்லது ஏதேனும் விடயம் அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க முடியும்.

**12.0 பரீட்சை நடைமுறை :**

இப் பரீட்சை மூன்று வினாத்தாள்களைக் கொண்டமைந் திருக்கும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்று வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| | பாடம் | நேரம் | மொத்த புள்ளிகள் | சித்தியடையப் பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| (01) | நூலகவியல் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| (02) | நுண்ணறிவுத் தேர்வு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| (03) | பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |

மேற்படி பாடங்களுக்கு ஏற்புடையதான பாட விதானம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைந்துள்ளது.

12.1 (01) **நூலகவியல்**

(1) நூலகங்களும் நூலகத்துவமும்

நூலகங்களும் நூலக வரலாறும்
நூலகங்களின் அங்கத்துவர் பணிகள்
நூல்கள் மற்றும் பல்வேறுபட்ட ஆவணங்கள், அச்சிடப்படாத ஊடகங்களின் ஆரம்பமும் விஸ்தரிப்பும்
நிபுனத்துவ தொழில்சார் சங்கங்கள்,
இலங்கை நூலகர் சங்கம்
அமெரிக்க மற்றும் பிரித்தானிய நூலக சங்கங்கள்
நூலகங்களின் வகைகள்
பாடசாலை மற்றும் கல்வி நிலைய நூலகங்கள்
அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் நூலகங்கள்
பொது நூலகங்கள்
நூலகக் குழுக்கள்
பேணிப் பாதுகாத்தல் (Conservation) மற்றும் காப்பீடு (Preservation)

(2) அறிவும் தகவல் ஒழுங்கமைப்பும்

நூலகங்களை வகைப்படுத்தல் மற்றும் அதன் நோக்கம் மற்றும் பயன்கள்
நூலகங்களில் வகைப்படுத்தலின் அடிப்படை
டிவி தசம வகைப்படுத்தல்
பட்டியலாக்கமும் அதன் நோக்கங்களும்
AACR 2 பட்டியலாக்க சட்டக்கோவை
பதிவுகளும் நூல்களைப் பற்றிய விபரங்களும்
விதிமுறை வகைப்பாடுகள்

(3) நூலக வளங்களும் தகவல் சேவைகளும் :
பல்வகையான நூலக வளங்கள்
நூலக வளங்கள் தெரிவு மற்றும் தெரிவு செயன்முறை
ஏற்பு மற்றும் வழங்கள் செயன்முறை
தளக்கோளவமைப்பு
இருப்புக்களின் கணக்கெடுப்பும் அகற்றல் செயற்பாடுகளும்

(4) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (Information Communication Technology)

நூலக சேவைகள் தொடர்பில் கணினி தொழில்நுட்பத்தின் தாக்கம்

- பல்தேர்வு வினா, சுருக்க விடைகள், கட்டமைக்கப்பட்ட மற்றும் அரை கட்டமைக்கப்பட்ட வடிவிலான 05 வினாக்களை உள்ளடக்கிய வினாப் பத்திரமாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். காலம் மூன்று (03) மணித்தியாலங்கள்

12.2 (02) **நுண்ணறிவுத் தேர்வு**

சொற்கள், எண்கள் மற்றும் உருவமைப்பில் தரப்படும் பிரச்சினைகள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றை கிரகித்தலும் அளவிடுவதிலும் காலம் மற்றும் அவகாசத்திற்கு இடையிலான தொடர்பினை உணர்ந்து கொள்வதிலும் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக்கூர்மையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

- இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். காலம் ஒரு (01) மணித்தியாலம்

12.3 (03) **பொது அறிவு**

தேசிய, வலய மற்றும் முழு உலகிலும் பல்வேறு அமைப்புக்களின் சுற்றாடலினுள் மாத்திரமின்றி எமது சமுதாயத்தினுள் நிலவுகின்ற சமூக, கலாசார, கல்வி, அரசியல், பொருளாதார மற்றும் ஏனைய காரணிகளைப் பற்றியும் நூலக விடயம் மற்றும் நூலகத் துறை மீதான பரீட்சார்த்தியின் பொது அறிவு மற்றும் விழிப்புணர்வு தொடர்பாக விண்ணப்பதாரரின் அறிவு மற்றும் புரிந்துணர்வினை மதிப்பிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

- இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். காலம் ஒரு (01) மணித்தியாலம்

குறிப்பு:

நியமனத்திற்கான தகைமைகளைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன், மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்கின்ற வாறு பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்கு முறையை கட்டாயமாக கடைப்பிடித்து நியமனங்கள் வழங்கப்படும்.

13.0 **பரீட்சை பெறுபேறுகள் :**

இவ் அறிவித்தலில் 12.0 இன் குறிப்பின் பிரகாரம் ஒவ்வொரு பாடத்துக்கும் 40% வீதத்திற்கு குறையாது பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்களின் மொத்த புள்ளிகளின் திறமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் இணைந்த சேவைகள் பணிப்பாளர்நாயகம், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு வழங்கப்படும். இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி கிடைத்ததன் பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அனுப்புவது அல்லது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடுவது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் மேற் கொள்ளப்படும்.

14.0 பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடல் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் இணங்கியொழுகுதல் வேண்டும். பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்களுக்காக சுமத்தப் பட்டுள்ள சட்டதிட்டங்கள் வர்த்தமானியில் வேறாக அச்சிடப்பட்டுள்ளது. இச் சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப் படும் தண்டனைக்கு ஆளாவதற்கு அவர் களுக்கு நேரிடும்.

15.0 இப் பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுவதுடன் குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படுமாயின் சிங்கள மொழியின் சொற்றொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மேலும், இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ் வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள பொது பரீட்சைச் சட்டதிட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

என்.யு.நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2020, நவெம்பர் 03.

11-130/1

## பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

1.0 2017.06.21 ஆந் திகதிய மற்றும் 2024/35 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப் பட்ட இலங்கை அரச நூலகர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் Our Services இன் கீழ் வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை இணையவழி (online) முறை மாத்திரமே அனுப்ப வேண்டும். நிகழ்நிலையினூடாக விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்வது 2025, திசெம்பர் 08 ஆந் திகதி ஆகும். இப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026 பெப்புருவரி மாதம் கொழும்பில் நடைபெறும்.

**குறிப்பு 1** - நிகழ்நிலையினூடாக விண்ணப்பப்படிவங் களை ஏற்றுக் கொள்வது 2025, நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதுடன் 2025, திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி பி.ப 9.00 மணிக்கு முடிவடையும்.

**குறிப்பு 2** - தற்போது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தமது தனிப்பட்ட ஆவணகோப்பிற்கு உட்செலுத்துவதற்காக தாபன தலைவரிடம் ஒப்படைக்க வேண்டியதுடன், நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கும் சந்தர்ப்பத்தில் தாபன தலைவரினால் சான்றுரைப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

2.0 இப் பரீட்சை பெறுபேறுகளின் படி திறமையின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள், இலங்கை அரசாங்க நூலகர் சேவையில் தரம் III இன் பதவிகளுக்கு நியமிப்பதற்காக தெரிவு செய்யப்படுவார்கள். பரீட்சையை காலம் தாழ்த்துவதற்கு அல்லது இரத்து செய்வதற்கு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு. மேலும் நியமனம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப் படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது வெற்றிடங்கள் எல்லாவற்றையும் நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

3.0 **சம்பள அளவுத்திட்டம்:** இலக்கம் 10/2025 மற்றும் 2025.03.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை II இன் பிரகாரம் சேவைக்கு ஏற்புடையதான சம்பள குறியீட்டு இலக்கம் MN 3-2025 ஆவதுடன் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 52,250 – 10x800 – 11x1,190 – 10x1,320 – 10x1,350 – 100,040/- ஆகும். இச்சம்பளம் உங்களுக்கு உரித்தாவது 2027.01.01 இல் இருந்தாகும் அதுவரையில் இச்சுற்றறிக்கையின் அட்டவணை III இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

4.0 இந் நியமனம் நிரந்தரமானதும். ஓய்வூதிய உரித் துடையதுமாகும். இப் பரீட்சையின் ஊடாக இலங்கை அரச நூலகர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படும் அலுவலர்களுக்கு உரித்துடைய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் பின்னர் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர் கட்டுப்படல் வேண்டும்.

5.0 இப் போட்டிப் பரீட்சையின் மூலம் நிரப்புவதற்கு எதிர்பார்க்கும் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 3% அங்கவீன விண்ணப்பதாரிகளுக்காக ஒதுக்கப் படும். பரீட்சையில் தகைமை பெறும் அங்கவீன விண்ணப்பதாரர்களிலிருந்து உயர்மட்ட புள்ளி களிலிருந்து 3% மான விகிதாசாரத்தினர் மட்டும் திறமை ஒழுங்குவரிசையின் பிரகாரம் நியமனம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவார்கள். இதற்கு தகைமை பெறுவதற்கு பரீட்சையின் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் கீழ் நூற்றுக்கு நாற்பது வீதம் (40%) விண்ணப்பதாரர்களினால் பெறுதல் வேண்டும். அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 27/88 இன் பிரகாரம் அங்கவீன அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்குரியதாகும்.

**குறிப்பு** - நிகழ்நிலையினூடாக விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது உரிய முறையில் அங்கவீன நிபந்தனைகளின் கீழ் விண்ணப்பிப்பதாக குறிப்பிடல் வேண்டும் என்பதுடன், அங்கவீனமல்லாத நபரொருவர் பொய்யாக அங்கவீனமென குறிப்பிடக்கூடாது.

6.0 **சேவை நிபந்தனைகள் :**

i. அரசாங்க சேவையில் நியமனங்களை கட்டுப் படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 2024/35 மற்றும் 2017.06.21 ஆந் தினத்தினைக் கொண்ட அதிவிசேட வர்த்த மானியில் வெளியிடப்பட்ட இலங்கை அரச நூலகர் சேவை தொடர்பாக சேவைப் பிரமாணக் குறிப்பில் சுமத்தப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அவ் சேவைப்பிரமாணங்களுக்கு செய்துள்ள அல்லது மேலும் செய்யப்படும் அல்லது திருத்தங்களுக்கும் தாபனக்கோவையின் மற்றும் நிதி விதிமுறைகளுக்கும் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14ஆந் தினத்தினைக் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதியின் கீழ் தெரிவு செய்யப்படும் அபேட்சகரொருவர் சேவையில் தரம் IIIற்கு நியமிக்கப்படுவார்.

ii. திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கு நியமனம் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) ஆண்டுகால நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுவர். அலுவலர் தரம் III இற்கு நியமனம் செய்யப்பட்டு மூன்று (03) ஆண்டுகளுக்குள் சேவை பிரமாணக்குறிப்பின் படி குறித்த முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் அலுவலரின் வேலை, வருகை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானதாக உள்ளதென திணைக்களத் தலைவர் திருப்தியுறும் பட்சத்தில் மூன்று ஆண்டுகளின் இறுதியில் அது பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிக்கையிட்டதன் பின்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் திருப்தியுறும் பட்சத்தில் குறித்த அலுவலரின் நியமனம் உறுதிப்படுத்தப்படும்.

iii. முதலாவது நியமனம் பெற்ற சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது 03 வருடகாலம் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் சிறப்புக் காரணங்களின் அடிப்படையில் அக்கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் யாதேனும் ஒரு உத்தியோகத்தரை இடம் மாற்றுவதற்கு தேவைப்படின், நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் காணப்படுகின்றது.

iv. நீங்கள் நியமனத்துக்காக தகைமைபெற்ற மொழி மூலத்துக்கு அமைவாக 2020.10.16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கைகளுக்கு அமைவாக உரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

7.0 **தகைமைகள் :** இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் III இற்கான பதவியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகள் ஏற்புடையனவாகும்.

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(அதற்கமைய 2007.12.08 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1995.12.08 திகதிக்கு அல்லது அதன் பின்னர் பிறந்த திகதி காணப் படுபவர்களுக்கு மாத்திரம் இதற்காக விண்ணப் பிப்பதற்கு தகைமை காணப்படுகின்றது)

(ஈ) கல்வித் தகைமைகள் :

(i) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மற்றும் கணிதம் உள்ளடங்கலாக மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

(ii) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ.த) பரீட்சையில் சகல பாடங்களிலும் ( பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(உ) தொழிற்சார் தகைமைகள் :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நூலகவியல் தொடர்பான மூன்றாண்டு கால டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) இலங்கை நூலகர் சங்கத்தின் நூலகவியல் தொடர்பாக மூன்று (03) வருட கால டிப்ளோமா பாடநெறியை சித்தியடைந்திருத்தல்

அல்லது

(iii) நூலகவியல் தொடர்பாக மேற்குறிப்பிட்ட (i) அல்லது (ii) ஆம் தகைமையை விட உயர் தகைமையைப் பெற்றிருத்தல் (அவ்வாறான தகைமைகள் குறித்த பல்கழைக்கழகத்தின் அதிகாரிகள் மற்றும் இலங்கை நூலகச் சங்கம் ஆகியவற்றில் விசாரித்து இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்)

குறிப்பு :

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்கு உரித்தான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

(ii) எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப் பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரித் தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் உடல் மற்றும் உள ரீதியாக தேகா ரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

8.0 **பரீட்சை நிபந்தனைகள்** :

(i) நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் பூர்த்தி செய்தல் வேண்டும். (பூர்த்தி செய்யப்பட்ட தகவல்களின் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்தியதன் பின்னர் சமர்ப்பித்தல் (submit) வேண்டும்). நிகழ்நிலையினூடாக விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்காக தயாரித்துள்ள பொது ஆலோசனை பத்திரத்தினை (Common Instructions) தரவிறக்கம் செய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்யும் போது அவ் ஆலோசனைகளை கடுமையாக பின்பற்றுதல் வேண்டும். பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலையினூடாக சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதியின் செல்லுபடியான விண்ணப்பப்படிவமென இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் ஏற்கப்பட்டதாக/ ஏற்கப்பட வில்லையென கட்டமைப்பிற்குள் உள்நுழைய பயன்படுத்தும் கையடக்க தொலைபேசி இலக்கத் திற்கு குறுந்தகவலொன்றின் (SMS) ஊடாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலமாகவோ அறிவிக்கப்படும்.

(ii) இப்பரீட்சையின் பொருட்டு பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது, நிகழ்நிலை அமைப்பின் மூலம் வழங்கப்படும் கீழ்க் குறிப்பிடப்படும் கட்டணம் செலுத்தப்படும் வழிமுறையின் கீழ் மட்டும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கி அட்டையின் மூலமும் (Any Bank Credit Card)

ii. இணையதளக் கொடுப்பனவு வசதிகள் உள்ள எந்தவொரு வங்கி பற்று அட்டையின் மூலம் (Any Bank Debit Card with the facility of internet transaction)

iii. இலங்கை வங்கி ஒன்லைன் வங்கி முறையின் மூலம் (Online Banking method of bank of Ceylon)

iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Any Branch of the bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்படி முறைகளின் மூலம் கொடுப்பனவுகள் மேற் கொள்ளப்படும் முறை தொடர்பான அறிவுரைகள் இணையதளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுரைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதாகக் குறுந் தகவலொன்று (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு விதித்துரைக்கப்பட்டுள்ள பணத்தைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது அதிகமாகச் செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும் போது, ஏற்படும் தவறுகள் தொடர்பாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக் கூற மாட்டாது.

(இ) பரீட்சையின் பொருட்டு செலுத்தப்படும் பணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படுவதற்கு அல்லது வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றுவதற்கு இயலாது.

(iii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு பிழையின்றி நிகழ்நிலையின் மூலம் விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நிகழ்நிலையின் ஊடாக மட்டும் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பப்படும். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன், அது பற்றி குறிப்பிடப்படும் அறிவித்தலொன்று விண்ணப்பதாரர்களுக்கு குறுந்தகவலொன்றின் மூலம் / இணையதள வெளியிடப்படும். பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் இருப்பின், இணையதள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் கேட்டறிதல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொடரிலக்கம் மற்றும் முகவரி என்பனவற்றை சரியாக குறிப்பிட்ட கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலத் திரனியல் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரித்தல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு தங்களிடம் வைத்துக் கொண்டுள்ள விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியையும் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதன் பின்னர் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியையும் ஆயத்தமாக வைத்திருப்பதும் பயனுள்ளதாக அமையும்.

(iv) அனுமதிப்பத்திரத்தினை பரீட்சித்து பார்த்து திருத்தங்கள் இருப்பின் இலங்கை பரீட்சை திணைக்களத்தினை அழைத்து விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் உரிய திருத்தங்களை செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் அல்லது நேர்முகப் பரீட்சையின் போது திருத்தம் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(v) பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண் ணப்பதாரிகள் தனது கையொப்பத்தை அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, அரச அல்லது மாகாண சேவையின் நிரந்தர பதவிநிலை தரத்துடைய உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது பௌத்த விகாரையின் தலைமைப் பிக்கு அல்லது ஏனைய மதத் தளங்களுக்குப் பொறுப்பான மதத் தலைவர் அவர்களைக் கொண்டு சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

9.0 **பரீட்சைக்கு தோற்றுதல் :**

(அ) பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரரொருவர் அவரின் அனுமதி அட்டையினை பரீட்சை மண்டப் பொறுப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்ப தாரருக்கு பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரர் தமக்குரிய பரீட்சை மண்டபத்தில் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்ப தாரருக்கும் உரிய அனுமதிப் பத்திரத்தில் தமது கையெழுத்தினை உறுதிப்படுத்தி முதலாவதாக பரீட்சைக்கு தோற்றும் நாளில், பரீட்சை மண்டப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்பற்ற வேண்டிய விதிகளின் கோவையை இவ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

**குறிப்பு:** விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரமொன்றை வெளியிடல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது இப் பதவிக்கான தகைமையை பூர்த்தி செய்வதாக கருதக்கூடாது.

10.0 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களின் பொருட்டும் பரீட்சை மண்டபத்தின் பொறுப்பதிகாரி திருப்தியடையும் வகையில் தமது சுய ஆளடையாளத்தை உறுதிப் படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு கீழ்க் குறிப்பிடப்படும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. தேசிய அடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு;
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் மற்றும் மின் தொடர்பாடல் கருவிகளை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டும் மூடியிருக்காதவாறு பரீட்சைகள் மண்டபத்திற்குள் உட்செல்லுதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைகள் மண்டபத்திற்கு உட்செல்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. மேலும், பரீட்சைகள் மண்டபத்திற்கு உட்சென்ற நேரம் தொடக்கம் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாதிருத்தல் வேண்டும்.

11.0 **போலியான தகவல்களுக்கான தண்டனை:**

இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என தெரிய வருமாயின், அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரர் சமர்ப்பித்துள்ள தகவல்கள் போலியானது என அறிந்தே சமர்ப்பித்துள்ளதாக தெரியவருமிடத்து, அல்லது ஏதேனும் விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க முடியும்.

12.0 **பரீட்சை நடைமுறை :**

இப் பரீட்சை மூன்று வினாத்தாள்களைக் கொண்டமைந்திருக்கும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| | பாடம் | நேரம் | மொத்த புள்ளிகள் | சித்தியடையப் பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| (01) | நூலகவியல் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| (02) | நுண்ணறிவுத் தேர்வு | 01 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| (03) | பொது அறிவு | 01 மணித்தியாலங்கள் | 100 | 40% |

மேற்படி பாடங்களுக்கு ஏற்புடையதான பாட விதானம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைந்துள்ளது.

12.1 (01) **நூலகவியல்**

(1) நூலகங்களும் நூலகத்துவமும்

நூலகங்களும் நூலக வரலாறும், புராதன மற்றும் நவீன உலகத்தின் பிரதான நூலகங்கள்
எழுத்துக்கலை மற்றும் புத்தகங்கள் உள்ளடங்கலாக எழுதப்பட்ட ஊடகங்களின் ஆரம்பமும் பரிணாம வளர்ச்சியும்
அச்சிடல் கலையின் ஆரம்பமும், விரிவாக்கமும், நூலக மற்றும் சமூக அபிவிருத்தி விடயங்கள் மீதான தாக்கங்கள்.

நூலகங்களின் வகைகள்

விசேட நூலகம்

அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் முதலான நிறுவனங்கள் சார்ந்த நூலகங்கள், ஆராய்ச்சி நூலகங்களின் கட்டமைப்பு, தொழிற்பாடுகள் மற்றும் பணிகள்

கல்விசார் நூலகங்கள்

பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்கள் சார்ந்த நூலகங்களின் கட்டமைப்பு, தொழிற்பாடுகள் மற்றும் பணிகள்

பாடசாலை நூலகங்கள்

பொது நூலகங்கள்

பிரிவெனாக்களின் நூலகங்கள் மற்றும் துறவி மட / சமய நிறுவனங்களின் நூலகங்கள்

நூலகக் குழுக்கள் - கட்டமைப்பு, தேவைப்பாடுகள், முக்கியத்துவம் மற்றும் தொழிற்பாடுகள்

நூலக தொழிலுக்குரிய புலமைசார் தொழில் அமைப்புக்கள் மற்றும் அவற்றின் தொழிற் பாடுகள் : தேசிய மற்றும் சர்வதேச (இலங்கை, இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா)

நூலகக் கட்டிடங்கள் - திட்டமிடல், கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்

- தற்போதுள்ள கட்டிமொன்றில் நூலகம் ஒன்றை தாபித்தல், அமைத்தல் அல்லது மேம் படுத்தல்.

நூலகப் பொருட்களை பராமரித்தல், பேணிப் பாதுகாத்தல் (Conservation) மற்றும் காப்பீடு (Preservation)

இடர்கள் (Disasters) மற்றும் அனர்த்த முகாமைத்துவம் (Disaster Management)

(2) **அறிவும் தகவல் ஒழுங்கமைப்பும்**

நூல்களின் வகைப்படுத்தல் நோக்கங்களும் நன்மை களும்

இலங்கை நூலகங்களில் கையாளப்படும் பிரதான பகுப்பாக்கத்திட்டங்கள் : துயி தசமதான பகுப் பாக்கம், சர்வதேச தசமதான பகுப்பாக்கத் திட்டம்

நூலகப் பட்டியலாக்கத்தின் குறிக்கோளும் ஆங்கிலோ அமெரிக்க பட்டியலாக்கல் சட்டக் கோவை (AACR) முறைமை

நூல்களைப் பற்றிய விபரங்கள்

AACR 2 விதிமுறைகளைப் பயன்படுத்தி புள்ளி விபரப் பட்டியலைத் தயாரித்தல்.

(3) **நூலக வளங்களும் தகவல் சேவைகளும் :**

பல்வகையான நூலக வளங்கள்

சேகரிப்பு அபிவிருத்தி, சேகரிப்பு அபிவிருத்திக் கொள்கை மற்றும் அதன் முக்கியத்துவம்

நூலக வளங்களை தேர்ந்தெடுத்தல் உள்ளடங்கலாக ஏற்புச் செயற்பாடுகள்

(i) நூலக வளங்களை தேர்ந்தெடுத்தலின் கோட் பாடுகளும், மூலங்களும்

(ii) ஏற்புச் செயற்பாடுகள், செயலாக்கம் உட்பட பல்வகையான தொழில்நுட்ப சேவைகள்

(iii) இருப்புக்களின் கணக்கெடுப்பும் அகற்றல் செயற் பாடுகளும்

வெளியீடு, பதிப்புரிமை, தடைகள்

நடைமுறை விழிப்புணர்வுச் சேவைகள் (Current Awareness Service)

வாசகர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்

மக்கள் தொடர்பும் நூலகங்கள் தொடர்பான பிரச் சாரங்களும்.

(4) **தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்**

நூலகங்களில் கணினிப் பயன்பாடு மற்றும் நூலக சேவைகள் மற்றும் அலுவலகங்களில் தகவல் தொழில்நுட்ப முக்கியத்துவம் மற்றும் பயனுறுதித்தன்மை

➢ மேற்படி 4 துறைகளும் உள்ளடங்கும் வண்ணம் தயாரிக்கப்படும் கட்டமைக்கப் பட்ட கட்டுரை அமைப்பிலான வினாக்களைக் கொண்ட வினாப் பத்திரமாகும். சகல வினாக் களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். காலம் மூன்று (03) மணித்தியாலங்கள்

12.2 (02) **நுண்ணறிவுத் தேர்வு**

சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் சிக்கலான வினாக்கள் தொடர்பிலான விண்ணப்பதாரியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றை கிரகித்தலும் அளவிடுவதிலும் காலம் மற்றும் அவகாசத்திற்கு இடையிலான தொடர்பினை உணர்ந்து கொள்வதிலும் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக் கூர்மையையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

➢ இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களைக் கொண்ட மைந்த வினாத்தாளாகும். சகல வினாக் களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். காலம் ஒரு (01) மணித்தியாலம்

12.3 (03) **பொது அறிவு**

தேசிய, பிராந்திய மற்றும் அனைத்துலக ரீதியான பல அமைப்புக்களைப் போன்று எமது சமூகத்தில் நிலவும் சமூக, கலாச்சார, கல்வி, அரசியல், பொருளாதார அத்துடன் ஏனைய காரணிகளைப் பற்றியும் நூலக விடயம் மற்றும் நூலகத் துறை மீதான விண்ணப்பதாரிகளின் பொது அறிவு மற்றும்

விழிப்புணர்வை பற்றியும் மதிப்பிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

- இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும். சகல வினாக்களுக்கும் விடை யளிக்கப்படுதல் வேண்டும். காலம் ஒரு (01) மணித்தியாலம்

குறிப்பு:

நியமனத்திற்கான தகைமைகளைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்படடுள்ள புள்ளிகளில் குறைந்த பட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் விண்ணபதாரிகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் , திறந்த போட்டிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை பூர்த்தி செய்கின்றவாறு பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறையை கட்டாயமாக கடைபிடித்து நியமனங்கள் வழங்கப்படும்.

13.0 **பரீட்சை பெறுபேறுகள் :**

இவ் அறிவித்தலில் 12.0இன் குறிப்பின் பிரகாரம் ஒவ்வொரு பாடத்துக்கும் 40 வீதத்திற்கு குறையாது பெற்றுக் கொள்ளும் விண்ணபதாரர்களின் மொத்த புள்ளிகளின் திறமை அடிப்படையில் தயாரிக்கப்பட்டபெறுபேற்று ஆவணம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு வழங்கப்படும். இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனுமதி வழங்கியவுடன் பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அனுப்புவதும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடுவதும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

14.0 பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடல் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் இணங்கியொழுகுதல் வேண்டும். சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் தண்டனைக்கு கீழ்ப்படிவதற்கு அவருக்கு நேரிடும்.

15.0 இப் பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுவதுடன் குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படுமாயின் சிங்கள மொழியின் சொற்தொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மேலும், இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ் வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

என்.யு.நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2020, நவெம்பர் 03.

11-130/2

---

## பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### அரச மொழிப்பெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2024

1.0 அரச மொழிப்பெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I க்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்பங்கள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் Our Service இன் கீழ் வெளி யிடப்பட்டுள்ளதுடன், விண்ணப் பங்களை இணையவழி (online) முறை மாத்திரமே அனுப்ப வேண்டும். நிகழ் நிலையினூடாக விண்ணபப் படிவங்களை ஏற்றுக் கொள்வது 2025, திசெம்பர் 08 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு 1** - நிகழ்நிலையினூடாக விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்வது 2025, நவெம்பர் மாதம் 10 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதுடன் 2025, திசெம்பர் மாதம் 08 ஆம் திகதி பி.ப 9.00 மணிக்கு முடிவடையும்.

**குறிப்பு 2** - தற்போது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களின் விண்ணபப்படிவத்தின் பிரதியொன்றை தமது தனிப்பட்ட ஆவணகோப்பிற்கு உட்செலுத்துவதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டியதுடன், நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் சான்றுரைப்படுத்திய விண்ணபப்படிவத்தின் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

1.1 இவ்வறிவித்தலில் "சேவை" என்னும் பதம் இணைந்த சேவையின் மொழிபெயர்ப்பாளர் சேவையையும் குறிக்கும்.

1.2 இப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் 2026, பெப்புருவரி மாதம் கொழும்பில் நடாத்தப் படும். இப் பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு உண்டு. பரீட்சையின் பெறுபெறுகளின் அடிப்படையில் நியமிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும், நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியும் நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். பதவி வெற்றிடங்களில் எவற்றையேனும் அல்லது எல்லாவற்றையும் நிரப்பாது இருக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு. சேவை அவசியத்தின் பொருட்டு அந்தந்த மொழி மூலங்களில் நிரப்பப் படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை நியமன அதிகாரியாயல் தீர்மானிக்கப்படும்.

2.0 ஆட்சேர்க்கப்படும் மொழி மூலங்கள் பின்வருமாறு :

(1) சிங்களம்/ தமிழ் - தமிழ்/ சிங்களம்

(2) சிங்களம்/ ஆங்கிலம் - ஆங்கிலம்/ சிங்களம்

(3) தமிழ்/ ஆங்கிலம் - ஆங்கிலம்/ தமிழ்

3.0 **சம்பள அளவுத்திட்டம்** : இலக்கம் 10/2025 மற்றும் 2025.03.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை II இன் பிரகாரம் ஏற்புடையதான சம்பள குறியீட்டு இலக்கம் MN 6-2025 ஆவதுடன்மாதாந்தசம்பளஅளவுத்திட்டம்ரூபா.62,230 – 10x1,190 – 11x1,360 – 15x1,670 – ரூபா 114,140.00 ஆகும். நியமனம் வலுப்பெறும் தினத்திலிருந்து நீங்கள் குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் 12 ஆவது படிநிலையில் வைக்கப்படுவீர்கள். அதுவரையில் இச்சுற்றறிக்கையின் அட்டவணை IIIஇன் ஏற்பாடுகளின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

4.0 இந் நியமனம் நிரந்தரமானதும். ஓய்வூதிய உரித் துடையதுமாகும். இப் பரீட்சையின் ஊடாக மொழி பெயர்ப்பாளர் சேவையின் தரம் I இற்கு நியமிக்கப்படும் அலுவலர்களுக்கு உரித்துடைய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் பின்னர் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர் கட்டுப்படல் வேண்டும்.

5.0 இப் போட்டிப் பரீட்சையின் மூலம் நிரப்புவதற்கு எதிர்பார்க்கும் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 3% அங்கவீன விண்ணப்பதாரிகளுக்காக ஒதுக்கப் படும். பரீட்சையில் தகைமை பெறும் அங்கவீன விண்ணப்பதாரர்களிலிருந்து உயர்மட்ட புள்ளி களிலிருந்து 3% மான விகிதாசாரத்தினர் மட்டும் திறமை ஒழுங்குவரிசையின் பிரகாரம் நியமனம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவார்கள். இதற்கு தகைமை பெறுவதற்கு பரீட்சையின் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளிள் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது வீதம் (40%) விண்ணப்பதாரர்களினால் பெறுதல் வேண்டும். அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 27/88 இன் ஏற்பாடுகள் அங்கவீன அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்குரியதாகும்.

**குறிப்பு -** நிகழ்நிலையினூடாக விண்ணப்பப்படிவங் களை பூர்த்தி செய்யும் போது உரிய முறையில் அங்கவீன நிபந்தனைகளின் கீழ் விண்ணப்பிப்பதாக குறிப்பிடல் வேண்டும் என்பதுடன், அங்கவீனமல்லாத நபரொருவர் பொய்யாக அங்கவீனமென குறிப்பிடக் கூடாது.

6.0 **சேவை நிபந்தனைகள் :**

I. அரசாங்க சேவை நியமங்களை நிருவகிக்கும் பொது நியமனங்களின் பேரிலும் 1994.07.26 ஆந் திகதிய 829/ 7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சேசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்கள் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்ட நியமங்கள் மற்றும் நிபந்தனைகளின் பேரிலும், பிரமாணக் குறிப்பில் செய்ய பெற்ற அல்லது இனிமேல் செய்யப்படவுள்ள எவையேனும் திருத்தங்களுக்கு அமைய தாபன விதிக்கோவை மற்றும் நிதி விதிமுறைகளின் ஏற்பாடுகளிலும் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் அமைவாக தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தி மொழிப்பெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I இற்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

II. திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மொழிப்பெயர்ப்பாளர் சேவை யின் தரம் I இற்கு நியமனம் செய்யப்படும் உத்தியோகத்தர் நியமனம் பெற்றதிலிருந்து மூன்று (03) ஆண்டுகால நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுவர். நான்காம் சம்பள கட்டத்திற்கு முன்னர் மொழிப்பாளர் சேவையின் I ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

III. முதலாவது நியமனம் பெற்ற சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது 03 வருடகாலம் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்

ஏதேனும் சிறப்புக் காரணங்களின் அடிப்படையில் அக்கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் யாதேனும் ஒரு உத்தியோகத்தரை இடம்மாற்றத் தேவைப்படின், நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் காணப்படுகின்றது.

IV. நீங்கள் நியமனம் பெறுவதற்கு தகைமைகளை பூர்த்தி செய்த மொழி ஊடகத்திற்கு அமைவாக 2020.10.16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடு களின் பிரகாரம் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

7.0 **தகைமைகள்** : இலங்கை மொழிபெயர்ப்பாளர் சேவையின் I ஆம் வகுப்பிற்கான பதவியில் ஆட் சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகள் ஏற் புடையனவாகும்.

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையுள்ள வராக இருத்தல் வேண்டும்.

(இ) எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக் குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் உடல் மற்றும் உள ரீதியாக ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) **கல்வித் தகைமைகள் :**

(1) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா.த.) பரீட்சையில் அல்லது அதற்கு சமனான பரீட்சையில் உரிய மொழி பெயர்ப்பு மொழி ஊடகங்கள் 02 ற்காக திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது அதை விட உயர் தகைமையொன்றினை பெற்றிருத்தல்

மற்றும்

(2) i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளி நாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் பட்டமொன்று

அல்லது

ii. இலங்கை பாராளுமன்றத்தின் சட்ட மொன்றினால் நிறுவப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றினால் வழங்கப்படும் பட்ட மொன்று

அல்லது

iii. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பந்தி 25A இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

(உ) **வயது**: விண்ணப்பப்படிவத்தினை ஏற்கும் இறுதித்தினத்திற்கு விண்ணப்பதாரர் 21 வருடங்களுக்கு குறையாத மற்றும் 40 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.(அதற்கமைய 2004.12.08 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1985.12.08 ஆந் திகதிக்கு அல்லது அதன் பின்னர் பிறந்த திகதி காணப்படுபவர்களுக்கு மாத்திரம் இதற்காக விண்ணப்பிப்பதற்கு தகைமை காணப்படு கின்றது)

**குறிப்பு –** 1. அரசாங்க சேவையில் மற்றும் மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு மேற்படி வய தெல்லை ஏற்புடையதாகாது.

2. மேற்படி பட்டங்கள் அல்லது சான்றி தழ்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியிலிருந்து செல்லுபடியாகுதல் வேண்டும்.

3. சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிப் பாடங்களில் 2 ஐ பல்கலைக்கழக பட்டம் பெறும் போது சித்தியடைந்திருக்குமிடத்து அத்தகைய தகைமையுடைய ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் ஏற்புடைய சம்பள அளவு திட்டத்தில் தொடக்க சம்பளத்தை பார்க்க இரண்டு சம்பள படிநிலையில் கூட்டி வைக்கப்படுவார்.

8.0 **பரீட்சை நிபந்தனைகள்** :

(i) நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் பூர்த்தி செய்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட தகவல்களின் உண்மைத்தன்மையினை உறுதிப்படுத்தியதன் பின்னர் சமர்ப்பித்தல் (submit) வேண்டும். நிகழ்நிலையினூடாக விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்காக தயாரித்துள்ள பொது ஆலோசனை பத்திரத்தினை (Common Instructions) தரவிறக்கம் செய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்யும் போது அவ் ஆலோசனைகளை கடுமையாக பின்பற்றுதல் வேண்டும். பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிரா கரிக்கப்படும். விண்ணப்பதாரரினால் நிகழ்

நிலையினூடாக சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதியின் செல்லுபடியான விண்ணப்பப்படிவமென இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் ஏற்கப்பட்டதாக/ ஏற்கப்படவில்லையென கட்டமைப்பிற்குள் உள் நுழைய பயன்படுத்தும் கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவலொன்றின் (SMS) ஊடாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலமாகவோ அறிவிக்கப்படும்.

(ii) இப்பரீட்சையின் பொருட்டு பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது, நிகழ்நிலை அமைப்பின் மூலம் வழங்கப்படும் கீழ்க் குறிப்பிடப்படும் கட்டணம் செலுத்தப்படும் வழிமுறையின் கீழ் மட்டும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கி அட்டையின் மூலமும் (Any Bank Credit Card)
ii. இணையதளக் கொடுப்பனவு வசதிகள் உள்ள எந்தவொரு வங்கி பற்று அட்டையின் மூலம் (Any Bank Debit Card with the facility of internet transaction)
iii. இலங்கை வங்கி ஒன்லைன் வங்கி முறையின் மூலம் (Online Banking method of Bank of Ceylon)
iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்படி முறைகளின் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை தொடர்பான அறிவுரைகள் இணைய தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுரைகளின்கீழ்வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதாகக் குறுந்தகவலொன்று (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு விதித் துரைக்கப்பட்டுள்ள பணத்தை முழுமையாக செலுத்துதல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது அதிகமாகச் செலுத்தியுள்ள விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப் பிடப்பட்டுள்ள கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும் போது, ஏற்படும் தவறுகள் தொடர்பாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக் கூறமாட்டாது.

(இ) பரீட்சையின் பொருட்டு செலுத்தப்படும் பணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படுவதற்கு அல்லது வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றுவதற்கு இயலாது.

(iii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு பிழையின்றி நிகழ்நிலையின் மூலம் அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நிகழ் நிலையின் ஊடாக மட்டும் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பப்படும். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன், அது பற்றி குறிப்பிடப்படும் அறிவித்தலொன்று விண்ணப்பதாரர்களுக்கு குறுந்தகவலொன்றின் மூலம் / இணையதளத்தில் வெளியிடப்படும். பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்காதவிடத்து இணையதள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின், நிறுவனம் சார் பரீட்சை ஒழுங்கமைப்பு கிளை யிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொடரிலக்கம் மற்றும் முகவரி என்பனவற்றை சரியாக குறிப்பிட்ட கோரிக்கை கடிதத்தினை இணைய அறிவித்தலில் குறிப்பிடப்படும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரித்தல் மிகவும் பயனுள்ளதாகவிருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு தங்களிடம் வைத்துக் கொண்டுள்ள விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியையும் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதன் பின்னர் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியையும் ஆயத்தமாக வைத்திருப்பதும் பயனுள்ளதாக அமையும்.

(iv) அனுமதிப்பத்திரத்தினை பரீட்சித்து பார்த்து திருத்தங்கள் இருப்பின் இலங்கை பரீட்சை திணைக்களத்தினை அழைத்து விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் உரிய திருத்தங்களை செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் அல்லது நேர்முகப் பரீட்சையின் போது திருத்தம் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(v) பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்ப தாரரின் கையெழுத்தினை உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். ஏதேனும் அரசாங்க நிறுவனத்தினூடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் தமது கையெழுத்தினை தாபனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத் தரினால், அவ்வாறில்லாத விண்ணப்பதாரர் தமது கையெழுத்தினை அரசாங்க பாடசாலையொன்றின் பிரதானியொருவரினால், பிரிவின் கிராம உத்தியோகத்தரினால், சமாதான நீதிவானால், சத்தியப்பிரமாண ஆணையாளரினால், சட்டத் தரணியால், பிரசித்த நொத்தாரிசினால் அல்லது பௌத்தமத விகாரையின் விகாராதிபதியினால் அல்லது தலைமை மத குருவினால் அல்லது வேறு மத ஸ்தலத்திற்கு பொறுப்பாகவுள்ள அல்லது மத குருவாக குறிப்பிடத்தக்க நிலைமையையுடைய ஒருவரினால் சான்றுரைப்படுத்தப்படல் வேண்டும்.

**9.0 பரீட்சைக்கு தோற்றுதல் :**

(அ) பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரரொருவர் அவரின் அனுமதி அட்டையினை பரீட்சை மண்டப் பொறுப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்ப தாரருக்கு பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரர் தமக்குரிய பரீட்சை மண்ட பத்தில் தோன்றுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் உரிய அனுமதிப் பத்திரத்தில் தமது கையெழுத்தினை உறுதிப்படுத்தி முதலாவதாக பரீட்சைக்கு தோற்றும் நாளில், பரீட்சை மண்டப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்பற்ற வேண்டிய விதிகளின் கோவையை இவ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

**குறிப்பு:** விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரமொன்றை வெளியிடல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தேவையான தகைமையை பூர்த்தி செய்வதாக கருதக்கூடாது.

**10.0 பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்:**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களின் பொருட்டும் பரீட்சை மண்டபத்தின் பொறுப்பதிகாரி திருப்தியடையும் வகையில் தமது சுய ஆளடையாளத்தை உறுதிப் படுத்துதல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. தேசிய அடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச் சீட்டு;
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் மற்றும் மின் தொடர்பாடல் கருவிகளை அணிந்திருக்க வில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டும் மூடியிருக்காதவாறு பரீட்சைகள் மண்டபத்திற்குள் உட்செல்லுதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைகள் மண்டபத்திற்கு உட்செல்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சைகள் மண்டபத்திற்கு உட்சென்ற நேரம் தொடக்கம் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாதிருத்தல் வேண்டும்.

**11.0 போலியான தகவல்களுக்கான தண்டனை:**

பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என தெரிய வருமாயின், அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரர் சமர்ப்பித்துள்ள தகவல்கள் போலியானது என அறிந்தே சமர்ப்பித்துள்ளதாக தெரியவருமிடத்து, அல்லது ஏதேனும் விடயத்தை வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**12.0 பரீட்சை முறை :**

இப்பரீட்சையானது எழுத்து மூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகிய இரு பகுதிகளாக நடாத்தப்படும்.

12.1 **எழுத்து மூலப்பரீட்சை :** இதற்கான வினாத்தாள் பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும்.

(அ) மொழிபெயர்ப்பு 100 புள்ளிகள்- 3 மணித்தியால வினாத்தாள்
(ஆ) ஆங்கிலமொழி -100 புள்ளிகள் - 1 மணி 30 நிமிட வினாத்தாள்
(இ) சிங்களமொழி - 100 புள்ளிகள்- 1 மணி 30 நிமிட வினாத்தாள்
(ஈ) தமிழ்மொழி - 100 புள்ளிகள்- 1 மணி 30 நிமிட வினாத்தாள்
(உ) கிரகித்தல் - 100 புள்ளிகள் - 1 மணி 30 நிமிட வினாத்தாள்

12.1.1 **பாடத்திட்டம் :**

(1) **மொழிபெயர்ப்பு** - அலுவலக ஆவணம் அல்லது அறிக்கை அல்லது செய்திப் பத்திரிகை விடயம் அல்லது அறிக்கை

ஒன்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகள் உட்பட உத்தியோகபூர்வமான விஞ்ஞான, சட்டத்துறை சார்ந்த தொழில்நுட்ப விடயங்கள் சம்பந்தமான ஆவணங்கள் மற்றும் இலக்கிய நூல்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகளை கீழ்வரும் முறைகள் அதாவது (i) அல்லது (ii) அல்லது (iii) ஆகிய ஏதேனும் ஒன்றிற்கு இணங்க மொழிபெயர்த்தல்.

(i) சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கும் தமிழ்மொழியிலிருந்து சிங்களத்துக்கும்;

(ii) சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கும் ஆங்கில மொழியிலிருந்து சிங்களத்துக்கும்;

(iii) தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கும் ஆங்கில மொழியிலிருந்து தமிழுக்கும் (மொழிபெயர்க்கும் போது உயர் திறமை எதிர்பார்க்கப்படுகின்றன.)

ஆங்கில/ சிங்கள/ தமிழ் மொழி வினாத்தாள்கள் - இதன் பொருட்டு மும்மொழிகளிலும் வினாத்தாள்கள் தயார் செய்யப்படுவதுடன் அவற்றில் தனக்குரித்தான இரண்டு மொழி வினாத்தாள்களுக்கு பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டும்.

(2) **ஆங்கில மொழி** - ஒரு கட்டுரை, ஒரு பகுதியை சுருக்கியெழுதும் படியும், சொற்களின் கருத்து விளங்குமாறு அவற்றை வாக்கியங்களில் அமைத்தல், மரபுச் சொற்றொடர்களை விளக்குதல், கூட்டு வாக்கியங்களையும், இணைந்த வாக்கியங்களையும் பிரித்து வாசகங்கள் ஆக்குதல்.

(3) **சிங்கள மொழி** - ஒரு கட்டுரை எழுதும்படியும், ஒரு பகுதியை சுருக்கி எழுதும் படியும், கொடுக்கப்பட்ட ஒரு பகுதியை சுருக்கி அவரது சொந்த மொழி நடையில் எழுதும்படியும், சொற்களின் கருத்துத் தெளிவாகும் வகையில் அச்சொற்களை கொண்டு வாக்கியங்கள் அமைக்கும் படியும், வாக்கியங்களில் உள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்தும்படியும், மரபுச் சொற்றொடர்களின் கருத்தை விளக்கும்படியும் பரீட்சார்த்தி கேட்கப் படுவார்.

(4) **தமிழ்மொழி** - ஒரு கட்டுரை எழுதும் படியும், ஒரு பகுதியைச் சுருக்கி எழுதும்படியும், கொடுக்கப்பட்ட ஒரு பகுதியை சுருக்கி அவரது சொந்த மொழி நடையில் எழுதும்படியும், சொற்களின் கருத்து தெளிவாகும் வகையில் அச் சொற்களைக் கொண்டு வாக்கியங்களை அமைக்கும்படியும், இலக்கணப் பிழைகளைத் திருத்தும்படியும் மரபுச் சொற்றொடர்களின் கருத்தை விளக்கும்படியும் பரீட்சார்த்தி கேட்கப்படுவார்.

(5) **கிரகித்தல்** - சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தயார் செய்யப்படும் கிரகித்தல் வினாப் பத்திரத்தின் பொருட்டு தாம் விரும்பும் ஒரு மொழியில் விடையளிக்க பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்படும்.

இதன் பொருட்டு பகுதிகளின் தொகுப் பொன்று பரீட்சார்த்திக்கு கொடுக் கப்படும். சில பகுதிகள் சம்பந்தப்பட்ட வரையில் பரீட்சார்த்திக்கு மாற்றுக் கூற்றுக்களின் தொகுதியொன்று கொடுக் கப்படும் இவற்றுள் ஒன்று பகுதியின் உள்ளடக்கத்துடன் நன்கு பொருந்துவதாக இருக்கும். பொருத்தமான கூற்றைத் தேர்ந்தெடுக்கும்படி பரீட்சார்த்தி கேட்கப் படுவார். ஏனைய பகுதிகளைப் பற்றிய வகையில் பரீட்சார்த்தி பகுதியின் அர்த்தத்தை எவ்வளவு தூரம் விளங்கிக் கொள்கின்றார் என்பதை பரீட்சிப்பதற்கு ஏற்ப வினாக்கள் தயாரிக்கப்படும்.

**கவனிக்க** - தெளிவற்ற கையெழுத் துக்களுக்கும் சொற்பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். வாசிக்க முடியாத எழுத்துக்களை எழுதும் பரீட்சார்த்தியொருவரின் தகைமை இரத்துச் செய்யப்படலாம்.

12.1.2 ஒவ்வொரு வினாத்தாளுக்கும் குறைந்த பட்சம் 40% புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளுக்கிடையில் குறித்த புள்ளிகளின் திறமை ஒழுங்கின் பேரில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கேற்ப நியமனங்கள் வழங்கப்படும்.

12.2 **நேர்முகப் பரீட்சை :**

தகைமைகளையும் சான்றிதழ்களையும் தேகா ரோக்கிய நிலையையும் பரிசோதிப்பதற்காக மட்டும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். இதன் பொருட்டு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

13.0 **பரீட்சைப் பெறுபேறு :**

வர்த்தமானப் பத்திரிக்கையின் பந்தி 12.1.2. இன் படி தகைமைகளை பூர்த்தி செய்யும் பரீட்சார்த்திகளின் பெயர்ப்பட்டியல் திறமை ஒழுங்கு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட வகையில் பெறுபேறு அனுப்பிவைத்தல் அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தில் வெளியிட இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

14.0 பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடல் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் இணங்கியொழுகுதல் வேண்டும். சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணை யாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் தண்டனைக்கு கீழ்ப்படிவதற்கு அவருக்கு நேரிடும்.

15.0 இப் பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுவதுடன் குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படுமாயின் சிங்கள மொழியின் சொற்தொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மேலும், இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ் வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய நடப்பதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

என்.யூ.நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2025, ஒற்றோபர் 31.

11-131

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

## இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு I தரம் III க்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

இலங்கை தகவல், தொடர்பாடல் தொழிநுட்ப சேவை யின் வகுப்பு I தரம் III இன் பதவிகளில் நிலவும் 34 வெற் றிடங்களுக்குத் தகுதியானவர்களை தேர்ந்தெடுப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமங்களுக்கு அமைவாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை இணையவழி (online) மூலம் மாத்திரமே அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் "Our Services" கீழ் உள்ள "Online Applications – Recruitment Exams/ E.B. Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்களை இணையவழி (online) முறை மாத்திரமே அனுப்ப வேண்டும். நிகழ்நிலை விண்ணப்படிவங்கள் கையேற்பு 2025, நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி மு.ப.9.00 இற்கு திறக்கப்படுவதுடன் 2025, திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி பி.ப. 9.00 மணிக்கு முடிவடையும்.

தற்போது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தமது தனிப்பட்ட ஆவணக்கோப்புக்கு உட் செலுத்துவதற்காக தாபனத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டியதுடன், நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கும் சந்தர்ப்பத்தில் தாபனத் தலைவரினால் சான்றுரைப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் சேவையை உறுதிப் படுத்தும் கடிதமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதை இறுதி நாள் வரையும் தாமதிப்பதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான நிலைமை யையும் விண்ணப்பதாரர் தானே பொறுப்பேற்க வேண்டும்.

விண்ணப்பங்கள் முடிவுத் திகதி 2025, திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி ஆகும். இப்பரீட்சை 2026, பெப்புருவரி மாதம் கொழும்பில் நடைபெறும்.

01. **சேவைக்கான ஆட்சேர்ப்பு முறை :**

(i) எழுத்துமூல பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சை என்பனவற்றின் பெறுபேறுகளின் அடிப் படையில் ஆட்சேர்க்கப்படும்.

போட்டிப் பரீட்சையினூடாக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யும் வகையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் வரிசைக் கிரமம் உறுதியாக கடைப்பிடிக்கப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும்.

நியமனத் திகதி மற்றும் நியமனங்களின் எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் மூலம் தீர்மானிக்கப்படும்.

(ii) நிரப்புவதற்கு எதிர்பார்க்கும் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 3% அங்கவீன விண்ணப்ப தாரிகளுக்காக ஒதுக்கப்படும். இதற்கு தகைமை பெறுவதற்கு பரீட்சையின் ஒவ்வொரு வினாத் தாளுக்கும் 40%மான புள்ளிகளை பெறுதல் வேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் புள்ளி மட்டத்திற்கு இணங்க ஆட்களின் மொத்த புள்ளிகளின் 50%மாக இருத்தல் வேண்டும். அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 27/88 இன் பிரகாரம் அங்கவீன அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்குரியதாகும்.

02. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

I. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித் துடையதுமாகும். உங்களுக்கு உரித்துடையதாகும் ஓய்வூதியத் திட்டம் குறித்து அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உட்படவேண்டும். மேலும், விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் வகையில் தங்களால் பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

II. இப் பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் மூன்று (03) ஆண்டு நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தப்படுவதுடன், மேற்படி மூன்று (03) ஆண்டு காலத்தினுள் முதலாவது வினைத் திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி யெய்துதல் வேண்டும்.

III. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 இற்கு அமைய மற்றும் அதற்கு இணையான சுற்றறிக்கைகளின் பிரகாரம் பதவிக்குரிய அரசகரும மொழித் தேர்ச்சியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

IV. இந்நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1894/26 மற்றும் 2014.12.26 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் சேவை, சேவைப் பிரமாணத்தின் கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, அச்சேவைப் பிரமாணக் குறிப்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள, இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களும், தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் இந் நியமனம் கட்டுப் பட்டுள்ளது.

V. தாங்கள் நியமனம் பெறுவதற்கு தகுதியுடைய மொழி ஊடகமாக அமைவது, விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி ஊடகமாகும்.

03. **சம்பள அளவுத் திட்டம்:**

2025.03.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் பிரகாரம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை அட்டவணை II இற்கு ஏற்ப இப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா. 82,150 - 10x2,400 - 8x2,940 - 17x3,900 - ரூபா 195,970.00 (SL-1 -2025) ஆகும். அச்சம்பளம் தங்களுக்கு உரித்தாவது 2027.01.01 ஆந் தினத்திலிருந்தாகும். அதுவரையில் இச்சுற்றறிக்கையின் அட்டவணை III இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

04. **கல்வித் தகைமைகள் :**

(1) கணினிவியல் / தகவல் தொழில்நுட்பம் / கணினிப் பொறியியல் அல்லது கணினி தொழில்நுட்பம் ஆகியனவற்றில் ஏதாவதொரு பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(2) (i) பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். (அதில் பட்ட கற்கைநெறி முழுவதிலும் ஆகக் குறைந்தது 1/3 பகுதி கணினிவியல் / தகவல் தொழில்நுட்பம் தொடர்பானதாக இருத்தல் வேண்டும்.)

மற்றும்

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்தோ அல்லது பட்டமளிப்பு நிறு வனம் ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்தோ கணினிவியல் / தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு –** இங்கு மேலே 4.2 (1) மற்றும் (2)(i) இன்கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் “பட்டம்” எனும் தகைமை,

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் பட்டமொன்று

அல்லது

2. இலங்கை பாராளுமன்றத்தின் சட்டமொன்றி னால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் பட்டமொன்று

அல்லது

3. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழக சட்டத்தின் பந்தி 25A இன் கீழ் அங்கீகரிக் கப்பட்ட பட்டமொன்று

05. **வயதெல்லை** : ஆகக் குறைந்த வயதெல்லை 21 ஆகும். ஆகக் கூடிய வயதெல்லை 35 ஆகும்.

(அதற்கமைய வயதெல்லை தொடர்பான தகைமை பெறுவது, விண்ணப்பதாரியின் பிறந்த திகதி 1990.12.08 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் மற்றும் 2004.12.08 ஆந் திகதி அல்லது அதற்குப் முன்னராயின் மாத்திரமாகும்.

06. **தேகாரோக்கியம்** :

ஒவ்வொரு விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப் பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரியதான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உரிய போதிய உடல், உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

07. **பிற தகைமைகள்** :

i. விண்ணப்பதாரி இலங்கை பிரசையொருவராக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பதாரி சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
iii. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில், பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனைத்து தகைமைகளையும் நிபந்தனைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

08. **ஆட்சேர்ப்பு முறை :**

8.1. எழுத்துமூலப் பரீட்சை

8.1.1. இப் பரீட்சையானது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| *விடயம்* | *காலம்* | *அதிகூடிய புள்ளிகள்* | *சித்திபெறும் புள்ளிகள்* |
|---|---|---|---|
| பொது விவேகம் | 1 மணி. | 100 | 40 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான கிரகித்தல் | 2 மணி. | 100 | 40 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் முகாமைத்துவம் தொடர்பான உளச்சார்பு | 2 மணி. | 100 | 40 |

**குறிப்பு** : கடமை நோக்கங்களுக்காக பரீட்சார்த் திகளின் தகைமையையும் ஆற்றலையும் பரீட்சிக்கக் கூடியதாக இவ்வினாப்பத்திரம் அமையும். இப் பரீட்சை ஒரு போட்டிப் பரீட் சையாக இருந்த போதிலும் நியமனத்திற்கான தகைமையைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40 வீதத்தையாவது பெற வேண்டியதுடன், பரீட்சைக்கான மொத்தப் புள்ளி களில் 50 வீதத்தையாவது பெற்றுக் கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு விடைத்தாளிலும் தெளிவற்ற கையெழுத்து, எழுத்து பிழைகள் ஆகியனவற்றுக்கு புள்ளிகள் குறைக்கப்படும். பெற்றுக் கொண்ட புள்ளிகளின் முன்னுரிமை கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு, போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யக் கூடியவாறு நியமனங்கள் வழங்கப்படும்.

8.1.2. **பாடவிதானம் :**

| *வினாத்தாளின் பெயர்* | *பாடவிதானம்* |
|---|---|
| பொது விவேகம் | புள்ளிவிபரவியல் ரீதியாக, மொழி ரீதியாக, வடிவக்கட்டமைப்புக்கள் உறவுகளுக்கிடையிலான தொடர்பு கள் போன்ற பிரச்சினைகள் மட்டிலான பகுப்பாய்வுத் திறமை தர்க்கரீதியான அறிவு, பொருள் கோடல் திறமை, வேறு நிலை மைகளுக்கு உரித்தாக்கிக் கொள் வதற்கான ஆற்றல் மற்றும் முடிவு களை எட்டுதல் தொடர்பாக பரீட் சார்த்தியிடம் காணப்படும் அறிவு மட்டத்தினை அளவிடுதல் இங்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. (இவ் வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க விடைகளுக்கான வினாக்கள் என்பவற்றைக் கொண்ட 50 வினாக்களை உள்ளடக்கியதாகும் சகல வினாக்களுக்கும் விடையளி த்தல் வேண்டும்.) |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான கிரகித்தல் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைத்துவத்தின் கருத்துருவாக்குதல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சிக்கல் களைத் தீர்க்கும் ஆற்றல், தகவல் மற்றும் தொழில்நுட்ப கருத்திட்ட முகாமைத்துவ ஆற்றல் மற்றும் தரப்படுகின்ற தலைப்புக்களுக்கான தளப்பகுப்பாய்வு செய்தல், திட்ட மிடல் மற்றும் மென்பொருள் தளம் மற்றும் அவற்றின் விருத்தி தொடர் பாக பரீட்சார்த்தியின் ஆற்றல் இங்கு பரீட்சிக்கப்படுகின்றது. (இவ் வினாத்தாள் சுருக்க விடை களுக்கான வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் என்ப வற்றைக் கொண்ட வினாக்களை உள்ளடக்கியதாகும். சகல வினாக்க ளுக்கும் விடையளித்தல் வேண்டும்.) |

| *வினாத்தாளின் பெயர்* | *பாடவிதானம்* |
|---|---|
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைத்துவ உளச்சார்பு | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான புதிய போக்குக்களுடன், மென்பொருட்களை விருத்தி செய்தல், நிறுவுதல், அவற்றைப் பேணுதல் தொடர்பான அறிவைப்பயன்படுத்துவதன் மூலம் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைத்துவம் தொடர்பில் விண்ணப்பதாரியின் உளச்சார்பினை அளவீடு செய்யும் முகமாக இப் பரீட்சை வினாத் தாள் தயாரிக்கப்பட்டுள்ளது (இவ் வினாத்தாள் சுருக்க விடைகளுக் கான வினாக்கள் மற்றும் கட்டமைக் கப்பட்ட வினாக்கள் என்பவற்றைக் கொண்ட வினாக்களை உள்ளடக்கிய தாகும் சகல வினாக்களுக்கும் விடை யளித்தல் வேண்டும்.) |

8.2. **நேர்முகப் பரீட்சை :**

8.2.1. **சாதாரண நேர்முகப் பரீட்சை :**

சேவைப் பிரமாணக் குறிப்புக்கு ஏற்புடைய தாக வெளியிடப்படும் அறிவித்தலில் குறிப் பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப் பட்டுள்ளனவா என பரீட்சிப்பதற்காக இந் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுகின்றது. புள்ளி கள் வழங்கப்பட மாட்டாது.

09. **பரீட்சை நிபந்தனைகள் :**

(I) பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்புகின்ற ஏதாவதொரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். அத்துடன் பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் சகல வினாத்தாள்களிலும் உள்ள வினாக்களுக்கு ஒரு மொழியிலேயே பதிலளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகளினால் தத்தமது விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தினை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது. எல்லா பரீட்சார்த்திகளும் மூன்று வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

(II) இப் பரீட்சைக்காக விசேட தேவையுடைய விண்ணப்பதாரர்கள் முன்வரின் அது தொடர்பாக விண்ணப்பபடிவத்தில் கட்டாயமாக குறிப்பிடல் வேண்டும்.

(III) நிகழ்நிலை (online) பரீட்சை விண்ணப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ் நிலையினூடாக சமர்ப்பிக்கப்படும் மென் பிரதி செல்லுபடியான பிரதியொன்றாக திணைக்களத் தினால் ஏற்கப்பட்டதாக/ஏற்கப்படவில்லையென கட்டமைப்பிற்குள் உள்நுழைய பயன் படுத்தும் கையடக்க தொலைபேசி இலக்கத் திற்கு குறுந்தகவலொன்றின் (SMS) ஊடா கவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) மூல மாகவோ அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப் பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கு முன்பு பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்காக தயாரித்துள்ள பொது ஆலோசனை பத்திரத்தினை (Common Instructions) தரவிறக்கம் செய்து, வாசித்து, விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது அவ்வாலோசனைகளை கடுமையாக பின்பற்றுதல் வேண்டும். விண்ணப்பபடிவத்தின் அச்சுப் பிரதியொன்றை பெற்ற பின்பு, அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாக கருதப்படமாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக் கப்படும்.

(IV) பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200.00 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது இணையவழித் தொகுதியின் ஊடாக வழங்கப்படும் பின்வரும் கட்டணங்களைச் செலுத்தும் முறைமையின் கீழ் மாத்திரம் கொடுப்பனவு இடம்பெறுதல் வேண்டும்.

i. ஏதேனும் வங்கி கடன் அட்டை மூலம் ( Any Bank Credit Cards)
ii. ஏதேனும் வங்கி பற்று அட்டை மூலம் (Any Bank Debit Cards)
iii. இலங்கை வங்கி இணையவழி வங்கி முறை (Bank of Ceylon Online Banking Method)
iv. ஏதேனும் இலங்கை வங்கிக் கிளை மூலம் (Bank of Ceylon Teller Slip Payment)

**குறிப்பு :** மேற்படி முறைகள் மூலம் கொடுப் பனவினை மேற்கொள்ள முடியும் என்பதுடன் அவை தொடர்பான அறிவுரைகள் இணையத்தளத்தின் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனை என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

V. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டதாக குறுந் தகவல் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக்கான முழுத் தொகையையும் செலுத்த வேண்டும் என்பதோடு, பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்டிருப்பின் விண்ணப் பப்படிவம் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கட்டண முறைமையின் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் கோளாறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்புக் கூறமாட்டாது.

VI. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை எந்தவொரு காரணத்திற்காகவும் மீளளிக்கப்பட அல்லது மற்றொரு பரீட்சைக்காக மாற்றப்படவும் மாட்டாது.

VII. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லை, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு முறையாக இணையவழி மூலம் அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணை யாளர் நாயகத்தினால் இணையவழி ஊடாக மாத்திரம் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப் படும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது பற்றிய அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைத் திணைக் களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் வெளியிடப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு, அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின், நிறுவனம்சார் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரியினால் தான் தோற்றவுள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், மற்றும் முகவரி என்பனவற்றை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்விபரங்களை உள்ளடக்கிய கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரித்தல் மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தம் வசம் வைத்திருக்கும் விண்ணபத்தின் பிரதியினையும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும் தயாராக வைத்திருப்பது பிரயோசனமாகும். அனுமதி அட்டையினைப் பரிசோதித்துப் பார்த்து திருத்தங்கள் ஏதும் இருப்பின் நேர காலத்துடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தை அழைத்து விண்ணப்பப்படிவத்துக்கமைய குறித்த திருத்தங்களைச் செய்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தம் தொடர்பாக முன் வைக்கப்படும் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

VIII. அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையெழுத்தினை உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். ஏதேனும் நிறுவனத்தினூடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் தமது கையெழுத்தினை தாபனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தி யோகத்தரினால், அவ்வாறில்லையெனில் விண் ணப்பதாரர் தமது கையெழுத்தினை அரசாங்க பாட சாலையொன்றின் பிரதானியொருவரினால்/ஓய்வு பெற்ற உத்தியோகத்தரினால், பிரிவின் கிராம உத்தி யோகத்தரினால், சமாதான நீதவானால், சத்தியப் பிரமாண ஆணையாளரினால், சட்டத்தரணியால், பிரசித்த நொத்தாரிசினால், முப்படையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் அல்லது நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது பௌத்தமத விகாரையின் விகாராதிபதியினால் அல்லது தலைமை மத குருவினால் அல்லது வேறு மத ஸ்தலத்திற்கு பொறுப்பாகவுள்ள அல்லது மத குருவாக குறிப்பிடத்தக்க நிலைமையையுடைய ஒருவரினால் சான்றுரைப்படுத்தப்படல் வேண்டும்.

குறிப்பு: அனுமதிப்பத்திரமின்றி பரீட்சை மண்ட பத்திற்கு உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரமொன்றை மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சாத்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரமொன்றை வெளியிடுவது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது பதவிக்கான தகைமையை பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதப்படக்கூடாது.

IX. அராசங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத் தின்படி, பரீட்சையை காலந் தாழ்த்துவதற்கு அல்லது இரத்துச் செய்யவதற்கான அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு உண்டு.

X. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கு பரீட்சார்த்திகள் கடமைப் பட்டுள்ளனர். அவ் ஒழுங்கு விதிகளை மீறுமிடத்து, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக் கப்படும் தண்டனைக்கு உட்படவேண்டி ஏற்படும்.

XI. பரீட்சார்த்திகள் பரீட்சை நிலைய மேற்பார்வை யாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடை யாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. தேசிய ஆளடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடை யாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் எதனையும் அணிந்திருக்கவில்லை என உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இரு காதுகளையும் மறைக்காது

பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசித்தது முதல் பரீட்சை நிறைவு பெற்று வெளியேறும் வரை விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

XII. **பெறுபேறுகளை வெளியிடல் :** எழுத்துமூல பரீட்சையில் ஒவ்வொரு பாடத்துக்கும் 40 வீதத்திற்கு குறையாமலும் மற்றும் முழுமொத்த பரீட்சையினதும் புள்ளிகளின் எண்ணிக்கையின் 50% அல்லது அதற்கு அதிகமாகவும் புள்ளிகள் பெற்ற பரீட்சார்த்திகளை தேர்ந்தெடுத்து அவர்களின் அப்புள்ளிகளின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப திறமை அடிப்படையில் நிரப்ப எதிர்பார்க்கப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கு சமனான பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட முன்னுரிமை பட்டியல் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அனுப்பி வைத்தல் அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடுவதும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ் அறிவித்தலில் மொழி ரீதியான பதங்களுக்கிடையில் ஏதேனும் பொருத்தமற்ற தன்மை அல்லது இணக்கமின்மைகள் காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி அறிவித்தலின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

2025, நவெம்பர் 03.

11-132/1

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

## இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I தரம் III க்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025

இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I தரம் III ஐச் சேர்ந்த பதவிகளில் 14 வெற்றிடங்கள் நிலவுகின்றமையினால், அதற்குத் தகுதியானவர்களை தேர்ந்தெடுப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமங்களுக்கு அமைவாக விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. அதற்கான விண்ணப்பங்கள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப் பங்களை இணையவழி (online) முறை மாத்திரமே அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் “Our Services”கீழ் உள்ள “Online Applications – Recruitment Exams/ E.B. Exams” ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்களை இணையவழி (online) முறை மாத்திரமே அனுப்ப வேண்டும். நிகழ்நிலையினூடாக விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்வது 2025, நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகி 2025, திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி பி.ப 9.00 மணிக்கு முடிவடையும்.

உத்தியோகத்தர்கள் தங்களது தனிப்பட்ட கோப்பிற்காக விண்ணப்பத்தின் பிரதியை நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும். நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப் படும் சந்தர்ப்பத்தில், நிறுவனத் தலைவர் உறுதிப்படுத்திய விண்ணப்பத்தின் பிரதியையும், சேவையை உறுதிப்படுத்தும் கடிதத்தையும் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதை இறுதி நாள் வரையும் தாமதிப்பதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான நிலைமையையும் விண்ணப்பதாரர் தானே பொறுப்பேற்க வேண்டும்.

விண்ணப்பங்கள் முடிவுத் திகதி 2025, திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி ஆகும். இப் பரீட்சை 2026, பெப்புருவரி மாதம் கொழும்பில் நடைபெறும்.

1. **சேவைக்கான ஆட்சேர்ப்பு முறை :**

(i) எழுத்துமூல பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சை என்பனவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும்.

போட்டிப் பரீட்சையினூடாக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி

செய்யும் வகையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் வரிசைக் கிரமம் உறுதியாக கடைப்பிடிக்கப்பட்டு நியமனங்கள் வழங்கப் படும். நியமனத் திகதி மற்றும் நியமனங்களின் எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக் குழுவின் கட்டளையின் மூலம் தீர்மானிக்கப் படும்.

2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்** :

I. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத் திட்டத் திற்குட்பட்டதுமாகும். உங்களுக்குறிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் பின்னர் எடுக்கும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும். மேலும், விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசினால் காலத் துக்குக்காலம் தீர்மானிக்கும் பங்களிப்புத் தொகையை நீங்கள் செலுத்துதல் வேண்டும்.

II. இப் பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் ஒரு (01) ஆண்டு தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவதுடன், ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மூன்று (03) ஆண்டு காலத்தினுள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

III. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 இற்கு அமைய மற்றும் அதற்கு இணையான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப பதவிக்குரிய அரசகரும மொழித் தேர்ச்சியை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

IV. இந்நியமனம் அரசாங்க சேவை ஆணைக் குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1894/26 மற்றும் 2014.12.26 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் சேவை சேவைப் பிரமாணத்தின் கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், இதுவரையில் செய்யப்பட்ட திருத்தங்களுக்கும், இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் இந் நியமனம் கட்டுப்பட்டுள்ளது.

V. தாங்கள் நியமனம் பெறுவதற்கு தகுதியுடைய மொழி ஊடகமாக அமைவது, விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி ஊடாக மாகும்.

3. **சம்பள அளவுத் திட்டம்:**

2025.03.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் பிரகாரம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை அட்டவணை II இற்கு ஏற்ப இப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா. 82,150 - 10x2,400 - 8x2,940 - 17x3,900 - 195,970/- (SL- 1 -2025) ஆகும். அச்சம்பளம் தங்களுக்கு உரித்தாவது 2027.01.01ஆந் தினத்திலிருந்தாகும். அதுவரையில் இச்சுற்றறிக்கையின் அட்டவணை IIIஇன் ஏற்பாடுகளின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

4. **கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :**

4.1 **அனுபவம் :**

(1) 2 ஆம் வகுப்பின் I ஆந் தரத்தின் உத்தியோகத் தராக இருத்தல் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக் காற்று தண்டனைக்கு உட்பட்டிராதிருத்தல்

அல்லது

(2) (அ) 2 ஆம் வகுப்பின் II ஆந் தரத்தில் 05 வருட முனைப்பானதும் திருப்திகரமானதும் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்து நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட உத்தி யோகத்தராக இருத்தல் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழு இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்று தண்டனைக்கு உட்பட்டிரா திருத்தல்.

மற்றும்

(ஆ) இலக்கம் 4.2 இல் காட்டப்பட்டுள்ள கல்வித் தகைமையை முழுமைப்படுத்தியிருத்தல்

மற்றும்

(இ) அத்தரத்திற்குரிய வினைத்திறன் காண் தடைதாண்டலில் சித்தியெய்தியிருத்தல்.

4.2 **கல்வித் தகைமைகள் :**

(1) கணினிவியல் / தகவல் தொழிநுட்பம் / கணினிப் பொறியியல் அல்லது கணினி தொழிநுட்பம் ஆகியனவற்றில் ஏதாவதொரு பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(2) (i) பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். (அதில் பட்ட கற்கைநெறி முழுவதிலும் ஆகக் குறைந்தது 1/3 பகுதி கணனிவியல் / தகவல் தொழிநுட்பம் தொடர்பானதாக இருத்தல் வேண்டும்.)

மற்றும்

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால், அங்கீகரிக்கப்பட்ட பல் கலைக்கழகம் ஒன்றிலிருந்தோ அல்லது பட்டமளிப்பு நிறுவனம் ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்தோ கணினியியல் / தகவல் தொழிநுட்பம் தொடர்பாக பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு –** இங்கு மேலே 4.2 (1) மற்றும் (2)(i) கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் “பட்டம்” எனும் தகைமை,

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரச பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் பட்டமொன்று ;

அல்லது

2. இலங்கைப் பாராளுமன்றத்தின் சட்டமொன்றி னால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் பட்டமொன்று ;

அல்லது

3. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழக சட்டத்தின் பந்தி 25A இன் கீழ் அங்கீகரிக் கப்பட்ட பட்டமொன்று.

கவனிக்கவும்: இக்கல்வித் தகைமைகள் 4.1 (1) இல் குறிப்பிடப்படும் அலுவலர்களுக்கு ஏற்புடையதாகாது.

5. **வயதெல்லை :** ஏற்புடையதன்று

6. **தேகாரோக்கியம்** :

ஒவ்வொரு விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரியதான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உரிய போதிய உடல், உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

7. **பிற தகைமைகள்:-**

i. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்

ii. விண்ணப்பதாரி சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்

iii. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில், பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனைத்து தகைமைகளையும் நிபந்தனைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. **ஆட்சேப்பு முறைமை :**

8.1 **எழுத்துப்பரீட்சை :**

8.1.1. இப் பரீட்சையானது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| *விடயம்* | *காலம்* | *அதிகூடி புள்ளிகள்* | *சித்திபெறும் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. பொது விவேகம் | 1 மணி. | 100 | 40 |
| 2. தகவல், தொடர்பாடல் தொழிநுட்ப முகாமைத்துவ உளச்சார்பு | 2 மணி. | 100 | 40 |

**குறிப்பு** : கடமை நோக்கங்களுக்காக பரீட்சார்த்தி களின் தகைமையையும் ஆற்றலையும் பரீட்சிக்கக் கூடியதாக இவ்வினாப்பத்திரம் அமையும். இப் பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருந்த போதிலும் நியமனத்திற்கான தகைமையைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப் பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% வீதத்தையாவது பெற வேண்டியதுடன், பரீட்சைக்கான மொத்தப் புள்ளிகளில் 50% வீதத்தையாவது பெற்றுக் கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு விடைத்தாளிலும் தெளிவற்ற கையெழுத்து, எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள் ஆகியனவற்றுக்கு புள்ளிகள் குறைக் கப்படும். பெற்றுக் கொண்ட புள்ளிகளின் முன்னுரிமை கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு, போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யக்கூடியவாறு நியமனங்கள் வழங்கப்படும்.

8.1.2. **பாடவிதானம் :**

| *வினாத்தாளின் பெயர்* | *பாடவிதானம்* |
|---|---|
| 1. பொது விவேகம் | புள்ளிவிபரவியல் ரீதியாக, மொழி ரீதியாக, வடிவக் கட்டமைப்புக்கள் உறவுகளுக்கிடையிலான தொடர்புகள் போன்ற பிரச்சினைகள் மட்டிலான பகுப்பாய்வுத் திறமை தர்க்க ரீதியான அறிவு, பொருள்கோடல் திறமை, வேறு நிலைமைகளுக்கு உரித்தாக்கிக் கொள்வதற்கான ஆற்றல் மற்றும் முடிவுகளை எட்டுதல் தொடர்பாக பரீட்சார்த்தியிடம் காணப்படும் அறிவு மட்டத்தினை அளவிடுதல் இங்கு எதிர்ப் பார்க்கப்படுகின்றது. (இவ் வினாத் தாள் பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க விடைகளுக்கான வினாக்கள் என்பவற்றைக் கொண்ட 50 வினாக் களை உள்ளடக்கியதாகும் சகல வினாக் களுக்கும் விடை யளித்தல் வேண்டும்.) |

| *வினாத்தாளின் பெயர்* | *பாடவிதானம்* |
|---|---|
| 2. தகவல், தொடர்பாடல் தொழிநுட்ப முகாமைத்துவ உளச் சார்பு | அரசாங்க சேவையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடையதாக ஏற்படக் கூடிய பிரச்சினைகள் ஒன்றோ அல்லது பலவற்றையோ தொடர்புபடுத்தி கட்டமைக்கப்பட்ட விடயம் / விடயங்களை பரீட்சார்த்திக்கு வழங்கி பரீட்சார்த்தியிடம் காணப்படும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு, படைப்பாற்றல் மிக்க சிந்தனா சக்தி மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கு உரித்தான அரசாங்க சேவையின் நடைமுறைகள் சார்ந்த அளவீடுகள் மற்றும் பரீட்சார்த்தியின் உளச்சார்பினை அளவீடு செய்யுமுகமாக இப் பரீட்சை வினாத்தாள் தயாரிக்கப் பட்டுள்ளது. (இவ் வினாத்தாள் சுருக்க விடைகளுக்கான வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் என்பவற்றைக் கொண்ட வினாக்களை உள்ளடக்கியதாகும் சகல வினாக் களுக்கும் விடையளித்தல் வேண்டும்.) |

8.2. **நேர்முகப் பரீட்சை :**

8.2.1. **சாதாரண நேர்முகப் பரீட்சை :**

சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு ஏற்புடையதாக வெளியிடப்படும் அறிவித்தலில் குறிப் பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப் பட்டுள்ளனவா என பரீட்சிப்பதற்காக இந் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுகின்றது. புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது

9. **பரீட்சை நிபந்தனைகள் :**

(I) பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்புகின்ற ஏதாவதொரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். அத்துடன் பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் சகல வினாத்தாள்களிலும் உள்ள வினாக்களுக்கு ஒரு மொழியிலேயே பதிலளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகளினால் தத்தமது விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தினை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது. எல்லா பரீட்சார்த்திகளும் இவ்விரு வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

(II) இணையவழி (online) பரீட்சை விண்ணப்பப் படிவம் ஆங்கில மொழியில் மட்டுமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரர் இணையவழியாக சமர்ப்பிக்கும் மென்பிரதி விண்ணப்பம் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அல்லது ஏற்றுக்கொள்ளப்படவில்லை என விண்ணப்பதாரர் முறைமைக்குள் பிரவேசிக்கப் பயன்படுத்தப்பட்ட கைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் (Email) மூலமாகவோ அறிவிக்கப்படும். இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப் பட்ட பொது வழிகாட்டல் நெறிமுறைகளை (Common Instructions) பதிவிறக்கம் செய்து, அதில் உள்ள வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியை பெற்ற பிறகு அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்படாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் எந்தவொரு அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

(III) பரீட்சைக் கட்டணம் ரூபா 1200.00 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது இணையவழித் தொகுதியின் ஊடாக வழங்கப்படும் பின்வரும் கட்டணங்களைச் செலுத்தும் முறைமையின் கீழ் மாத்திரம் கொடுப்பனவு இடம்பெறுதல் வேண்டும்.

i. ஏதேனும் வங்கி கடன் அட்டை மூலம் ( Any Bank Credit Cards)
ii. ஏதேனும் வங்கி பற்று அட்டை மூலம் (Any Bank Debit Cards)
iii. இலங்கை வங்கி இணையவழி வங்கி முறை (Bank of Ceylon Online Banking Method)
iv. ஏதேனும் இலங்கை வங்கிக் கிளை மூலம் (Bank of Ceylon Teller Slip Payment)

**குறிப்பு :** மேற்படி முறைகள் மூலம் கொடுப்பனவினை மேற்கொள்ள முடியும் என்பதுடன் அவை தொடர்பான அறிவுரைகள் இணையத்தளத்தின் பரீட்சைக்குரிய தொழிநுட்ப ஆலோசனை என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

IV. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டதாக குறுந்தகவல் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக்கான முழுத் தொகையையும் செலுத்த வேண்டும் என்பதோடு, பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்டிருப்பின் விண்ணப் பப்படிவம் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கட்டண முறைமையின் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் கோளாறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்புக் கூறமாட்டாது.

V. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை எந்தவொரு காரணத்திற்காகவும் மீளளிக்கப்பட மாட்டாது, அத்துடன் மற்றொரு பரீட்சைக்காக மாற்றப்படவும் மாட்டாது.

VI. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் நிறுவனத் தலைவரினாலோ அல்லது அவரால் அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தரி னாலோ சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு: பரீட்சை அனுமதி அட்டை இன்றி பரீட்சை மண்டபத்திற்கு நுழைவதற்கு இடமளிக்கப் படமாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் திகதியில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது பதவிக்கான தகைமையை பூர்த்தி செய்துள்ளார் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படலாகாது.

VII. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரம் விண்ணபித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லை, விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு முறையாக இணையவழி மூலம் அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரம் இணையவழி ஊடாக மாத்திரம் அனுப்பப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது பற்றிய அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும். பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின், நிறுவனம் சார் பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணபதாரியினால் தான் தோற்றவுள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், மற்றும் முகவரி என்பனவற்றை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்விபரங்களை உள்ளடக்கிய கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரித்தல் மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தம் வசம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதியினையும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும் தயாராக வைத்திருப்பது பிரயோசனமாகும். அனுமதி அட்டையினைப் பரிசோதித்துப் பார்த்து திருத்தங்கள் ஏதும் இருப்பின் நேர காலத்துடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தை அழைத்து விண்ணப்பப்படிவத்துக்கமைய குறித்த திருத்தங்களைச் செய்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் திருத்தம் தொடர்பாக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

VIII. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத் தின்படி, பரீட்சையை காலந் தாழ்த்துவதற்கு அல்லது இரத்துச் செய்யவதற்கான அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

IX. பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கு பரீட்சார்த்திகள் கடமைப்பட்டுள்ளனர். அவ் ஒழுங்கு விதிகளை மீறுமிடத்து, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படவேண்டி ஏற்படும்.

X. பரீட்சார்த்திகள் பரீட்சை நிலைய மேற்பார்வை யாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடை யாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை.
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் எதையும் அணிந் துள்ளனரா என அவதானிக்கக்கூடிய வகையில் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்ட பத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசித்தது முதல் பரீட்சை நிறைவு பெற்று வெளியேறும் வரை முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

XI. **பெறுபேறுகளை வெளியிடல் :** எழுத்துமூல பரீட் சையில் ஒவ்வொரு பாடத்துக்கும் 40% வீதத்திற்கு குறையாமலும் மற்றும் முழுமொத்த பரீட்சையினதும் புள்ளிகளின் எண்ணிக்கையின் 50% அல்லது

அதற்கு அதிகமாகவும் புள்ளிகள் பெற்ற பரீட்சார்த்திகளை தேர்ந்தெடுத்து அவர்களின் அப்புள்ளிகளின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப திறமை அடிப்படையில் நிரப்ப எதிர்பார்க்கப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கு சமனான பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட முன்னுரிமை பட்டியல் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அனுப்புவது அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடுவதும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ் அறிவித்தலில் மொழி ரீதியான பதங்களுக்கிடையில் ஏதேனும் பொருத்தமற்ற தன்மை அல்லது இணக்கமின்மைகள் இருப்பதாக கண்டால், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி அறிவித்தலின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

2025, நவெம்பர் 03.

11-132/2

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.-*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

### அட்டவணை - 2025

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 07.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.10.2025 |
| | | வெள்ளி | 14.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.10.2025 |
| | | வெள்ளி | 21.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.11.2025 |
| | | வெள்ளி | 28.11.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.11.2025 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 05.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.11.2025 |
| | | வெள்ளி | 12.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.11.2025 |
| | | வெள்ளி | 19.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.12.2025 |
| | | வெள்ளி | 26.12.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.12.2025 |

### அட்டவணை - 2026

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 02.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.12.2025 |
| | | வெள்ளி | 09.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.12.2025 |
| | | வெள்ளி | 16.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.01.2026 |
| | | வெள்ளி | 23.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.01.2026 |
| | | வெள்ளி | 30.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.01.2026 |

**எஸ். டீ. பாண்டிகோரால,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*